
பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 01 15 ஏப்ரல் 2017 விதி : 44



கொல்வதற்கு
ஒரு கோலம்



தமயந்தி ரீச்சரின்
கண்ணீர்



கொலையுதிர்கால
தீர்ப்புகள்



ரெலோ - புலிகள்
மோதல்

## அன்னை இட்ட தீ!



'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர்கதை

# ஆறாவடு

43

■ சயந்தன்

"வீட்டுக்குப் போய் அறிவிச்ச பிறகு ஆள் நேரே கிளிநொச்சியில காவல்துறையிட்ட போயிருக்கிறார். முதலே காவல்துறைக்கு விபரங்கள் போயிட்டுதுதானே. அவையள் என்ன ஏதென்று விசாரிச்சிருக்கினம். நீங்களும் தன்னை லவ் பண்ணுறதா சொன்னவராம். காவல்துறை ஆதாரமேதும் இருக்கோ என்று கேட்டிருக்கு. பிறகு நீங்கள் மாட்டனென்று சொன்னது, அவர் சொறிச் சேட்டை விட்டது. எல்லாத்தையும் சொல்லி எச்சரிச்சிருக்கு. ஆள் பயந்திட்டார். காவல்துறை 'பைன்' கட்டவேணும் எண்டதாம். இவர் எவ்வளவு என்று கேட்டிருக்கிறார். முந்நூற்று அறுபத்தைந்து ரூபா என்றிருக்கிறார்கள். ஐநூறு ரூபாயை எடுத்துக் கொடுத்துவிட்டு மைனர் மாதிரி நின்றிருக்கிறார். காவல்துறை அதை திருப்பிக் கொடுத்துவிட்டு ஒரு ரூபாய் தரச் சொல்லியிருக்கிறது. முதலில இவருக்கு ஒன்றும் பிடிபடவில்லையாம். ஒவ்வொருநாளும் ஒவ்வொருரூபாய் கொண்டுவந்து தரச் சொல்லியிருக்கிறார்கள். இதுவரைக்கும் ஏழு எட்டு ரூபாய்களை செலுத்தியிருப்பர்."

அகிலாவுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. அவள் சுற்றிவர ஆட்கள் நிற்பதையும் மறந்து சிரித்தபடியிருந்தாள். இரண்டொரு பேர் அவளைப் பார்த்து முகத்தை கேள்விக்கு குறியாக்கியபடி கடந்து சென்றார்.

" உங்கடை ஊரில இருந்து கிளிநொச்சி போய் வர எவ்வளவு நேரம் எடுக்கும்?"

"காலையில போனால் வரப் பின்னேரமாகும்" என்ற போது தான் தண்டனையின் வீரியம் என்ன என்பது அவளுக்குப் புரிந்து சிரிப்பழிந்தது.

அமுதன் மீது இன்னதெனச் சொல்ல முடியாத உணர்வொன்று தோன்றிற்று. அமுதன் மெலிதாகச் சிரித்தான். அப்பொழுது அவனிலும் அவ்வுணர்வு தொற்றியிருந்தது.

தொடர்ந்த நாள்களில் அவர்கள் ஒருசில கடிதங்களையும் புகைப் படங்களையும் பரிமாறியிருந்தார்கள். பச்சை நிற வரிச் சீருடையில் நெஞ்சில் ஹோல்சர் கட்டி துப்பாக்கியை நெஞ்சோடு அணைத்தபடி நின்ற படங்களை அமுதன் கொடுத்திருந்தான். அகிலாவின் சேலையுடுத்திய படங்கள் ஒன்றிரண்டைக் கேட்டு வாங்கினான். கடிதங்களில்தான் அதிகம் பேசிக்கொள்ள முடிந்தது.

இயக்கத்தில் நீண்டகாலமாக இருந்தது விட்ட படியால் திருமணம் செய்துகொள்வதில் தடையேதும் இருக்கப்போவதில்லையென்றும், விரைவில் தனது காதல் குறித்து இயக்கத்துக்கு அறிவிப்பதாகவும் அமுதன் எழுதியிருந்தான்.

திருமணத்தின் பின்னும் தொடர்ந்தும் இயக்கத்திலேயே இருக்கப்போவதாகவும் அதற்கு உமக்குச் சம்மதமோ என்றும் ஒருநாள் அகிலாவிடம் அமுதன் கேட்டான். அவள் முகத்தைப் பிரகாசமாக்கி "ஓம்... அது தானே எனக்கும் பெருமை" என்று சிரித்தாள்.

● ● ●

கடந்த ஒரு வாரமாக நீண்ட தூரம் பயணம் செய்வதும், சில ஏற்பாடுகள் சரிவராது மீளத் திரும்புவதுமாகக் காலம் கழிந்தது. சுயஸினைத் தாண்டுவதற்கான ஏற்பாடுகளை எகிப்தைச் சேர்ந்த அதிகாரியொருவன் கவனித்துக் கொள்வதாக இருந்தது. அதற்கான ஒழுங்குகளை ஏஜென்சி முன்னரேயே செய்திருந்தான். ஓட்டிகளுக்கு டயலொக் துராய தொலைபேசியொன்றை அவன் வழங்கியிருந்தான். ஒரு பொலித்தீன் பையினால் சுற்றப்பட்டு கீழறையில் அது மாட்டுப்பட்டிருந்தது. ஓட்டிகள் அதனை மிகக் கட்டுப்பாடாகப் பயன்படுத்தினர். சின்னப்பெடியனின் உடலைக் கடலில் வீசிய அன்றைக்கு அவனது டயரியிலிருந்த தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்க இவன் விரும்பியிருந்தான். அப்பொழுது "இந்தப் பயணத்தில் இப்பொழுது அது முக்கியமற்றது" என்று ஓட்டிகள் மறுத்திருந்தார்கள். அவர்களும் கூட தமது செய்திகளை ஒன்றிரண்டு வார்த்தைகளுள் எப்போதும் அடக்கியிருந்தார்கள். " கம்மிங் " "வெயிட்டிங்" என்ற வார்த்தைகளை விட வேறெதுவும் பேசினார்கள் இல்லை.

அப்படியொரு மாலை அவர்களது அழைப்பிற்குப் பதில் இல்லாமல் போனது. இரண்டாவது தடவை முயற்சித்துக் கிடைக்காத போதும் ஓட்டிகள் பெரிதாய் கலவரப்பட்டிருக்கவில்லை. ஆனால் அன்றைக்கு இரவு முழுவதும், அடுத்தநாள் காலையுமாக அது தொடர்ந்துகொண்டிருக்க அவர்கள் பதற்றப் படத் தொடங்கினார்கள்.

இரண்டு நாட்களாகப் பேய் மழை பெய்தது. கடலும் வானமும் தமது நீல நிறத்தைத் தொலைத்திருந்தன. கரிய மேகங்கள் அச்சம் தருகிற பிசாசுகளின் உருவங்களாக அலைந்தன. எங்கோ வெகு தூரத்தில் மேகம் யானையின் தும்பிக்கையைப் போல கீழிறங்கிக் கடலைத் தொட்டிருந்ததை இவன் கண்டான். அப்பொழுது மாமாவின் நினைவு வந்தது. இதே மாதிரியான நீர்ச்சுழலொன்றை பொன்னாலைப் பாலத்தில் வைத்து இவன் கண்டான். அப்பொழுது காரைநகரில் வாங்கிய பின்னேர முரல் மீன்களை ஒரு பையில் சுமந்தபடி மாமாவின் சைக்கிளில் இருந்தான்.

தூரத்தே கடலின் முடிவிடத்தில் கருமேகம் ஒரு லவுட் ஸ்பீக்கரில் குழாயைப்போல மேலிருந்து கீழொடுங்கியிருந்தது. மாமா சைக்கிளை நிறுத்தி "அங்கை பாரடா மேகம் தண்ணி குடிக்குது " என்று அதனைக் காட்டினார். இவன் ஆச்சரியத்தில் விரிந்த கண்களோடு பார்த்தான்.

" இஞ்சையிருந்து பார்த்தால் கண்ணுக்குத் தெரியாது. ஆனால் இப்ப மேகம் தண்ணியை உறிஞ்சி மேலே இழுக்கும்."

"அங்கை நிக்கிற மீன்கள்?" என்று இவன் கேட்டிருந்தான்.

" அதுகளும் தான்...."

"மீன் பிடிக்கப்போற மனிசர் ?"

"அவையளையும் தான்..."

● ● ●

சற்று நாட்களாகவே மனச்சோர்வோன்று என்னை அழுத்தியபடியிருந்தது. வெளியே வேலைகளும் அதிகமாயிருந்த படியால் உடலும் சோர்வுற்றிருந்தது. வெளிநாடுகளிருந்து வருகிற இளைஞர்களுக்கு ஒரு குறையும் வைக்காமல் கவனிக்கச் சொல்லி அறிவுறுத்தப்பட்டிருந்தது. காலையில் அந்தப் பணிகளை ஆரம்பித்தால் முடிந்து வரும் போது பத்துப் பதினொரு மணியாகியது. இரவிலும் நித்திரை வருவதில்லை. தொடர் யோசனைகள்.

அகிலாவைக் காதலிப்பதாக விசாரிக்க வந்தவரிடம் சொல்லி விட்டேன். அதனை முறையான அறிவிப்பாக இயக்கம் கருதிக்கொள்ளும். நான் சொல்லி முடிக்கும் வரை ஆர்வத்தோடு கதை கேட்கும் முகபாவனையுடன் அவர் அமைதியாயிருந்தார். அவ்வப்போது புன்னகைத்துக் கொண்டார். கடைசியாக "சினிமாப் படம் போலவே காதலிக்கிறீங்கள் இப்பவெல்லாம்" என்றார்.

"நான் இயக்கத்தில சேர்ந்தும் பத்துப்பன்னிரண்டு வருடமாகுது. இதில தடையேதும் இருக்காது. என்று நினைக்கிறேன். அவவுக்கு படிப்பு முடிய ரண்டு வருடம் இருக்கு." அதுக்குப் பிறகு தான்..." என்று இழுத்து முடித்த போது அவர் என் தோளில் ஆதரவாகத் தட்டினார்.

(வலிகள் இன்னும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை இட்ட தீ!




■ தமிழரசன்

பத்துப் பிள்ளைகளின் தாயாக இருந்த பூபதி பின்னர் அன்னை பூபதியாக அவதாரம் எடுத்து ஈழத் தமிழரின் தாயாகி மரணத்தை அரவணைத்தார். அன்னை பூபதி. நெஞ்சில் பற்றி எரியும் இலட்சிய நெருப்புடன் உணவை ஒறுத்து, நீரை மட்டுமே அருந்தி ஒன்றல்ல, இரண்டல்ல 31 நாள்கள் மெல்ல மெல்ல தன்னை பட்டினித் தீயில் எரித்து சாவைத் தழுவியவள்.

அமைதிப் படையாக வந்த இந்திய இராணுவம் யுத்த சன்னதம் கொண்டு, தமிழர் உரிமைக்காக ஆயுதம் தூக்கிப் புலியான இளைஞர்களை தேடித் தேடி அழிக்க முயன்றது. இதனால் காடுகளை உறைவிடமாக்கிய விடுதலைப் புலிகளோ தம்மை அழிக்க முனைந்த படைகளுக்கு மரண அடி கொடுத்தனர். புலிகளை நெருங்க முடியாத இந்தியப் படைகள் தங்கள் இயலாமையைக் காட்ட அப்பாவி மக்களைப் பகடை யாக்கினர். இந்தியப் படைகளின் கொடூரங்கள் - வன்செயல்கள் - சித்திரவதைகள் - அடக்குமுறைகளால் தமிழர் தாயகத்தின் தெருவெங்கும் ஓலங்களும் - அவலக் குரல்களும் - அழுகுரல்களும் கேட்டன.

இதைப் பொறுக்க மாட்டாமல் மக்கள் சாத்வீகப் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதில் மட்டக்களப்பு - அம்பாறை அன்னையர் முன்னணி இரு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்களைத் தொடங்கியது. போர் நிறுத்தம் உடன் நடைமுறைக்கு வர வேண்டும், புலிகளுடன் பேச்சு நடத்திப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பவையே அவை. இவை எதையும் அந்நிய இந்தியப் படை காதில் வாங்கிக் கொள்ளவில்லை. மாறாக அன்னையர் முன்னணியினரை கொழும்புக்கு அழைத்து புலிகளை ஆயுதங்களை ஒப்படைக்கக் கூறுமாறு மிரட்டியது. மிரட்டலுக்கு அடிபணியாத அன்னையர் முன்னணியோ விடுதலைப் புலிகளே தமிழரின் பாதுகாவலர்கள் நீங்கள்தான் பேச்சுக்கு வரவேண்டும் எனக் கூறித் திரும்பினர்.

நிலைமையில் எந்த மாற்றமும் ஏற்படாத நிலையில் சாகும் வரையான உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட அந்த அமைப்பு முடிவு செய்தது. இந்தப் போராட்டத்தில் ஈடுபடப் பலர் முன்வரவே குலுக்கல் முறையில் சாகும் வரையிலான உண்ணாவிரதம் இருப்பவரை தெரிவு செய்வது என முடிவானது. இதன்படி அன்னம்மா டேவிட் தெரிவானார். அவர் பெப்ரவரி 16 ஆம் திகதி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை அமிர்தகழி மாமங்கேஸ்வர் கோயிலில் (மாமங்கப் பிள்ளையார்) ஆரம்பித்தார்.

அகிம்சைப் போராட்டத்தை உலகறியச் செய்தவர்கள் தாங்களே எனத் தம்மைத் தாமே பெருமையாகப் பீற்றிக் கொள்ளும் இந்தியாவால் எங்கள் அகிம்சையைப் பொறுக்க முடியவில்லை. முன்னதாக தண்ணீர் கூட அருந்தாது தியாக தீபம் திலீபன் (1987 செப்ரெம்பர் 14-26) நடத்திய உணவு ஒறுப்புப் போரின் வெம்மை தாங்காது, மானம் இழந்து உலகின் முன் நிர்வாணமாக நின்ற இந்தியா இந்தப் போராட்டத்தை நடத்தவிடாமல் செய்யப் பெரும் திட்டங்களைத் தீட்டி தடைகளைப் போட்டது. இதற்காக மிகமிகக் கீழ்த் தரமான செய்கைகளில் இறங்கிய இந்தியப் படை அன்னம்மாவின் பிள்ளைகளையும் கணவரையும் கடத்தி மிரட்டியது. தொடர்ந்து உண்ணாவிரதப் பந்தலில் இருந்து அன்னம்மாவை கடத்திச் சென்று "கட்டாயத்தின் பேரிலேயே நான் உண்ணாவிரதம் இருந்தேன்" என்று எழுதி வாங்கியது. இதன் மூலம் எங்களின் அகிம்சைப் போரை அவமானப்படுத்த முனைந்தது.

இந்த நிலையில்தான் ஈழத்தின் பிள்ளைகள் எல்லோருக்காகவும் தன்னை ஆகுதியாக்க முன்வந்தாள் அன்னை பூபதி. "யாருடைய கட்டாயத்தின் பேரிலும் நான் உண்ணாவிரதம் இருக்கவில்லை. நான் மயக்கமடைந்தாலோ சுயநினைவை இழந்தாலோ எனது கணவரோ அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் சேர்ப்பிக்கக்கூடாது." என்று கடிதம் எழுதி வைத்துவிட்டு, மார்ச் 19 ஆம் நாள் அன்னம்மா டேவிட் வேள்வி வளர்த்த இடத்திலேயே தனது வேள்வித் தீயை மூட்டினாள். அந்த வேள்வித் தீயின் வெம்மையை இந்திய வல்லாதிக்காரர்களால் தாங்க முடிய வில்லை. சாம, தான, தண்ட, பேதங்களை கையாண்டது ஆனாலும் அன்னையின் போராட்டத்தை அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

மகாத்மா என்றும் அகிம்சா மூர்த்தி என்றும் காந்தியைக் கொண்டாடும் இந்தியர்கள் தங்கள் நாட்டின் தேசபிதாவாகவும் அவரேயே இன்றும் போற்றுகின்றனர். அவரின் அகிம்சைப் போராட்டமே தங்களுக்கு பிரித்தானியர்களிடம் இருந்து சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தது என்று கூறுகிறார்கள். அந்த காந்தியின் வழி வந்தவர்களால் எங்கள் அண்ணன் திலீபன், தாய் பூபதி தொடுத்த அகிம்சைப் போரை சகிக்க முடியவில்லை. மாறாக இந்தியர்களுக்கு பிரித்தானியர்கள் இழைத்த கொடுமைகள் - கொடூரங்களையும் விடப் பல மடங்கு அதிகமான கொடூரங்களையும் - அகிம்சைப் போராட்டம் நடத்தியோ ருக்கு எதிராகவும் மக்கள் மீதும் கட்டவிழ்த்து விட்டனர். தன் பிள்ளைகளின் நல் வாழ்வே தன் வாழ்வு என எண்ணி தியாகத் தீயில் இறங்கிய அன்னையை அந்தத் துரும்பர்களால் என்ன செய்யமுடியும். முயன்று பார்த்தார்கள் முடியவில்லை.

அன்னையின் அகிம்சைப் போராட்டத்தின் சக்தி நாளுக்கு நாள் பெருகவே, காந்தியின் குரங்கு பொம்மைகள் போன்று கண், காது, வாய் பொத்தி எதுவும் தெரியாதவர்களாக நின்றார்கள் அந்தக் கயவர்கள். 31 நாள்கள் தன்னை எரித்த அந்தத் தாய் ஏப்ரல் 19 ஆம் நாள் ஈழத் தமிழரின் விடிவுக்காக தன்னை ஆகுதியாக்கினாள். உலகின் முன் மீண்டும் அம்மணமாக நின்றது இந்தியா. ஆனால் அதற்குத்தான் கூச்சம் - வெட்கம் - முதுகெலும்பு எதுவும் இல்லையே. பத்துப் பிள்ளைகளின் அன்னை ஈழத்தமிழரின் தாயாகி இறந்தவளின் இறுதிக்கிரியைகளைக்கூட செய்யவிடாது தடுக்க ஊரடங்கு சட்டம் போட்டது. அன்னை இட்ட புரட்சித் தீ அணைந்து விடுமா? என்ன அன்னையின் போராட்டத்தால் எழுச்சி கண்ட மக்கள் சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

இதன் பின்னர் போரில் எழுச்சி கண்டனர் புலிகள். இந்தியாவின் கர்வத்தை அடக்கினர். புலிகளுடனான போரில் வீரமிழந்து கோழைகளாக உலகின் முன்னால் அவமானப்பட்டுப் பின்னர் நாடு திரும்பின இந்தியப் படைகள். தமிழர் தாயகம் மீண்டும் புலிகள் வசமாகின. தலைவர் பிரபாகரன் அன்னை பூபதியின் தியாகத்தை மதித்து

(19ஆம் பக்கம் பார்க்க)

## யார் இந்த அன்னை பூபதி?



அன்னை பூபதி என உலகினரால் அறியப்பட்டவரின் முழுப்பெயர் கணபதிப்பிள்ளை பூபதி. மட்டக்களப்பு - கிரான் என்ற ஊரில் 1932 நவம்பர் 3 ஆம் திகதி பிறந்தவர். திருமணத்தின் பின்னர் நாவற்கேணி என்ற ஊரில் வசித்தவர்.

விடுதலைப் புலிகள் போராட்ட அமைப்பாக இயங்க ஆரம்பித்த நாள்களில் நாவற்கேணி கிராமம் அவர்களின் மறைவிடங்களில் முக்கியமாக இருந்தது. அச்சமயத்தில் விடுதலைப் புலி வீரர்களுக்கு உணவு, பாதுகாப்பு அளித்தவர்களில் பூபதியம்மாவும் ஒருவர்.

பூபதியம்மாவுக்கு 10 பிள்ளைகள். இவர்களில் இருவரை இராணுவம் பிடித்துச் சென்றது. இவர்கள் பற்றிய தகவல் பின்னர் கிடைக்கவில்லை. ஒரு மகன் 1990 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பில் கண்ணதாசன் என்ற பெயரில் தன்னை போராளியாக இணைத்துக் கொண்டார். ஏனையோர் திருமண பந்தத்தில் இணைந்திருந்தனர்.

மட்டக்களப்பு - அம்பாறை அன்னையர் முன்னணி அமைப்பின் முக்கிய உறுப்பினரான இவர், அமைப்பால் முன்னெடுக்கப்பட்ட அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதுடன் பல உதவிகளையும் வழங்கியவர். அன்னையர் முன்னணி நடத்திய உணவு ஒறுப்புப் போராட்டத்தை இந்திய - இலங்கை அரசுகளின் மிரட்டல்கள் - அச்சுறுத்தல்களால் குழம்ப, 1988 மார்ச் 19 ஆம் நாள் தொடக்கம் உணவைத் தவிர்த்து தண்ணீரை மட்டும் அருந்தி போராட்டத்தில் ஈடுபட்டார். இவரது கோரிக்கைகளை இந்திய அரசு ஏற்கவில்லை. சரியாக ஒரு மாதம் கழித்து 1988 ஏப்ரல் 19 ஆம் நாள் மரணத்தைத் தழு[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை

## 1 சிம்பு ரசிகரா மணிரத்தினம்



மணிரத்தினம் சிம்பு ரசிகர் ஆகிட்டாரோ என்று சமூக வலைத்தளங்களில் கேள்வியை எழுப்பியுள்ளனர். காரணம் வேறொன்றும் இல்லை. அவரின் இயக்கத்தில் வந்த காற்று வெளியிடை திரைப்படம்தான்.

அலைபாயுதே, ரோஜா, பம்பாய் படங்களின் கதைகளை கலக்கி அவற்றையும் விட மிக மோசமாக காற்று வெளியிடை படத்தின் கதையை சொல்லியிருக்கிறார் மணிரத்தினம்.

இதனால்தான் "அரைத்த மாவை அரைக்கிறார்", "மணிரத்தினம் சிம்பு ரசிகர் ஆகிட்டாரா?", "படம் பார்த்த நாம் என்ன பாவம் பண்ணினோமோ?" என்று பதிவுகளைப் போட்டு கலாய்த்துத் தள்ளியிருக்கிறார்கள்.

பொதுவாக மணிரத்தினம் படம் என்றாலே சற்று யோசித்துத்தான் படம் பார்க்க ரசிகர்கள் செல்வார்கள். பதிவுகளைப் பார்த்தால் இனித் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டார்கள் போல....

## 2 நிர்வாணம் ஏற்படுத்திய மாற்றம்

இந்திய தலைநகர் டில்லியில் தமிழக விவசாயிகள் நடத்திய நிர்வாணப் போராட்டம் பற்றி பலரும் சமூகவலைத்தளங்களில் கருத்துக்களைத் தட்டிவிட்டிருக்கின்றனர்.

கிட்டத்தட்ட ஒரு மாத காலமாக டில்லியில் நடத்திவரும் போராட்டத்தைப் பெரும்பாலானவர்கள் - சமூக வலைதளப் பதிவர்களும்தான் கண்டுகொள்ளவில்லை. ஊடகங்கள்கூட அவர்களை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. அப்படியானால் அரசியல்வாதிகள்...? அதைச் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை.

இந்நிலையில்தான் உடலில் ஒட்டுத்துணிகூட இன்றி விவசாயிகள் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். இதன்பிறகுதான் ஊடகங்களும், முகப்புத்தகப் போராளிகளும் பொங்கி எழுந்து பேசத் தொடங்கியுள்ளனர்.

விவசாயிகளின் நிர்வாணப் போராட்டம் கண்டு முகப் புத்தகத்தில் பலரும் அழுது தள்ளியிருக் கிறார்கள். அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றும் குரல்களும் வலுப்பட்டுள்ளன.



## 3 பேஸ்புக் குற்றங்கள்



பேஸ்புக்கைப் பயன்படுத்தி குற்றங்களில் ஈடுபடுவோர் இலங்கையில் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகின்றனர். கூடவே அவமானத்தால் ஏற்படும் மரணங்களும்தான். இந்நிலையில் பேஸ்புக் கைப் பயன்படுத்தி நடக்கும் பாலியல் - இன்ன பிற குற்றங்களும் பெருகிக்கொண்டுதான் இருக்கின்றன.

அண்மையில் பேஸ்புக்கில் சிலரின் பதிவுகளால் நொந்துபோன கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் தற்கொலை செய்துகொண்டார். சாகும் முன் அவர் அதுபற்றி பேஸ்புக்கில் வீடியோ ஒன்றையும் பதிவேற்றியிருந்தார்.

இந்நிலையில் சிறிதரன் எம்.பியின் நெருங்கிய சகாவான வேழமாலிகிதன் கடிதம் ஒன்றுக்காக பாலியல் லஞ்சம் கேட்டு பேஸ்புக்கில் சட்டிங் செய்தமை வெளியாகியிருக்கிறது. ஆனால் அதனை மோசடி என்று வேழமாலிகிதன் மறுத்துள்ளார்.

இப்படிப் பெருகும் குற்றங்கள் குறித்து சமூக வலைதளப் பதிவர்கள் பல பதிவுகளை இட்டுள்ளனர்.

ஆனால் இதுவிடயத்தில் கவனம் எடுக்கவேண்டிய சைபர் க்ரைம் பொலிஸ் இருக்கிறதா? இல்லையா? எனத் தெரியாத நிலையில் உள்ளது. ஒருவேளை ஜனாதிபதிக்கு அவமரியாதை செய்தால் மட்டும்தான் பிடிப்பார்களோ என்னமோ?

## சுவரில் கொய்தவை

**Jey Mayu**

கௌரவமாக வாழவேண்டிய விவசாயி நிர்வாணப் போராட்டம் நடத்துறான்.

கள்ளனெல்லாம் கோர்ட் சூட்டோட சுத்துறான்

---

**Appu Piratheepan**

விவசாயிகளை மதிக்காத எந்தவொரு அதிகாரத் தலைமையும் அதிக நாள்கள் நாட்டை ஆள முடியாது.
ஏர்கலப்பை என்பது உழவு செய்ய மட்டுமில்லை. அதுவொரு ஆயுதமும் கூட!

---

**Vasan ST**

// உலகிலே ஆண்கள் கையால் சமைக்கும் உணவிற்கே சுவை அதிகம் // # ஆய்வு


இந்த விசயம் கடுகளவு வெளியே கசிஞ்சா கூட நம்ம உசிருக்கு ஆபத்து!

---

**Sivaskanthasri Srikantharajah** was thinking about Sri Lankan criminal procedure code.
4 hrs · Jaffna

மரண தண்டனையை விட
கொடுமையான தண்டனை
மௌன தண்டனை....

## இந்தவார மீம் (Meme)













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com

## அப்படியும் இப்படியும்

இந்த வருடத்தின் மூன்றாவது புதுவருட வாழ்த்துக்கள் அனைவருக்கும். ஒரே வருடத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட புதுவருடங்களைக் கொண்டாடும் இனமாக தமிழர்கள் மட்டுமே இருப்பார்கள். ஜனவரி முதலாம் திகதி ஆங்கிலப் புத்தாண்டையும், தைப்பொங்கலையும், சித்திரைப் புத்தாண்டையும் பெருமனதோடு கொண்டாடி மகிழ்பவர்கள் நாம். இந்த வரிசையில் இப்போது சித்திரைப் புத்தாண்டு.

தமிழ்–சிங்கள மக்கள் ஒரே சமயத்தில் கொண்டாடும் பண்டிகையாக இருப்பதால் இலங்கையில் சித்திரைப் புத்தாண்டு முக்கியமான விசேட தினமாகக் கருதப்படுகின்றது. வழக்கமாக ஏதும் பண்டிகைகளுக்கு அரசு விடுமுறை வழங்குவதாயின் , குறித்த பண்டிகையைக் கொண்டாடும் தினத்தன்று மாத்திரமே அந்த விடுமுறையை வழங்கும். ஆனால் சித்திரைப் புத்தாண்டின் கதையோ வேறு. புதுவருடத்துக்கு முதல் நாளும், வருடப்பிறப்பன்றும் விடுமுறையை அளிப்பதன் மூலம் இலங்கையின் முக்கியமான தினமாக சித்திரைப் புதுவருடம் குறிப்பால் உணர்த்தப்படுகின்றது.அத்துடன் வழக்கமாக ஒவ்வொரு மாத முடிவிலும் சம்பளத்தைப் பெறும் அரச ஊழியர்கள் அனைவருக்கும் அந்த மாதம் மட்டும் அவர்களின் வேதனம் மாதத்தின் முதல் வாரத்திலேயே வழங்கப்பட்டு பண்டிகையினை சிறப்பாகக் கொண்டாட வலிந்த நிதிவளமும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது. அரச வங்கிகளில் சித்திரைப் புதுவருடத்தையொட்டி கைவிசேடம், பரிசுகள் என்ற அமர்க்களங்கள். இப்படியாக இலங்கையின் அதியுச்ச கொண்டாட்டமான சித்திரைப் புத்தாண்டு இந்தமுறை சோபையிழந்து போய்விட்டது.காரணம், சுமக்கவே முடியாத பொருளாதாரச் சிக்கல்தான்.

நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வரும் போது , மஹிந்த ஆட்சியாளர்கள் நாட்டின் பணத்தைக் கொள்ளையடித்ததாலேயே, மலிவாகக் கிடைக்கவேண்டிய பொருள்களெல்லாம் கொள்ளை விலையில் கொடுக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது. வந்தவேகத்தில் பெரும்பாலான பொருள்கள் மலிவு விலையிலும் வழங்கப்பட்டன. ஆனால் சிறிது காலத்திலேயே பழைய குருடி கதவைத் திறந்துவிட்டாள். இந்தக் கதவு திறப்பில் மஹிந்த காலத்தைக் காட்டிலும் இன்னும் உச்சாணிக் கொம்பில் விலைவாசி ஏறி உட்கார்ந்து கொண்டு, இறங்கமாட்டேன் என்று அடம் பிடிக்கிறது.

வாழ்க்கைச் செலவீன அதிகரிப்பால் மக்களின் பொருள் நுகர்வுசக்தி வீழ்ச்சியடையத் தொடங்கிவிட்டது. அதன் பிரதி பலிப்பாகவே இந்தமுறை புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் களையிழந்தன. முன்னைய வருடங்களைக் காட்டிலும் 40 சதவீதத்தால் மக்களின் பொருட்கொள்வனவு வீழ்ச்சி கண்டிருக்கிறது. எவ்வளவுதான் காசு வந்தாலும் அடுத்த நொடியே மாயமாகக் கரைந்துவிடும் விலைவாசியைக் கொண்ட நாட்டில், புத்தாண்டு வந்தாலென்ன, போனாலென்ன என்ற விரக்தியே இப்படியான நிலையைத் தோற்றுவித்துள்ளது.

இப்படி புத்தாண்டை கொண்டாட இயலாத அளவுக்கு மக்களின் பொருளாதாரம் பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில், ஒரு சிலர் இன்னும் மிஞ்சுகின்ற சந்தனத்தை எங்கெல்லாமோ பூசிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இப்போதெல்லாம் திருமணம் என்றாலே ஜொலிக்கும் மண்டபங்களும், பளிச்சிடும் கமெராக்களும், பளபளக்கும் நகைகளும், வீதியில் வழுக்கியபடி செல்லும் உயர்ரகக் கார்களும் என்று பல லட்சங்களை கரைப்பது வாடிக்கையாகிவிட்டது. அத்தோடு சாதாரண விழாக்களை கூட ஷங்கர் படம் போல பிரமாண்டமாக எப்படிச் செய்யாலாம் என்றும் சிலர் 'றூம்' போட்டு யோசிக்கிறார்கள். கடந்தவாரம் ஏழாலையில் அந்தணர் ஒருவரின் பூணூல் சடங்குக்காக அநுராதபுரத்தில் இருந்து யானையை வரவழைத்துக் கொண்டாடியிருக்கிறார்கள். ஒருபக்கம் புத்தாண்டையே கொண்டாட முடியாத மக்களும், இன்னொரு பக்கம் இப்படி யானைக்கு காசைக் கரைப்பவர்களுமாக பல விநோதங்களை சந்திக்கும் நாட்டில் வாழும் பேறுபெற்றவர்கள் நாம்.

யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!



# நீதியை மறுத்தல்

**வர்சி**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் ஆளும் தரப்பால் கண்டு கொள்ளப்படாத அல்லது கண்டும் உறுதி மொழிகள் எதுவும் வழங்கப்படாதநிலையில் இன்னும் தொடர்கிறது.

அவர்களுடன் ஆற அமர இருந்து பேசினால் அவர்களின் பிள்ளைகள், கணவன்மார்,உடன் பிறப்புகள் எவ்வாறு காணமற்போயினர் என்பதனை விலாவாரியாக எடுத்துரைப்பார்கள். தங்கள் உறவுகளை கண்டுபிடிக்க யாரை விசாரிக்க வேண்டும் என்று வழிகூடச் சொல்வார்கள். அதன்படி விசாரித்து இன்னும் கண்ணீரில் உழலும் அவர்களின் வாழ்வுக்கு ஒரு அர்த்தத்தை வழங்கவும் முடியும். ஆனால் இதனைச் செய்வதற்கு ஆளும் தரப்பும் தயாரில்லை. இந்தப் பாவப்பட்ட மக்களால் பாராளுமன்றத்துக்கு அனுப்பப்பட்ட தமிழ்த் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களும் தயாரில்லை.

அப்படியென்றால் இவர்களின் பிரச்சினைக்கு தீர்வுதான் என்ன?விடைதெரியாமல் கண்ணீரும் கம்பலையுமாக திரிகின்றனர் இவர்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளில் ஒருபகுதியினர் வயது முதிர்ந்த நிலையில் உள்ளனர். தள்ளாத வயதில் தங்கள் உறவுகளை மீட்கப் போராடும் இவர்கள் கொஞ்சநாள்களில் ஆயுள் முடிந்து 'அடக்காமானவுடன்' இந்த விவகாரமும் அடங்கிப் போய்விடும் என அரசு எண்ணுகிறதோ தெரியவில்லை.

இப்போதைய நல்லாட்சி அரசு , கட்சி ரீதியாக பல முரண்பாடுகளைச் சந்தித்து தொங்குநிலையில் பிரச்சினைகளை வைத்துக்கொண்டாலும் தமிழ் மக்களின் விடயங்களில் முன்னரே பேரினவாதிகள் வகுத்த அதே பாதையிலேயே உறுதியாகச் செயற்படுவது தெளிவாகத்தெரிகிறது. ஆனால் தமிழர்களாகிய நாங்கள்தான் அன்று தொடக்கம் இன்றுவரை அரசை நம்பி நம்பி ஏமாந்து போகும் கதையே தொடர்கிறது. தற்போதும் கூட அரசின் அமைச்சர்கள் - குறிப்பாக சம்பிக்க ரணவக்க,ராஜித சேனாரத்ன போன்றோர்- "போர்க்குற்றம் என்று எதுவுமே இடம்பெறவில்லை" என்கின்றனர்.அப்படியென்றால் இந்த நாட்டில் போரே இடம்பெறவில்லை என்று கூட இந்த அரசாங்கம் சொன்னாலும் ஆச்சரியப்படுவதில்லை. "போர் இடம்பெற்றால்தானே போர்க்குற்றம் இடம்பெறும். போர் இடம்பெறாத நிலையில் எப்படி போர்க்குற்றம் இடம்பெறும்?" என்று இந்த அரசின் அமைச்சர்கள் சொல்லமாட்டார்கள் என்று எந்த நிச்சயமும் இல்லை.ஏனெனில் இது நல்லாட்சி அரசாங்கம். சிங்கள மக்களின் பார்வையிலும், சர்வதேசத்தின் பார்வையிலும் மகிந்த எனும் சர்வதிகாரியிடமிருந்து இந்த நாட்டை மீட்டு விடிவைக் கொடுத்தது இந்த நல்லாட்சி அரசே. எனவே அப்படிப்பட்ட அரசு சொல்வதைத்தானே சர்வதேசம் ஏற்கும்.

ஐ.நாவுடன் இணைந்து ஏற்படுத்திக்கொண்ட விடயங்களையே நடைமுறைப்படுத்தாமல் பம்மாத்து விட்டு சில வருடங்கள் சர்வதேசத்தையே பேய்க்காட்டியிருக்கிறது. அப்படி சர்வதேச அரங்கொன்றில் பலநாட்டுப் பிரதிநிதிகளுக்கு முன்னால் கொடுத்த வாக்குறுதியையே அசட்டை செய்த நல்லாட்சி அரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்று, முன்னர் சொல்லப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த மேலும் இரண்டுவருட கால அவகாசத்தை ஐ.நா இலங்கைக்கு வழங்கியுள்ளது . இந்த இரண்டு வருட கால அவகாசத்திலும் அது அளித்த உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துமா என்பதுவும் தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகத்தையே தோற்றுவித்துள்ளது.ஏனெனில் தமிழர்கள் எப்போதுமே அரசை நம்பிக் கெட்டவர்கள்.

பௌத்தத்திற்கு இழுக்கு நேர்ந்து விட்டதென்றால் கொடுக்கு கட்டிக்கொண்டு அதனை தூய்மைப்படுத்த முன்னிற்கும் அரசு, கடந்த கால யுத்தத்தால் தமிழரின் பல கோவில்கள்,தேவாலயங்கள்,பள்ளிவாசல்கள் என்பன சேதமாகிய நிலையில் அது தொடர்பில் ஏதாவது இரங்கல்அல்லது அந்த மதத்தவரிடம் மன்னிப்பு கேட்டதா? இல்லையே. ஏனெனில் பௌத்தம் மட்டுமே அரசின் செல்லப்பிள்ளை. மற்றைய மதங்கள் வேண்டாப்பிள்ளைகள். ஏனைய மத வழிபாட்டிடங்களை அழித்தபின் அதனை நியாயப்படுத்த பேரினவாதிகளிடம் சுகமான ஒரு வசனம் இருக்கிறது. "பயங்கரவாதத்திற்கு எதிரான நடவக்கையில் சேதமடைந்தவை" இதுவே அந்த சர்வரோக நிவாரணச் சொல்.

எனவே பௌத்த மதத்தைத் தமிழர் பிரதேசங்களில் பரப்புவதிலும் இராணுவத்தை அரச காணிகளில் முகாம் அமைத்தல் என்ற போர்வையில் தமிழர் பகுதிகளில் செறிவாக வைத்திருப்பதையுமே அரசாங்கம் தனது கொள்கையாக வைத்துள்ளது.

கொழும்பில் கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்ட 5 மாணவர்கள் தொடர்பில் கடற்படையினர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இந்தச் சம்பவத்தோடு தொடர்புடைய கடற்படை அதிகாரியை கைது செய்வதற்கு கடற்படை தலைமையகத்திற்கு குற்றப்புலாய்வுப்பிரினர் செல்ல, பாதுகாப்பு அமைச்சகம் இதுவரை அனுமதி வழங்காமல் இழுத்தடித்து வருகின்றது. இந்த நிலையில் கடற்படை தலைமையகத்தில் தேடுதல் நடத்தி குறித்த அதிகாரியை கைது செய்வதற்கு நீதிமன்றம் பணித்துள்ளது. 5 மாணவர்கள் கடத்தப்பட்டு, காணாமற் போகச் செய்யப்பட்டமை தொடர்பிலேயே சந்தேக நபரை கைது செய்வதற்கு இழுத்தடிக்கும் அரசு, தமிழர்பகுதிகளில் ஆயிரக்கணக்கானோர் காணாமற்போகச் செய்யப்பட்டமைக்கும் இறுதிப்போரில் கொத்து கொத்தாக கொல்லப்பட்ட கொர்டூரங்களுக்குமா தீர்வைத் தரப்போகிறது?

ஜனாதிபதி தொடக்கம் அமைச்சர்கள் வரை அனைவரும் ஒருமித்த குரலில் " ஒருபோதும் இராணுவத்தை தண்டிக்க விடமாட்டோம்"எனக்கூறுவதும் இந்த அடிப்படையிலானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமயந்தி ரீச்சரின் கண்ணீர்



■ சிக்மலிங்கம் றெஜினோல்ட்

அடைமழை கொட்டிக் கொண்டிருந்த ஒரு நாள் மத்தியானம் தமயந்தி ரீச்சரைச் சந்தித்தேன். எதிர்பாராத சந்திப்பு.

அன்று வழமைக்கு மாறாக வெக்கை இல்லை. இல்லையென்றால், கோடை மத்தியானம் ஆளை வாட்டி எடுத்துவிடும். அதுவும் போருக்குப் பிந்திய மரங்களும் கட்டடங்களும் வீடுகளுமில்லாத கிளிநொச்சியில்.

போர் ஒரு பொல்லாத பிசாசுதான். எல்லாவற்றையும் தின்று விட்டது. ஒரு மாயாவியைப்போல. ஆனால், அன்று பெய்த எதிர்பாராத கோடைமழை சற்று வெக்கையைக் குறைத்திருந்தது.

பழகிய தெருக்கள் எல்லாம் பழக்கமில்லாதிருப்பதைப் போன்ற உணர்வு. முந்தியிருந்த அமைப்புகள் சிதைந்து உருமாறியதால் அப்படியிருக்கலாம்.

கடைவிறாந்தை ஒன்றில் மழைக்காக ஒதுங்கியிருந்தபோது, தமயந்தி ரீச்சரும் அவருடைய கணவரும் வந்து அங்கே வந்து ஒதுங்கினார்கள். யுத்தம் முடிந்த பிறகு அன்றுதான் மீண்டும் அவர்களைச் சந்திக்கிறேன். என்னைப் பார்த்ததும் தமயந்தி ரீச்சர் அழுதா. ரீச்சரைத் தொடர்ந்து அவவுடைய கணவரின் கண்களும் கலங்கின. அப்படியே விம்மினார்.

☹ ☹ ☹

தமயந்தி ரீச்சருக்கு மூன்று பிள்ளைகள். கணவர் வங்கியொன்றில் வேலைசெய்தார். கடைசிக் குழந்தை இடப்பெயர்வின்போதே பிறந்தது. அகதியாகி இடம்பெயர்ந்து கொண்டிருந்தபோது தருமபுரத்தில். ஆண் குழந்தை. அமிழ்தன் என்று பெயரிட்டார்கள். பெயர் வைத்த அன்றே அங்கிருந்து அமிழ்தனும் இடம்பெயர்ந்தான்.

ஆயிரக்கணக்கான குழந்தை அகதிகளில் எத்தனையாவது ஆள் அமிழ்தன் என்று சத்தியமாக எனக்குத் தெரியாது. ஆனால், ஒரு குழந்தை அகதியாக அல்லது அகதிக் குழந்தையாக அவன் இருந்தான். அன்றும் மழைபெய்ததாக நினைவு. 2009 ஜனவரி முதல்வாரத்தில்.

இந்தக் குழந்தை அகதிக்குச் ஷெல்லைப் பற்றிய பயம் இல்லை. அது வெடித்தால் என்னவெல்லாம் செய்யும் என்பதைப் பற்றிய கவலைகள் இல்லை. எங்கே போகிறோம்? போகுமிடங்களில் எப்படித் தங்கப் போகிறோம்? அடுத்ததாக என்ன நடக்கப்போகிறது? பங்கர் அமைப்பதற்கு மரக்குற்றிகளுக்கு எங்கே போவது? சாக்குக்கோ, உரப்பைகளுக்கோ யாரைப் பிடிக்கலாம்? அவற்றை எங்கே வாங்கலாம்? அவை இல்லாவிட்டால், அடுத்ததாக என்ன செய்ய முடியும்? பால்மா கிடைக்குமா? காயப்படாமல் தப்புவது எப்படி? என்று எந்தக் கேள்விகளும் இல்லை. கவலைகளும் இல்லை.

அகதி முத்திரையோடு, தூசி மண்டலத்தில், சன நெரிசலில் எரிச்சலும் சினமும் பொங்கிக் கிளம்பிய நிலையில், ஒவ்வொரு இடமாக அந்தக் குழந்தை அகதியோடு தமயந்தி ரீச்சரின் குடும்பமும் இடம்பெயர்ந்து கொண்டிருந்தது.

தருமபுரத்திலிருந்து விசுவமடு, விசுவமடுவிலிருந்து உடையார்கட்டு, உடையார்கட்டிலிருந்து சுதந்திரபுரம், சுதந்திரபுரத்திலிருந்து தேவிபுரம், தேவிபுரத்திலிருந்து இரணைப்பாலை....

இதற்குள் தமயந்தி ரீச்சரின் மற்றப் பிள்ளைகளுக்குக் காய்ச்சலும் வாந்தி பேதியும். மருந்தெடுக்க ஆஸ்பத்திரிகளுக்குப் போகமுடியாது. ஆஸ்பத்திரிகள் இருந்தால்தானே அங்கே போவதற்கு. அந்த நாள்களில் பாடசாலைகளே தற்காலிக மருத்துவமனைகளாக்கப்பட்டிருந்தன. அங்கே ஆஸ்பத்திரிகளுக்குரிய அடிப்படை வசதிகள் கிடையாது. யுத்தகால நிலைமையில் ஒரு தற்காலிக ஏற்பாடு. முதலுதவி என்ற அளவில். அவ்வளவுதான். இதைவிட வேறு வழியும் இல்லை. மருந்துப்பொருட்களுக்குத் தட்டுப்பாடு. அரசாங்கத்தினால் அனுப்பப்படும் மருந்துப்பொருள்கள் மிகக்குறைந்தளவிலேயே வரும். அதற்கு மேல் வேறு வழிகளில் எடுத்து வரமுடியாது. தடை. ஆனால், பல மடங்கில் பெருகிக்கொண்டிருக்கும் காயக்காரர்களும் நோயாளிகளும்.

அந்தப் பாடசாலைகளில் - மன்னிக்கவும் பாடசாலை ஆஸ்பத்திரிகளில் அல்லது ஆஸ்பத்திரிப் பாடசாலைகளில் அல்லது எப்படியாவது இதை வைத்துக் கொள்ளுங்கள் - மருந்து கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்த இடங்களில் நொந்து போயிருக்கும் சனங்களின் குவியல். அதற்குப் பக்கத்தில் பிணங்களின் குவியல்.

இந்த நிலைமையில் யாராவது அங்கே போவார்களா? அங்கே போகவில்லையென்றால் வேறு எங்குதான் போகமுடியும்?

இதற்குள்ளே குழந்தைகளை அந்த நிலையில் வைத்திருக்க முடியுமா? அப்படித் தங்குமிடங்களில் வைத்திருந்து நோய் கூடிவிட்டால், பிறகு வேறு இடங்களில் வைத்தியம் பார்க்கவும் முடியாது.

அதுவும் சுதந்திரபுரத்துக்கு இடம்பெயர்ந்த பிறகு அங்கே ஷெல்லடி அகோரமாகி விட்டது. சனத்தொகையும் அதிகம். நெரிசலைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. சனங்கள் அங்கும் இங்குமாக அலைந்து கொண்டிருந்தார்கள். எவருக்கும் எங்கே போவதென்று தெரியவில்லை. அடுத்ததாக என்ன செய்வது என்றும் புரியவில்லை.

எப்படியோ சமாளித்துக் கொண்டு இரணைப்பாலை வரையும் வந்தாயிற்று. ஆனால், தேவிபுரத்துக்கும் இரணைப்பாலைக்குமிடையிலுள்ள ஐந்து கிலோ மீற்றர் காட்டுப்பாதையைக் கடந்து வருவதற்கு ஒன்றரை நாள் தேவையாக இருந்தது. காடுகளின் நடுவே பத்தடி அகலத்தில் இருந்த சிறிய செம்மண் தெருவில், இரண்டு லட்சம் சனமும் நகருவதென்றால், முடிகிற காரியமா? எப்படியோ இரணைப்பாலைக்கு வந்து ஒருநாள் தங்கினார்கள்.

அதற்கு மேல் அங்கே இருக்க முடியவில்லை. அங்கிருந்தும் சிலுவையைச் சுமக்க வேண்டியதாயிற்று. காலையில் அங்கேயிருந்து இன்னும் ஒரு ஒடுங்கிச்சிறுத்த தெருவில் மாத்தளனை நோக்கி ஓட்டம். அது ஓட்டமல்ல, ஊர்தல். பாம்பும் ஊர்கிறது, அட்டையும் ஊர்கிறது. நத்தையும் ஊர்கிறது. வன்னியில் சனங்களும் ஊர்கிறார்கள். நத்தையையும் விடக் கேவலமான ஊர்தல். சனநெரிசலில் சிக்கிக் தவித்தா தமயந்தி ரீச்சர். கையில் ஏந்தியபடி குழந்தை அகதி. கையில் பிடித்தபடியும் குழந்தை அகதிகள். தமயந்தி ரீச்சர் அப்போது என்ன நினைத்திருப்பா?

'அங்கே, அப்போது ஒரு ஷெல்லோ குண்டோ வந்து விழுந்து வெடித்தால் எவ்வளவு சுகமாக இருக்கும்? ஒரு கணத்திலேயே பெரிய விடுதலை. இந்த அலைச்சலுக்கு ஒரு முற்றுப்புள்ளி. இந்தப் பாரங்களுக்கு ஒரு சுமையிறக்கம். கடவுளே, அப்படி ஏதும் நடக்குதில்லையே!'

பாரங்களோடு, நடக்கவும் முடியாத, நிற்கவும் முடியாத நிலையில் மெல்ல மெல்ல நகர்ந்து மாத்தளனுக்கு வந்தபோது பொழுது இருண்டிருந்தது. உடல் சோர்ந்து விழுந்தாலும் அப்படியே நிற்குமிடத்தில் தங்கிவிட முடியுமா?

சனங்கள் இரைந்து கொண்டிருந்தார்கள். மாத்தளன் என்றால் எப்படியிருக்கும் என்று தெரியாத ஒரு சூழலில்தான் அவர்கள் அங்கே வந்தார்கள். அதற்கு முன்னொருபோதும் அவர்கள் அங்கே வந்ததில்லை. வரவேண்டியிருந்ததும் இல்லை.

இப்பொழுது வந்தபோதும் அந்த இடத்தைச் சரியாக விளங்கிக் கொள்ள முடியவில்லை. கடற்காற்று வீசியது. கடல் மணமும் சேற்றுக்களப்பு மணமும் கலந்து வந்தன. இருந்தாலும் அது என்னமாதிரியான அமைப்பைக் கொண்ட இடம் என்று விளங்கிக்கொள்ள முடியவில்லை. இருளும் ஒளியுமாக ஒரு தட்டையான புராதன நகரத்தைப்போல ஆயிரக்கணக்கான - லட்சக்கணக்கான ஒளிப்புள்ளிகள். நகரங்களில் கட்டிடங்கள், வீதிகள் என்பவற்றுக்கு அமைய அளவிலும் உயரத்திலும் தெரியும் வெளிச்சம் வெவ்வேறு தோற்றங்களோடிருக்கும். ஆனால், மாத்தளனில் அது தட்டையாக இருந்தது. அதை வைத்தே அந்தப் பிரதேசம் ஒரு வெட்டை வெளியாக இருக்கும் என்று புரிந்தது. அத்தனை ஒளிப்புள்ளிகளும் அகதிக் கூடாரங்களில் இருந்தே வருகின்றன. குப்பி விளக்குகள்தான். மின்சாரமில்லை. அவ்வளவு ஒளிப்புள்ளிகளையும் ஊடறுத்துக் கொண்டு அங்கமிங்குமாகச் சனங்கள் அலைந்து கொண்டிருந்தார்கள்.

அந்த நிலையிலும் தமயந்தி அந்த வெளிச்சத்தை ரசித்தா. நீண்ட நாள்களுக்குப் பிறகு ஒரு பெரிய பரப்பில் வெளிச்சத்தைக் காணும்போது மனசுக்குள் சற்று நிறைவாக இருந்தது. சனங்கள் எப்படியோ எங்கோ உயிரோடு வாழ்ந்தால் போதும் என்றுதான் முயற்சிக்கிறார்கள். அப்படித்தானே நாமும் வந்திருக்கிறோம் என்று எண்ணினா தமயந்தி ரீச்சர். அங்கே தங்களுக்கென்று ஒரு பங்கரை வெட்ட வேணும் என்று தமயந்தி ரீச்சரின் கணவர் முயன்றார்.

அதற்கு அவரிடம் மண்வெட்டியில்லை. சாக்குகள் இல்லை. மரக்குற்றிகள் இல்லை. மூன்று பிள்ளைகளோடு இதையெல்லாம் எப்படிக் காவித்திரிய முடியும்? பிள்ளைகளுக்கான சில அவசியமான பொருள்கள். படுக்கை. சாப்பாட்டுப் பொருள்கள். விளக்கு, வாளிகள், நீர்க்கான்கள். இன்னும் சில முக்கியமான உதவிப் பொருட்கள். தரப்பாள் கூடாரங்கள். அதற்கான கயிறு...

இவ்வளவையும் அந்த ஒரு மோட்டார் சைக்கிளில் காவிக்கொண்டு, இந்தளவு சனங்களுக்குள்ளாலும் மாத்தளன் வரை வந்ததே பெரியபாடு. இதற்கே அவருக்கு சாதனைகளுக்கான விருது வழங்க வேணும்.

ஆனாலும் பங்கரை வெட்டாமல் இருக்க முடியுமா? சாப்பாடில்லாமல் இருக்கலாம். குடிதண்ணீரைக் கூடக் கொஞ்சநேரம் பிந்திக் குடித்துக் கொள்ளலாம். ஆனால், பங்கரை தாமதித்து அமைக்க முடியாது. அது உயிரோடு சம்பந்தப்பட்டது.


(18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியா, கஜன், சுலக்ஷன்: இவர்களுக்கு எப்போது நீதி?

அச்சுவேலி முக்கொலை வழக்கு, நெடுந்தீவுச் சிறுமி லக்சாயினி கொலை வழக்கு என்பன முடிவுக்கு வந்திருக்கின்றன. இவ்விரு வழக்குகளிலும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றங்கள் போதிய ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டதால், அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்ப்பின் மூலம் மீண்டும் சட்டத்தின் ஆட்சியை நீதிபதி இளஞ்செழியன் குற்றமிழைப்போருக்கு உறுதியாக உணர்த்தியுள்ளார். வினை விதைத்தால் வினை அறுக்கும் நிலை கட்டாயம் வரும் என்ற பயம் குற்றங்கள் குறைய வழிவகுக்கும். இதேவேளை யாழ்.குடாநாட்டை மாத்திரமல்லாது முழு இலங்கையையுமே உலுக்கிய புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலை வழக்கு, பொலிஸாரால் நள்ளிரவில் காவு வாங்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களான கஜன், சுலக்ஷன் கொலை வழக்கு என்பன இன்னும் நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளன. இந்தநிலையில் அச்சுவேலி முக்கொலை, நெடுந்தீவு சிறுமி கொலை என்பனவற்றின் குற்றவாளிகளுக்கு கொடுக்கப்பட்ட மரணதண்டனை பற்றியும், இன்னும் நிலுவையில் இருக்கும் வித்தியா கொலை வழக்கு, பல்கலைக்கழக மாணவர்கள் கொலை வழக்கு என்பன பற்றி மக்களின் எண்ணவோட்டங்களின் தொகுப்பு இது.

சந்திப்பும் , படங்களும்:
**அ.றொக்ஷன்**



**பே.துஷ்யந்தன்**
(கண்ணகி சைவ உணவகம், கொக்குவில்)

அச்சுவேலி முக்கொலைகளுக்கு மூன்று மரணதண்டனை வழங்கியதும் நெடுந்தீவு சிறுமியின் கொலைக்கு மரணதண்டனை வழங்கியதும் எமக்கு மிகவும் சந்தோசமாக உள்ளது. சட்டம் இப்போதுதான் உயிர்த்திருக்கிறது. இருந்தாலும் பொலிஸாரினால் படுகொலைகள் செய்யப்பட்ட அப்பாவி கம்பஸ் மாணவர்களுக்கும், புங்குடுதீவு வித்தியாவுக்கும் இன்னும் நீதி கிடைக்கவில்லை. பதவியிலை யும், அரசியல் பலத்திலை யும் உள்ள வங்களையும் இந்தச் சட்டம் ஒண்டும் செய்யாது போலத்தான் தெரியுது. இதனை நினைக் கும்போதுதான் எமக்கு மிகவும் வேதனையாகவுள்ளது.

சட்டம் தனது கடமையைச் செய்யும் என்று சொல்லுறாங்கள். சட்டம் ஒருபுறம் தன்ர கடமையைச் செய்தாலும் மறுபுறம் குற்றவாளிகளுக்கும் சப்போட் பண்ணுதோ என்று நினைக்கத் தோன்றுகிறது. பிள்ளைகளைப் பறிகொடுத்த அந்த மாணவர்களின் பெற்றோருக்கு எவ்வளவு வேதனையா இருக்கும் இந்தக் கொலைகளுக்கு நீதி கேட்டு எல்லாரும் போராட்டம் செய்தும் அரசாங்கம் எம்மில் அக்கறை கொள்லேல்லை . ஏனெண்டா செத்தது தமிழன்தானே . கொலை செய்தது அவங்கள்தானே. அப்போ எப்படி சட்டம் தண்டிக்கும்?

**ஆர்.சுதாகரன்**
(லான்ட்மாஸ்டர் ஓட்டுநர் - திருநெல்வேலி)

நெடுந்தீவுச் சிறுமியைப் படுகொலை செய்த குற்றவாளிக்கு கொடுக்கப்பட்ட மரணதண்டனை போன்று புங்குடுதீவுப் பிள்ளை வித்தியாவின் படுகொலைக்கும் தூக்குத் தண்டனை கொடுத்தே தீரவேண்டும். ஏனெண்டா அச்சுவேலில நடந்த கொலைகள் என்பது குடும்பப் பிரச்சினையால் நடந்தது. அந்த மூன்று கொலைகளையும் செய்த பெடியன் குடும்பத்தோட பேசி அந்தபிரச்சனையைத் தீர்த்திருக்கலாம். கொலை செய்ய வேண்டிய அவசியமும்



வந்திருக்காது. ஆனால் புங்குடுதீவுப் பிள்ளையை கன ஆக்கள் சேர்ந்து திட்டமிட்டு நாசமாக்கி, கொலை செய்திருக்கிறாங்கள். குடும்பப் பிரச்சினையால் நடந்த கொலைகளுக்கு தூக்குத் தண்டனை கொடுத்தமாரி இந்தக் கொடூரக் கொலைக்கும் தூக்குத் தண்டனை கொடுக்க வேண்டும்.

சுலக்ஷன், கஜன் ஆகிய மாணவர்களின் படுகொலையைப் பொறுத்தமட்டில் பொலிஸார் மிகவும் மோசமாக நடந்து கொண்டிருக்கினம். இது வேதனைக்குரிய செயலாகும். பொலிஸார் பெடியங்களைக் கூப்புட்டு அவங்கள் நிற்காமல் போனது பொலிசுக்கு ஒரு காரணமாக இருக்கலாம். அதுக்குத் தண்டனை மரணமல்ல பொலிஸ்காரர் அவங்களைக் கூப்பிட்டது அவர்களுக்குக் கேட்காமல் இருந்திருக்கலாம், போதையில் போயிருக்கலாம் அல்லது பயத்தில போயிருக்கலாம் இப்படி பல காரணங்கள் உண்டு. அதுக்குப் பொலிஸ் சுடவேண்டிய அவசியமென்ன? ஒரு பிரச்சனையைப் பேசித் தீர்க்க வேண்டும். அதுதான் மனிதத்தன்மை அது பொலி ஸாராக இருக்கலாம் அல்லது பொது மக்களாக இருக்கலாம் யார் குற்றம் செய்தாலும் தண்டனை கொடுக்கப்பட வேண்டும். அதைத்தான் நாங்கள் எல்லோரும் எதிர்பார்க்கிறோம்.



**ரா.சுந்தரலிங்கம்**
(தேங்காய் வியாபாரி, ஏழாலை)

கம்பஸ் பெடியங்களைக் (சுலக் ஷன், கஜன்) கொலை செய்தவங்கள் ஜெயிலுக்குள் சந்தோசமாத்தான் இருக்கிறாங்கள். சும்மா சட்டத்த மட்டும் நம்பிக்கொண்டு இருக்க முடியாது. இளஞ்செழியன் ஐயா வந்தப்பிறகு ஓரளவுக்கு சட்டம் ஒழுங்கா இருக்கு. ஆனா எங்கட கம்பஸ் பெடியங்கட அநியாய சாவுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. காலம்தான் போய்க்கொண்டிருக்கிறது. நான் நினைக்கிறன் லோயர்மார்தான் (சட்டத்தரணிகள்) வித்தியான்ரயும், கம்பசு பெடியங்கடயும் கேசுகளை இழுக்கினம் போலத் தெரியுது.

அச்சுவேலி முக்கொலைகளை செய்த பெடியன் அதனை ஒப்புக் கொண்டபடியால்தான் அந்தக் கேஸ் முடிஞ்சது அதுவும் இந்த வழக்கு மேல் நீதிமன்றத்தில் வந்தபடியால்தான் தண்டனை கிடைச்சது. வழக்கெண்டால் இப்படி இழுபட்டுத்தான் முடியும். சில வழக்குகள் பத்து,பதினைஞ்சு ஏன் இருபது வருசங்கள் கூட இழுபட்டிருக்கு நெடுந்தீவு சிறுமி கொலையும் ஐஞ்சு வருசங்கள் கழிஞ்சுதான் முடிஞ்சது. வித்தியான்ரையும், கம்பஸ் பெடியங்கட கேசும் இப்படி இழுபட்டுத்தான் முடியும் போல தெரியுது. இதில வேற அரசியல் காரணங்களும் இருக்குது. இனி என்ன நடக்கப் போகுது எண்டு பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.




**ரி.கருணாநந்தன்**
வெற்றிலை வியாபாரி, திருநெல்வேலி

அச்சுவேலி, நெடுந்தீவு எண்டு 2 இடங்களில நடந்த கொடூரமான கொலைகளுக்கு தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கு. குற்றம் நிரூபிக்கப்பட்டால் சட்டம் தன்ர கடமையைச் செய்யும். அதில எங்களுக்கு நம்பிக்கை இருக்கு. பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நீதி கிடைக்க வேண்டும். குற்றம் செய்தவங்களும் உடனடியா தண்டிக்கப்பட வேண்டும். இல்லாட்டி இப்படியான மோசமான சம்பவங்கள் நடந்து கொண்டுதான் இருக்கும்.

சட்டம் ஒருபோதும் அரசியல் காரணங்களைப் பார்க்கக்கூடாது. அரசியல் காரணங்கள் வித்தியா, கம்பஸ் பெடியள் கொலைக் கேசுகளில இருக்க வாய்ப்பில்லை. உண்மையான குற்றவாளிகள் வெளில சும்மா திரியலாம். அப்பாவிகள் இந்த மோசமான குற்றங்களோட சம்பந்தப்படுத்தியிருக்கலாம். நாங்கள் நினைக்கிறமாதிரி உடனே குற்றவாளியைக் கண்டு பிடிச்சு தூக்கில போட முடியாது. கைது செய்யப்பட்டவர்கள் இன்றுவரைக்கும் சந்தேக நபராத்தான் இருப்பார்கள். நீதி கிடைக்க பொலிஸாரும்,நீதிமன்றமும் முயற்சி எடுக்க வேண்டும்.

**கே.சுகாஷ்**
(சட்டத்தரணி - வட்டுக்கோட்டை)

நெடுந்தீவுச் சிறுமியினுடைய வழக்கு ஐந்து வருடங்கள் முடிவடைந்த நிலையிலேயே குற்றவாளிக்கு மரணதண்டனை கிடைத்திருக்குது. அதேபோன்று அச்சுவேலி முக்கொலைகள் நடைபெற்று மூன்று வருடங்கள் கடந்த நிலையிலேயே குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை கிடைத்திருக்குது. ஒரு வழக்கு விசாரணை என்பது சாட்சியங்கள் ஆதாரங்களை



வைத்தே மேற்கொள்ளப்படும். சரியான ஆதாரத்துடன் குற்றவாளியைத் தண்டிப்பதற்கு சில காலங்கள் ஆகும். எந்தத் தீர்ப்பையும் அதிவேகமாகக் கொண்டு வரமுடியாது.


ஒவ்வொரு வழக்கும் ஒவ்வொருமாதிரி வேறுபடும். அச்சுவேலி முக்கொலைகள் மற்றும் நெடுந்தீவு சிறுமி கொலை ஆகிய இரண்டு வழக்குகளும் முடிவடைய மூன்று தொடக்கம் ஐந்து வருடங்கள் எடுத்தமாதிரி, வித்தியாவினதும், யாழ். பல்கலைக்கழக மாணவர்களினதும் வழக்கு நிறைவடைய ஐந்து வருடங்கள் எடுக்கலாம் அல்லது ஐந்து வருடங்களுக்குள்ளேயும் முடிவடையலாம். வித்தியாவின் கொலை வழக்கு நடைபெறத் தொடங்கி, இரண்டு வருடங்கள் ஆகியுள்ளன. பல்கலைக்கழக மாணவர்களின் கொலை நடைபெற்று ஒரு வருடம் கூட ஆகவில்லை. எனவே இவ்வழக்குகளும் குறிப்பிட்ட காலங்களின் பின்னரே முடிவடையலாம்.


வித்தியா கொலை வழக்கில் 98 வீதமான விசாரணைகள் நிறைவடைந்து விட்டன. இந்த வருட இறுதிக்குள் இந்த வழக்கு நிறைவடைவதற்கு வாய்ப்புள்ளது என்று நாங்கள் நம்புகின்றோம். மூன்று வருடத்துக்குள் இந்த வழக்கு நிறைவடைந்தால் அது குறுகிய காலப்பகுதியாகவே நான் எண்ணுகிறேன். எனவே எல்லோரும் நினைப்பதுபோல் எந்தவொரு நீதிமன்றமும் உடனடியாகத் தீர்ப்புக் கொடுக்க முடியாது. எனவே இந்த இரண்டு வழக்குகளும் ஆகப் பெரிய தாமதங்களாகி விட்டதாக கருதமுடியாது.

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாணமாகும் இந்தியா





- வி.மணிகண்டன்

தேசத்தின் தலைநகரில் நிர்வாணமாக நின்றால் அந்தப் படம் செய்தித்தாள்களில் வரும். தொலைக்காட்சிகளில் காட்டுவார்கள். தெரிந்தவர்கள், உறவினர்கள் என எல்லோருடைய கண்களிலும் படும். நாளை ஊருக்குச் சென்றால் உறவுக்காரப் பெண்மணிகளின் முகத்தில் விழிப்பதற்கு சங்கடமாக இருக்காதா? ஊர்க்காரர்கள் நம்மைப் பார்க்கும் போது நம்முடைய நிர்வாண உருவம் அவர்களது மனக்கண்ணில் வந்து போகக் கூடுமல்லவா? நம் வீட்டுப் பெண்கள் எப்படி எடுத்துக் கொள்வார்கள்? நம் குழந்தைகள் எவ்வாறு புரிந்து கொள்வார்கள்? தான் நிர்வாணமாக நிற்கும் படங்கள் வெளியானால் அது தமக்கு மட்டுமில்லாமல் தம் குடும்பத்திற்கும் இது அவமானமாக இருக்காதா- இப்படியெல்லாம் யோசிக்காமலா ஒற்றைக் கோவணத்தையும் அவிழ்த்து வீசிவிட்டு நாடே பார்க்கட்டும் என்று நிர்வாணமாக நின்றார்கள்?

ஏசி அறையில் அமர்ந்து கொண்டு தலைநகர் போராட்டத்தை விமர்சிப்பவர்கள் மிகச் சாதாரணமாக பீடைகள், தேசத்தை அவமானப்படுத்த வந்த பாவிகள் என்றெல்லாம் எழுதுகிறார்கள்.

எது அவமானம்? தலைநகரில் நான்கைந்து விவசாயிகள் அம்மணமாக ஓடுகிறார்கள் என்பது விவசாயிகளுக்கு அவமானமில்லை. புதிய இந்தியாவை உருவாக்கப் போகிறோம் என்று மார்தட்டுகிறவர்கள் உழவனுக்குக் செவி கொடுக்க நேரமில்லை என்பதுதான் அவமானம். தனி விமானம் பிடித்து கோயமுத்தூர் வந்து அங்கேயிருந்து ஹெலிக்காப்டரில் சென்று சிவலிங்கத்தைத் திறந்து வைக்க நேரத்தை உருவாக்கிக் கொள்ளும் பிரதமருக்கு அதே மாநிலத்திலிருந்து வந்திருக்கிற உழவர்களுக்காக ஐந்து நிமிடம் ஒதுக்க முடியவில்லை என்பதுதான் அவமானம்.

மனுவைப் பெற்றுக் கொண்டு நிழற்படங்களுக்கு புன்னகைத்தபடியே முகம் கொடுத்து 'பரிசிலீக்கிறேன்... நீங்க ஊருக்குப் போங்க' என்கிற ஒற்றை வரி. அவ்வளவுதானே? எந்த ஈகோ மத்திய அரசைத் தடுக்கிறது? இவர்களை அனுமதித்தால் ஆளாளுக்குக் கிளம்பி வந்து டெல்லியில் அமர்ந்துவிடுவார்கள் என்கிற பயமா? அப்படி கிளம்பி வருகிற அத்தனை பேராலும் இவ்வளவு உறுதியாகப் போராட முடியும் என்று மத்திய அரசாங்கம் நம்புகிறதா என்ன?

தமிழகத்திலிருந்து கிளம்பிச் சென்று டெல்லியில் போராடுகிற விவசாயிகள் யார்? அவர்களின் வசதி வாய்ப்புகள் என்ன? அவர்களின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பதையெல்லாம் மத்திய உளவுத்துறை இன்னமுமா கண்டுபிடிக்காமல் இருக்கிறது? தோண்டியெடுத்திருப்பார்கள். கடந்த சில தினங்களாக இங்கே கிளப்பிவிட்டுக் கொண்டிருந்தார்களே 'அவர்களுக்குப் பின்புலம் இருக்கிறது யாரோ இயக்குகிறார்கள்' என்றெல்லாம்- அப்படியொரு பின்னணி இருக்குமானால் மத்திய அரசும் உளவுத்துறையும் இத்தனை நாட்கள் விட்டு வைத்திருப்பார்களா என்ன? உரித்துத் தோரணம் கட்டி, போராட்டக்காரர்களை நசுக்கி வீசியிருக்க மாட்டார்களா?

ஏன் முடியவில்லை? எதனால் தயங்கு கிறார்கள்? தோண்டித்துருவியும் ஆதாரம் ஏதுமில்லை என்றுதானே அர்த்தம்?

உழவர்களின் கோரிக்கைகள் வலிமையானவை. தமது கோரிக்கைகள் சரியானவை என்று முழுமையாக நம்புகி றார்கள். உறுதியாகவும் நிற்கிறார்கள். தொடர்ந்து கிளப்பிவிடப்பட்ட எந் தப் புரளியும் அவர்களைத் துளி கூட அசைக்க வில்லை. இன்னமும் எவ்வளவு நாட்கள் ஆனாலும் குலையா மல் நிற்பார்கள் என்று உறுதியாக நம்ப முடிகிறது.

இவர்கள் கிளப்பிவிட்டதைப் போல பின்புலத்தில் யாரோ நின்று இயக்கினால் எவ்வளவுதான் கொட்டிக் கொடுத்தாலும் ஒரு குடும்பஸ்தன் நிர்வாணமாக ஒத்துக் கொள்வானா? திருமணம் செய்து குழந்தைகள் பெற்றவன் பொதுவிடத்தில் ஆடை களைந்து நிற்கத் தயாராகிறான் என்பது பைத்தியகாரத்தனமில்லை. இயலாமையின் உச்சம். கிட்டத்தட்ட ஒரு மாத காலமாக மத்திய அரசை அணுக முடியாத வலி. காவிரி மேலாண்மை அமைக்க நடவடிக்கை எடுக்கக் கோருவது, மாநிலத்தை வறட்சி மாநிலமாக அறிவிக்கக் கோருவது, மத்திய அரசின் நிவாரணத் தொகையைக் கூடுதலாக்கக் கெஞ்சுவது, தேசிய மயக்கமாக்கப்பட்ட வங்கிகளில் உழவர்கள் பெற்றக் கடனைத் தள்ளுபடி செய்யச் சொல்வது உள்ளிட்ட கோரிக்கைகளை [illegible] செய்யப்பட [illegible] கோரிக்கைகள் மாநில அரசிடம் கேட்டாலும் அர்த்தமில்லாதவை.

இவற்றையெல்லாம் முன்வைத்து மத்திய அரசிடம் கோரிக்கை வைத்துப் போராடுகிறார்கள். நிலத்தை விட்டு, குடும்பத்தைப் பிரிந்து மாதக்கணக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஐந்து நிமிடம் ஒதுக்கி மனுவைப் பெற்றுக் கொள்ளக் கூட நேரமில்லை என்று சொல்வதை எப்படி ஏற்றுக் கொள்வது? கிட்டத்தட்ட போராட்டத்தின் எல்லாவிதமான வடிவங்களையும் மேற்கொண்டு பார்க்கிறார்கள். சீனப் பத்திரிக்கைகளில் கூட போராட்டம் குறித்தான பதிவு வெளியாகிறது. ஆனால் நம் அரசுக்குத்தான் கண்டுகொள்ள நேரமில்லை. உண்ணாவிரதம், நிலத்தில் உருளுதல், அரை நிர்வாணப் போராட்டம், தலை கீழாக நிற்றல் என சகலத்தையும் செய்து கவனத்தைக் கோரினார்கள். திரும்பிக் கூட பார்க்கவில்லை. வேறு வழியே இல்லாமல் அம்மணமாக நின்றிருக்கிறார்கள்.

இதை விவசாயிகளின் துக்கமாகத் தானே பார்க்க வேண்டும்? அங்கே அம்மணமாக ஓடிய உழவர்களின் மனைவிகளின் மனநிலையை யோசித்துப் பார்த்தவனுக்கு விவசாயியைத் திட்டுகிற எண்ணம் தோன்றாது. அவனது குழந்தைகள் எதிர்கொண்டிருக்கும் அதிர்ச்சியை நினைத்துப் பார்த்தால் உழவனை வசைபாட மனம் வராது. வினாடிக்கு வெறும் முப்பத்தேழு கன அடி தண்ணீர்தான் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. ஒரு கன அடி என்பது இருபத்தெட்டு லீற்றர். முப்பத்தியேழு பேர் ஆளுக்கொரு வாளி யைக் கையில் பிடித்துக் கொண்டு நின்றால் மொண்டு ஊற்றிவிட முடியும். டெல்டா விவசாயி என்ன செய்வான்? அகன்ற காவிரி வறண்ட காவிரியாகக் கிடக்கிறது. பவானி, நொய்யல், தாமிரபரணி என அத்தனை நதிகளும் செத்துக் கிடக்கின்றன. ஆயிரம் அடி ஆழ்குழாய்களிலிருந்து கூட வெறும் புகைதான் வருகிறது. உழவன் கெஞ்சாமல் என்ன செய்வான்?

பா.ஜ.க. ஆதரவு என்பது வேறு. என்னிடமும் மனச்சாய்வு உண்டு. ஆனால் உழவர்களின் துன்பத்தையும் அவனது கோரிக்கையையும் புரிந்து கொள்ளாமல் அவர்களை அவமானப்படுத்துவது வேறு. வெறும் காவிக் கொடியைக் கண்களுக்கு மேலாகச் சுற்றிக் கொண்டு யோசித்துப் பார்த்தால் எந்தக் காலத்திலும் உழவனின் வலியைப் புரிந்து கொள்ள முடியாது. உழவனின் வலியைப் புரிந்து கொள்ளாத எந்தவொரு மனிதனும் மனிதனாகவே இருக்க முடியாது.

## வித்தியா, கஜன், சுலக்ஷன்: இவர்களுக்கு எப்போது நீதி?

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)



**மோகநாதன்**
அதிபர், யாழ்.கோண்டாவில் இந்துக் கல்லூரி

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரையில் இன்றைய காலச் சூழ்நிலையைப் பார்க்கும்போது இளைஞர்களின் செயற்பாடு மிகவும் வக்கிரமான போக்கிலேயே தலை தூக்கியுள்ளது. பழிக்குப்பழி என்ற போக்கையே தாரக மந்திரமாகக் கொண்டு இளைஞர்கள் செயற்பட்டு வருகின்றார்கள். இது அண்மைக்காலமாக மிக மோசமாக நடந்து கொண்டிருக்கிறது. இந்த மோசமான மாற்றம் இளைஞர்களிடத்தே அன்பு, பாசம். இரக்கம் எல்லாவற்றையும் முடக்கிவிட்டது. இது மக்களிடையே அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான சமூகத்தைச் சீரழிக்கும் செயற்பாடுகள் விரைவில் களையப்படவேண்டும். அதனையே மக்களும் விரும்புகிறார்கள்.

நீதிமன்றங்கள் தங்களுடைய கடமைகளை ஒழுங்காகச் செய்கின்றன. குற்றவாளிகள் விரைவாகத் தண்டிக்கப்படவேண்டும். அப்போதுதான் இதனைப்பார்த்து குற்றம் புரிய நினைப்பவர்களும் அச்சம் கொள்வார்கள். அத்தோடு குற்றச் செயல்களைச் செய்யவும் பயம் கொள்ளவார்கள். தண்டனை என்பது தவிர்க்க முடியாததொன்றாகும். வித்தியாவின் கொலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் இறப்பு என்பனவற்றுக்கு உகந்த நீதி வழங்கப்பட வேண்டும். அத்துடன் ஏனைய குற்றங்களோடு தொடர்புடையவர்களும் தண்டிக்கப்படல் வேண்டும். அதேவேளை ஒரு நிரபராதி கூட தண்டிக்கப்படக் கூடாது. அதுதான் மக்களுடைய எதிர்ப்பார்ப்பாகும். தண்டனைகள் கொடுக்கப்படுவதனுடாக குற்றவாளிகள் திருந்தப் போவதில்லை ஆனால் அவர்களின் செயற்பாடுகளை முடக்க முடியும். ஏனையவர்களும் குற்றச் செயல்களிலிருந்து ஒதுங்கிக் கொள்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரப்பலன்

**மேடம்**
கல்வி மேன்மை. காரியத்தடை. அதிக செலவினம்.

**துலாம்**
கொடுக்கல் வாங்கல் பிணக்கு. ஸ்திரம். மனோபலம்.

**ரிஷபம்**
எதிர்பாரா அதிர்ஷ்டம். மனைச் சிறப்பு. பயிர் பலிதம்.

**விருச்சிகம்**
தாழ்ந்த நிலை. சஞ்சலம். மக்கட் பேறு. மனைமாட்சி

**மிதுனம்**
வரவுக்கேற்ற செலவினம். பகைவர் நண்பராவர்.

**தனுசு**
அதிக செலவினம். ஆடை அணிகலன் சிறப்பு. ஜெயம்.

**கடகம்**
எதிர்பாலர் உதவி. எண்ணம் ஈடேறும். இல்லச் சிறப்பு

**மகரம்**
தர்ம சிந்தனை. காரிய அனுகூலம். பயமிகுதி. தெளிவு

**சிம்மம்**
புத்திரரால் மகிழ்ச்சி. தனதானியச் சிறப்பு. மேன்மை

**கும்பம்**
தேவையற்ற பிரயாசம். வணிகச் சிறப்பு. வான்வழி பயன்.

**கன்னி**
பக்குவநிலை. நேர்மை. காரியத் தடை. கல்விச் சிறப்பு.

**மீனம்**
உழைப்பிற்கேற்ற ஊதியமின்மை. நண்பரால் நற்பயன்.






காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்திய 'கலைமாடக்கோன்' ச.சிவஞானத்தின் மணிவிழாவும் கவியரங்கும் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.



அண்மையில் மறைந்த தமிழின் மூத்த எழுத்தாளர் அசோகமித்திரனின் நினைவு தினம் " நினைவேக்கங்களின் ஊற்றுமுகம்" என்ற தலைப்பின் கீழ் யாழ்.இலக்கிய குவியத்தின் ஏற்பாட்டில் 08. 03. 2017 பி.ப. 3 மணிக்கு இடம்பெற்ற போது...



"இலங்கையில் வாழும் 60 வயதுக்கு மேற்பட்ட, சகல பிரசைகளுக்கும், இன, மத, மொழி பாகுபாடின்றி போதுமான அளவு "ஓய்வூதியக் கொடுப்பனவு" வழங்கும் திட்டத்தை, அரசாங்கம் கொண்டு வர வேண்டும். இதன் மூலம் சகல முதியவர்களும் சுயகௌரவத்துடன் , நிம்மதியாகவும், இம்மண்ணில் வாழ வகை செய்ய வேண்டும்." என்ற கோரிக்கையுடன் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் பிரதாபன் 1,515 கிலோ மீற்றர் தூரத்துக்கு சைக்கிள் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.



## அஞ்சலி !

மூத்த ஊடகவியலாளர் செல்லையா கதிர்காமத்தம்பி கடந்த புதன்கிழமை (05.04.2017) காலை அமரத்துவமடைந்தார். இறக்கும்போது அவருக்கு வயது 89.

ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரியில் ஆசிரியராகவும் பின்னர் அங்கு அதிபராகவும் பணியாற்றிய அவர் சமநேரத்தில் பிராந்திய ஊடகவியலாளராகவும் பணியாற்றினார். ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகாலம் இவர் ஊடகவியலாளராகப் பணியாற்றியுள்ளார்.

டெய்லி மிரர், டெய்லி நியூஸ், உதயன், தினகரன் மற்றும் சில பத்திரிகைகளுக்கு யாழ். பிராந்தியச் செய்தியாளராக இவர் பணியாற்றினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள உதயன் பத்திரிகையில் சிறிது காலம் உதவி ஆசிரியராகப் பணியாற்றியுமுள்ளார்.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட அவர், இறக்கும்வரை அந்தப் பொறுப்பில் இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஹாய் குட்டீஸ்...!

உங்களின் படைப்புகள் அனைத்தும் புதுவிதியில் பிரசுரமாக வேண்டுமா? உடன் எழுதி அனுப்புங்கள்.

puthuvithi@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கும் உங்கள் படைப்புகளை அனுப்பி வைக்க முடியும்.

'புதுவிதி' இல.107 இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.




மேலே தரப்பட்டுள்ள A,B,C,D,E,F ஆகிய ஆறு படங்களில் ஒரு படம் மட்டும் ஏனைய ஐந்து படங்களிலும் உள்ள ஏதாவது ஓர் உருவத்தைக் கொண்டதாக அமைந்துள்ளது. அந்தப் படம் எது?



## மனிதத் தலையின் மதிப்பு

ஒருமுறை மன்னன் சாம்ராட் அசோகனை காண ஞானி ஒருவர் வந்தார். அரியணையில் அமர்ந்திருந்த அவன் உடனே எழுந்து சென்று ஞானியின் காலில் விழுந்து வணங்கினார். அப்போது மன்னனின் தலை ஞானியின் காலில் பட்டது. இதைப் பார்த்த பிரதம மந்திரியாருக்கு மன்னின் செயல் பொறுக்கவில்லை.

ஞானி சென்ற பின்னர், மன்னன் அசோகனைப் பார்த்த அமைச்சர் "தங்களின் தலை அந்தத் துறவியின் காலில் பட விடலாமா?" எனக் கேட்டார். புன்னகைத்த மன்னர் மந்திரியைப் பார்த்து, " ஆட்டுத் தலை, புலித் தலை, மனிதத் தலை ஒவ்வொன்று கொண்டு வாருங்கள் - என்றார்.

சந்தைக்கு சென்ற மந்திரி ஆட்டுத் தலை ஒன்றை வாங்கினார். வேட்டைக்காரன் ஒருவனிடம் புலித் தலையையும் சுடுகாடு ஒன்றில் இருந்து மனிதத் தலையையும் பெற்றுக் கொண்டார்.

நேராக மன்னனிடம் அவற்றைக் கொண்டு சென்ற மந்திரியிடம் "இவற்றைக் கொண்டு சென்று விற்று வாருங்கள்" என மன்னன் அசோகன் கூறினார். மந்திரியும் அவற்றைக் கொண்டு சென்றார். ஆட்டுத் தலையை உடனடியாகவே நல்ல விலைக்கு விற்றுவிட்டார். புலித் தலையை வாங்க யாரும் வரவில்லை. அதை விற்பதற்காக சிறிது அலைந்தார். கடைசியாக ஒரு பணக்காரர் தனது வீட்டில் காட்சிப்படுத்துவதற்காக புலித் தலையை வாங்கிச் சென்றார்.

எல்லா இடமும் அலைந்தும் மந்திரியால் மனிதத் தலையை விற்க முனைந்தும் முடியவில்லை. எனவே அதனை இலவசமாகக் கொடுத்துவிட முடிவு செய்து மக்களை அணுகினார். மனிதத் தலையைக் கண்டவர்கள் பதறியடித்து ஓடினரே தவிர எவரும் அதைப் பெற்றுக் கொள்ள முன்வரவில்லை. அதை விற்கமுடியாது மன்னனிடம் திரும்பிய மந்திரி, அவரிடம் விடயத்தைக் கூறினார்.

"பார்த்தீரா மந்திரியாரே இந்த உடலில் உயிர் இருக்கும் வரைதான் இந்த உடலுக்கு மதிப்பு. அது போய்விட்டால் எவரும் இதைத் தீண்டமாட்டார்கள். ஆனால் ஞானிகளோ அப்படியல்ல, உயிருடன் இருக்கும்போதே இந்த உடலுக்கு மதிப்பில்லை என்பதை நன்கு உணர்ந்தவர்கள். அப்படி உயர்ந்த ஞானிகளின் காலில் இந்த மதிப்பில்லாத தலை படுவது தவறா" என்று கேட்டார்.

மன்னன் அசோகனின் பதில் மந்திரியை சிந்திக்க வைத்ததுடன் அவரின் தவறான சிந்தனையையும் உணர்த்தியது.

## ஆசையான தோசை



ஆசையான தோசை நன்றாய்
அடுப்பில் வெந்த தோசை!
காசை வீசிக் கடையில் நானே
கட்டி வந்த தோசை!

அரிசி மாவில் உளுந்து சேர்த்து
ஆரோ சுட்ட தோசை!
பரிசில் கொடுக்க வேண்டு மெங்கள்
பழுத்த பாட்டிக்கன்றோ?

ஆட்டுக் கல்லில் பகல் முழுக்க
ஆட்டி அரைத்த மாவை
கூட்டுச் சேர்த்த கலவை தம்மை
கூடப் புளிக்க வைத்தே!

பொழுது புலரத் தோசைக் கல்லை
பொலியும் நெருப்பு இட்டே
மெழுகு வட்ட வடிவில் ஊற்றி
மிருது குலையாச் சுட்ட!

அழகாம் தோசை தருவா அம்மா
ஆசையோடே வாங்கி
வழமையாக உண்ணு மதற்கே
வருமா இந்தத் தோசை?

பரமலிங்கம்
(நவாலியூர்க் கவிராயர்)

## கண்டு பிடியுங்கள்

எந்த யானை எந்தப் பழத்தை வைத்திருக்கிறது?




## இலங்கை கல்வி தகவல்கள்



- இலவசக் கல்வியின் தந்தை சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா.
- இலவச பாட நூல் 1989 முதல் வழங்கப்படுகின்றது.
- இலவச சீருடை 1993 தொடக்கம் வழங்கப்படுகின்றது.
- 1987 இல் தேசிய பாடசாலை திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1942 இல் முதல் பல்கலைக்கழகம் (கொழும்பில்) நிறுவப்பட்டது.
- 1978 இல் பல்கலைக்கழகம் மானியங்கள் ஆணைக்குழு நிறுவப்பட்டது.
- இலங்கை திறந்த பல்கலைக்கழகம் 1980 இல் ஆரம்பிக்கப்பட்டது.
- கல்வியியற் கல்லூரிகள் 1985 இல் ஆரம்பிக்கப்பட்டன.
- மகாபொல புலமைப்பரிசில் 1981 முதல் வழங்கப்படுகின்றது.
- முதல் தொழில்நுட்பக் கல்லூரி 1893இல் மருதானையில் ஆரம்பிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரெலோ-புலிகள் மோதல்

கூட்டமைப்பும் புலிகளும் 4

■ தயாளன்


முரளி


லிங்கம்


சரா

இந்த நிலையில் தன்பொருட்டு இயக்க மோதல் ஒன்று பெரிதாக வெடித்தால் எத்தனை உயிர்கள் பலியாகுமோ? எனப் பயந்தார். கல்முனையில் விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தில் பணியாற்றும் ஒருவரது வீட்டில் அவரையும், முரளியையும் வைத்திருந்தபோது சிறியரிடம் தனது கருத்தை வலியுறுத்துமாறு அந்த வீட்டுக்காரரிடம் சொன்னார். "இயக்க மோதல் எண்டதைவிட இன்னொரு விசயமும் இருக்கு. இண்டைக்கு நான் கல்யாணம் முடிச்சு ஆறாவது நாள். இண்டைக்கு நான் செத்தா என்ரை மனிசியின்ரை ராசியாலதான் நான் செத்துப்போனான் எண்டுதான் சனம் சொல்லும். தப்புச் செய்தது சிறியண்ணா. பழிசுமக்கிறது என்ர மனிசியோ? உங்கட சகோதரி ஒருத்திக்கு இப்படி ஒரு பழிவந்தா எப்படி இருக்கும் எண்டு புரிஞ்சு கொள்ளுங்கோ" என்று அவரிடம் சொன்னதும் அவர் ஒரு கணம் ஆடிப்போய் விட்டார். அவர் ரெலோவின் ஆதரவாளர். அவரது 13 வயது மகன்தான் எந்த வழியால் புலிகள் வருகின்றார்கள் என்று உளவு பார்த்து ரெலோவினருக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்.

அதற்கேற்ற வகையில் பசீரையும், முரளியையும் மாற்றிக் கொண்டிருந்தனர். முற்றுகை இறுகி இறுகி இந்த வீட்டை நெருங்கும் சமயமாகிவிட்டது. வெளியில் ரெலோவினரின் வாகனங்கள் தகர்க்கப்படும் சத்தங்கள் அங்கிருந்த ரெலோ உறுப்பினர்களுக்குப் பீதியைக் கொடுத்ததை அவர்களின் விழிகளில் இருந்துபுரிய முடிந்தது. அப்போது அங்கிருந்த ரெலோவினருக்கு ஒருவகையில் தாங்கள் கவசமாக இருப்பதைப் புரிந்து கொண்டனர் பசீரும், முரளியும். இதேவேளை, சண்டை கட்டைப்பிராயில் தொடங்கியவுடனே கிட்டுவும், பிரபாகரனும் உரையாடினர். இருவரையும் விடுதலை செய்யாததால் சண்டையைத் தொடர்வதென முடிவெடுத்தனர். கட்டைப்பிராய் மாடி வீட்டில் சண்டை தொடங்கிய விதம் குறித்தும் தெரிவிக்க வேண்டியுள்ளது. அங்கு நின்ற திருமலையை சேர்ந்த ரெலோ உறுப்பினர் ஒருவர் வாகனத்தில் ஆயுதங்களுடன் புலிகள் வந்து இறங்கியதைக் கண்டதும் கைநடுங்கி வானத்தை நோக்கிச்சுட்டார். ஆயுதங்களோடு யார் வந்தாலும் சுடு என்றுதான் அவர்களுக்குக் கட்டளை இடப்பட்டிருந்தது. ஒருவேட்டு போதுமே சமரைத் தொடங்க - பேச்சு வார்த்தைக்கோ எச்சரிக்கை விடவோ தேவையில்லாமல் போயிற்று. லிங்கம் தலைமையிலான குழுவினருக்கும் இப்படித்தான் ஏதாவது நடந்திருக்க வேண்டும்.

அவரது தலையில் சூட்டுக்காயம் காணப்பட்டது. இதே வேளை கல்வியங்காட்டுக்குள் சிக்கிய சராவின் நிலைமை சங்கடமாகியது. இவரை ஒரு கட்டிலின் கீழ் விட்டனர் இவரது உறவினர்கள். அந்தக் கட்டிலுக்கு மேல் இரு ரெலோவினர் ஆயுதங்களுடன் வந்தமர்ந்தனர். அதிலிருந்து சாப்பிடவும் செய்தனர். "தேவையில்லாம சண்டையைத் தொடங்கிப் போட்டாங்கள். இதுக்குள்ளால என்னெண்டு வெளியால போறது? மூண்டு ரவுன்ஸ்தான் என்னட்ட இருக்கு. உன்னிட்ட எத்தனை இருக்கு?" என ஒருவர் மற்றவரிடம் விசாரித்தார். எல்லாவற்றையும் கட்டிலுக்கு கீழ்படுத்திருந்து கேட்டுக் கொண்டிருந்தார் சரா. அவரது அப்போதைய பிரச்சினை தும்மலோ, இருமலோ வந்து விடக்கூடாது என்பது. முற்றுகையில் ஈடுபட்டவர்கள் முரளி, பசீருடன் சராவையும் தேடினர். ரெலோ உறுப்பினர்கள் அங்கிருந்து போகும் வரை அந்த வீட்டுக்காரர்கள் வேண்டாத தெய்வம் இல்லை. அன்றைய காலகட்டத்தில் புலிகள் ஏனைய இயக்கங்களைவிடத் தொலைத் தொடர்புக் கட்டமைப்பில் சிறந்து விளங்கினர். கிட்டு பெல் என்றழைக்கும் குரங்கு வளர்த்தால் டக்ளஸ், தான் மேலான ஆள் என்று காட்ட 'தாட்டான்' குரங்கு வளர்ப்பார். புலிகள் கொக்கோகோலா குடிப்பது தெரிந்தால் தாங்களும் கேஸ் கணக்கில் வாங்கிச் செல்வர் ஏனைய இயக்கத்தவர். புலிகள் போடும் உடுப்புப் பாணியிலேயே தங்களையும் அடையாளம் காட்டுவர். ஆனால் தொலைத் தொடர்பு போன்ற போராட்டத்துக்கு அவசியமான விடயங்களில் அக்கறை செலுத்தவில்லை.

யாழ்ப்பாணத்தில் சண்டை தொடங்கியதும், மட்டக்களப்பு, திருமலை போன்ற இடங்களிலும் ரெலோ முகாம்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். அங்கிருந்த ரெலோ உறுப்பினர்களுக்கு ஏன் சண்டை நடக்கின்றதென்றே தெரியவில்லை. தொடர்ந்து நடந்த நடவடிக்கைகள் பலருக்கும் அதிர்ச்சியானவையாக இருந்தன. மட்டு - படுவான்கரையில் நடந்த தாக்குதலில் பின்னர் உயிரிழந்த ஒருவரது சடலத்தைப்புரட்டியபோது அவர் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்ததை உணர முடிந்தது. புத்தகத்தின் நடுவே அவரது பெருவிரல் காணப்பட்டது. அதில் அவரது இரத்தத் துளிபட்டிருந்தது. அது கொக்குளாய் முகாம் மீதான தாக்குதல் குறித்துப் புங்குடுதீவைச் சேர்ந்த போராளி சுபாஷ் எழுதிய விவரணம். (இவர் இப்போது தாமோதரம்பிள்ளை. பாலகணேசன் என்ற தனது சொந்தப் பெயரில் எழுதி வருகிறார்) அந்தப் புத்தகத்தின் தலைப்பைப் பார்த்ததும் அதிர்ந்து நின்றார். அத்தாக்குதலுக்குத் தலைமை தாங்கிய பொட்டம்மான். அந்தப் புத்தகம் "விடியலுக்கு முந்திய மரணங்கள்".

பசீரும் - முரளியும் தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்தில் பொறுப்பாக இருந்தவர் கொஞ்சம் தள்ளியிருந்த நேரத்தில் பசீருக்குக் கிட்ட வந்த ஒரு ரெலோ உறுப்பினர் ரகசியமாக "நீங்கள் தாக்காதானே "என்று கேட்டார். "ஓம்" என்றார் பசீர். என்னைத் தெரியுமா? என்று மறு கேள்வி கேட்டார். யார் இவர் என்று சிந்தித்துக் கொண்டிருக்கையில் தன்னைப் பற்றிய சம்பவங்களை அவர் நினைவூட்டினார். குருக்கள்மடம் பகுதியிலிருந்து புலிகள் இயக்கத்தில் சேருவதற்காக பிரதேசப் பொறுப்பாளர் மூலம் வந்தவர் இவர். பயிற்சிக் காலத்துக்காகக் காத்திருக்கையில் ஒரு நாள் முகாமுக்குப் பொறுப்பானவர் இவரை அழைத்து வந்தார். இவருக்கு அடிக்கடி கலைவருவதாகவும் இவர் முகாமில் இருப்பது பிரச்சினையாக இருக்கும் எனவும் குறிப்பிட்டார். வீட்டுக்குச் செல்வதற்கு சம்மதமாயின் போகலாம் எனக் கூறி பயணத்துக்குத் தேவையான பணத்தைக் கொடுத்து அனுப்பி வைத்திருந்தார் பசீர் . பின்னர் மூதூருக்குப் போன இடத்தில்தான் ரெலோவினருடன் இணைந்து கொண்டதாகக் குறிப்பிட்ட அவர் சண்டை தொடங்கிய பதற்றமான சூழலில் வேறொங்கோ இருந்து கல்வியங்காட்டு முகாமுக்கு வந்திருந்தார். பசீரை இழுத்துக்கொண்டு போகையில் அவர் இடறி வீழ்ந்தபோது இரு ரெலோ உறுப்பினர்கள் அவருக்கு அடித்தனர். இவரும் சேர்ந்து உதைத்திருக்கிறார். பின்னர் தான் நிலைமை அவருக்கு விளங்கியது. " சீ இவங்களோட போய்ச் சேர்ந்தேனே உங்களுக்கு அடிச்சனே. உதைச்சனே" என்று சொல்லி தலையைக் குனிந்து கொண்டு விம்மி அழுதார். பசிருக்கு சங்கடமாகிவிட்டது. "அழாமல் இருங்கோ உங்களுக்குப் பிரச்சினையாகிவிடும்" என்று நிலைமையின் ஆபத்தைச் சுருக்கமாக விளக்கினார் பசீர். அதேவேளை அதிரடியாக எதாவது செய்ய முடியுமாயின் நிச்சயம் ஒருவரின் துணை கிடைக்குமென்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டது.

**கண்ணைக் கையைக் கட்டிய ரெலோவினர்**

பிற்பகல் முடியும் நேரம் "இனிச் சண்டையை நிப்பாட்டுறது கஷ்டம் தம்பிமாரே. நீங்கள் ஈரோசோட தொடர்பு கொண்டு எங்களை ஒப்படையுங்கோ. எங்களைத் தடுத்து வைத்திருக்கிற உங்களுக்கு மட்டும் எந்தப் பிரச்சினையும் வராமல் நாங்கள் பார்த்துக் கொள்ளுவம்" என்றார் பசீர். ஆனால் அவர்களின் விழியில் இருந்த பீதி போகவில்லை. வெளியே எங்கேயும் போய் எவரோடும் தொடர்பு கொள்ள முடியாத நிலை அவர்களுக்கு. முற்றுகை இன்னும் இறுகி தேடுதலில் ஈடுபடுவோரின் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. அந்த வீட்டின் ஓர் அறைக்குள் போய்க் குசுகுசுத்த இருவர் மாலையானதும் வெளியில் வந்து "இன்னும் அரை மணிநேரத்தில் உங்களை ஈரோசிட்ட ஒப்படைப்பம்" என்று சொல்லி முதலில் கண்ணைக் கட்டினர் - அடுத்து பின்புறமாகக் கைகளைக் கட்டினர். அடுத்து தமது கையை விட்டு வாயைத் திறந்து துணியை அடைத்தனர். அவர்கள் எடுத்து விட்ட முடிவு விளங்கிவிட்டது. இதுதான் தமது வாழ்வின் இறுதி நாள் என்பது இருவருக்கும் சந்தேகமில்லாமல் புரிந்து விட்டது. இருவரையும் பிடித்து நடத்திக்கொண்டு கொஞ்சத் தூரம் போய்த் தள்ளிவிட்டனர். விழுந்த இடம் ஒரு மண் தரை என்பது புரிந்தது . சுடுவதென்று முடிவெடுத்தாகிவிட்டது. சுட்ட பின் எந்த வழியாகத் தப்பியோடுவதென்பதே அவர்களது பிரச்சினை. மிகக்கிட்டிய தூரத்தில் புலிகள் நிற்பதால் சூட்டுச் சத்தம் கேட்டதும் மூன்றோ, நாலோ செக்கனுக்குள் அங்கு வந்து விடுவார் என்பதே நிலைமை.

கீழே தள்ளிய போது முரளியின் கண்கட்டு தளர்ந்து விட்டது. வாயில் அடைத்திருந்த துணியும் வீழ்ந்து விட்டது. தாங்கள் ஒரு மண் வீட்டில் அடைத்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்ட அவர் தனது வாயால் பசிரின் கட்டுக்களை அவிழ்த்து விட்டார். உடனே தனது கண்கட்டை அவிழ்த்து வாயிலிருந்த துணியையும் எடுத்து விட்டு முரளியின் கட்டுக்களை அகற்றினார் பசீர். அவரது காதின் அருகே வந்த முரளி இரவைக்குப் 12 மணிக்குத் தப்புவமோ" என குசுகுசுத்தார்.

"அரை மணித்தியாலம் சொல்லியிருக்கிறாங்கள் அதுக்குள்ளால எதாவது செய்யவேணும். கதவை உடைச்சுத் தப்புவம். ரெண்டு பேரும் ஒரே நேரத்தில உதைக்க வேணும் வண் ரூ திறி எண்டு சொல்லு நீ உதைக்க நானும் சேர்ந்து உதைப்பன்" என்றார் பசீர்.


அப்படியே செய்தார் முரளி, ஏக காலத்தில் ஒரே உதை. ஒரு மனிதன் தான் உயிர் தப்புவதற்காக உதைக்கும் உதையில் குதிரையின் வேகமும், யானையின் பலமும் இருக்கும். இப்போ ஒரே கணத்தில் உதைத்தனர் இருவரும். கதவைத் தாண்டிக் கொஞ்சத் தூரத்துக்கு அப்பால் போய் இருவரும் விழுந்தனர். உதையின் வேகம் மட்டும் காரணம் அல்ல. கதவு சப்புப்பலகையால் செய்திருந்ததை இவர்கள் கவனிக்க வில்லை.

விழுந்த வேகத்தில் எழும்பி ஓடத் தொடங்கினர். எங்கே போவதென்ற விடயத்தில் ஏற்கெனவே முடிவு கண்டிருந்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ராகவா இயக்கத்தில் ஆர்யா, கத்ரீன் தெரேசா உள்ளிட்ட பலரின் நடிப்பில் உருவாகிறது 'கடம்பன்'. மலைவாழ் மக்களையும் யானைகளையும் மையமாக வைத்து படம் எடுக்கப்படுகின்றது.

படத்தின் இறுதி சண்டைக்காட்சியை 70 யானைகளுடன் பாங்கொக்கில் படமாக்கியுள்ளனர். வரும் புத்தாண்டு தினத்தன்று படத்தை வெளியிட படக்குழு தீவிரமாக இறங்கியுள்ளது.




'தெறி' பட வெற்றியைத் தொடர்ந்து அட்லியின் இயக்கத்தில் இன்னமும் பெயரிடப்படாத படத்தில் நடிக்கிறார் விஜய்.

'விஜய் 61' என அழைக்கப்படும் இந்தப் படத்தில் 3 வேடங்களில் விஜய் நடிக்க காஜல் அகர்வால், சமந்தா, நித்யா மேனன் ஆகியோர் நாயகிகளாக நடிக்கின்றனர்.

இந்நிலையில் பாடல் காட்சிக்காக படக்குழு ராஜஸ்தான் சென்றுள்ளது. தற்போது கோடை காலம் என்பதால் அங்கு கடும் வெப்பம் நிலவுகிறது. ஆனாலும் அங்கேதான் பாடல் எடுப்பேன் என்ற அட்லியின் பிடிவாதம் விஜயை 'அப்செட்'டாக்கி உள்ளதாம்.



மலையாளத் திரையுலகின் முன்னணி நடிகர்கள், இயக்குநர்கள் நடிகைகளை வெளிப்படையாகவே உறவுக்கு அழைக்கின்றனர் எனப் பகிரங்கமாக சாடியிருக்கிறார் பார்வதி மேனன்.

என்னையும் சிலர் அவ்வாறு வெளிப்படையாக அழைத்தனர். நான் மறுத்துவிட்டதால் மலையாளப் படங்கள் எனக்குக் கிடைக்கவில்லை.

இதனால் நான் தமிழ், கன்னடப் படங்களில் நடித்து வருகிறேன். எனது சொந்த மண்ணிலேயே எனக்கு நேர்ந்த இந்த அவமரியாதை ஆச்சரியத்தை அளிக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜெயம் ரவி நடித்து வரும் 'வனமகன்' படத்தை வரும் மே 12 ஆம் திகதி வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

விஜய் இயக்கத்தில் உருவாகும் இந்தப் படத்தில் பழங்குடி இனத்தவராக ஜெயம் ரவி நடிக்கிறார். இதனால் தமிழகம், தாய்லாந்தின் அடர்காடுகளில் படம் காட்சியாக்கப்படுகின்றது.

அண்மையில் இணையத்தில் வெளியான படத்தின் டீஸர் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. அத்துடன் விடுமுறையை கருத்தில் கொண்டு மே 12இல் படத்தை வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.






"நிறைய குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றே விரும்புகிறேன்" என பிரபல இதழ் ஒன்றுக்குப் பேட்டியளித்திருக்கிறார் தீபிகா படுகோன்.

பொலிவூட்டின் முன்னணி நடிகையான இவர் அந்தப் பேட்டியில் மனம் திறந்து பல விடயங்களை தெரிவித்திருக்கிறார்.

இதில், "நான் பார்த்தவர்களில் மிகவும் பிரபலமானவர் ரென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர், லாலா லேண்ட், மன்செஸ்டர் பைத சீ படங்களைப் பார்த்து அழுதேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அஜீத் நடித்து வரும் 'விவேகம்' இறுதிக்கட்ட படப்பிடிப்பு பல்கேரியாவில் இடம்பெற்று வருகின்றது. இன்னும் சில நாள்களில் படப்பிடிப்பு முடிவடையவுள்ளது.

இதனிடையே படத்தின் டீஸரை தயாரிக்கும் பணியில் படக்குழு இறங்கியுள்ளது. டீஸரை அஜீத்தின் பிறந்ததினமான மே முதலாம் திகதி வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனிடையே அஜீத்தின் புதிய ஸ்டில் ஒன்றை இயக்குநர் சிவா சமூகவலைதளத்தில் வெளியிட்டு ரசிகர்களை மகிழ்ச்சியடைய வைத்துள்ளார்.



'இறுதிசுற்று' படம் மூலம் நாயகியாக அறிமுகமானவர் ரித்திகா சிங். நிஜத்திலேயே குத்துச் சண்டை வீராங்கனையான அவர் இப்போது 'வணங்காமுடி', 'சிவலிங்கா' படங்களில் நடித்து வருகிறார்.

இந்நிலையில் 'இறுதிசுற்று 'படத்தின் தெலுங்கு ரீமேக்கான குரு படத்தில் நடித்து முடித்திருக்கிறார்.

இந்நிலையில் அனுஷ்கா நாயகியாக நடிக்கும் தெலுங்கு படம் ஒன்றில் அக்ஷன் காட்சிகளில் ரித்திகா சிங் நடிக்கவுள்ளாராம்.



விஜய் சேதுபதியின் நடிப்பில் வெளியான 'கவண்' படத்தின் வசூல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் படக்குழு மகிழ்ச்சியடைந்துள்ளது.

படம் வெளியான முதல்நாளே இலங்கை மதிப்பில் சுமார் 8 கோடி ரூபா அளவில் வசூலித்துள்ளது. முதல் வாரத்திலேயே இலங்கை மதிப்பில் சுமார் 25 கோடி ரூபாவை வசூலித்தது.


இதனிடையே தியேட்டர்களில் காட்சிகள் அதிகரிக்கப்பட்டுள்ளமையால், இப்படத்தின் வசூல் இன்னமும் அதிகரிக்கும். இதனால் விஜய் சேதுபதியின் படங்களில் அதிக வசூலைப் பெற்ற படமாக இது அமைய சந்தர்ப்பம் உள்ளதாம்.

பிரியங்கா சோப்ராவின் திரை வாழ்வில் இனி இறங்குமுகமே இருக்காது எனக் கொண்டாடுகிறது பொலிவூட்.

அமெரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் 'புஜ்நெட்' என்ற இணையம் உலகிலேயே மிகவும் அழகான பெண் யார் என்ற கருத்துக் கணிப்பை நடத்தியது.

இதில் ஏஞ்சலினா ஜூலி, எம்மா வற்சன் ஆகியோரை பின்னுக்கு தள்ளி பிரியங்கா முந்தியுள்ளார். இதனால் ஹொலிவூட்டில் அவருக்குப் பெரும் வரவேற்பு கிடைக்கும் எனத் தெரிகிறது.

எல்லாம் சரி உலகின் மிகவும் அழகான பெண் பட்டத்தை வென்றவர் யார் தெரியுமா? ஹொலிவூட்டின் பிரபல நடிகையான பியான்ஸ்






ஓட்டப்பந்தய வீராங்கனையை மையப்படுத்திய கதையில் உருவாகும் படத்தில் நயன்தாரா நடிக்கவுள்ளார்.

நயன்தாராவின் நடிப்பில் வெளியான 'டோரா' படம் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை. தொடர் வெற்றிகளுக்கு மத்தியில் இப்படம் தோல்வியைத் தழுவியது அவரைப் பாதிக்கவில்லை.

இந்நிலையிலேயே ஒரு கல்லூரியின் கதை, மாத்தியோசி, அழகன், அழகி படங்களை இயக்கிய நந்தாபெரியசாமியின் இயக்கத்தில் ஓட்டப்பந்தய வீராங்கனையாக நயன்தாரா களமிறங்கவுள்ளார். இதற்காக ஓட்டப்பந்தய பயிற்றுவிப்பாளர் ஒருவரிடம் பயிற்சி எடுக்கவுள்ளாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரெலோ - புலிகள் மோதல்

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரபாகரனின் மைத்துனரும் போராளியுமான குப்புவின் வீட்டுக்கே போவதென குசுகுசுப்புக்களில் தீர்மானமாகியிருந்தது. இருட்டுக்குள் ஓடிய பசீர் ஒரு வேலிக்கருகில் தடக்கி வீழ்ந்தார். அவரை இரு கரங்கள் தூக்கின. இவ்வளவு கஷ்டப்பட்டு தப்பி வந்து திரும்பியும் ரெலோக்காரரிடம் பிடிபடுவதா என்ற ஆத்திரத்தில் தன்னைத் தூக்கியவரை தாக்கு தாக்கென்று தாக்கியடித்து வீழ்த்தினார்.

தொடர்ந்து அவர் ஓடிய வேகத்தை நேரக் கணிப்புக் கருவியில் கணக்கிட்டிருந்தால் சிலவேளை அது உலக சாதனையை மிஞ்சியிருந்தாலும் அதிசயப்படுவதற்கில்லை. ஆனாலும் பின்னால் துரத்திவரும் காலடிச் சத்தம் கேட்டது. பழம் வீதியில் ஏறும் நேரம் திரும்பிப் பார்த்தபோது பின்னால் வருவது முரளிதான் எனத் தெரிந்தது.

“அட நீயே ! உன்னையா நான் அடிச்சு விழுத்தினனான். நீ சொல்லியிருக்கலாமே. இருட்டுக்கை எனக்குத் தெரியாமல் போச்சு. மன்னிச்சுக்கொள்!” என்றார் பசீர். “ இப்ப அதுவே பிரச்சினை? முதல்ல தப்புற வழியப் பார்ப்போம்” என்றபடி அவரைக் கூட்டிக்கொண்டு போனார் முரளி .


லண்டனில் இருந்து தேசத்தின் குரல் பாலா அண்ணரின் தொடர்பு மூலம் புலிகளின் இந்தியா முதலாவது பயிற்சி முகாமில் புடம்போடப்பட்டவர் இவர். கல்வியங்காடு தமது கோட்டை என்று கருதிய ரெலோவினர் அந்தப் பகுதி பிரதேசப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த இவர் மீது கடும் கோபம் கொண்டிருந்தனர். அதனால்தான் முதலில் இவரைக் கைது செய்திருந்தனர். அடுத்து பசீரைப் பிடித்திருந்தாலும் ஒப்பீட்டளவில் அன்று கூடுதலான அடி உதைகள் வாங்கியவர் இவர். இது போதாதென்று தானும் இவரைத் தாக்கிவிட்டோம். என்ற மன உளைச்சல் பசீருக்கு. முரளிக்கு கூடுதல் அடிவிழுந்ததில் இன்னொரு விடயமும் இருந்தது.

கடற்படையினரால் தாக்கப்பட்ட படகில் இருந்த புலிகளின் அப்போதைய மட்டக்களப்பு பொறுப்பாளர் கல்வியங்காட்டைச் சேர்ந்தவர். இந்தச் சம்பவத்துக்கு ஓரிரு நாட்களுக்கு முன்னர்தான் ரெலோவினரின் படகொன்று மூழ்கடிக்கப்பட்டு அதிலிருந்த அனைவரையும் இழந்திருந்தது ரெலோ. அவர்களுக்கான அஞ்சலி - வீரவணக்கங்களில் பெருமளவு ஆர்வம் காட்டாத மக்கள் புலிகளின் படகிலிருந்தோர் விடயத்தில் மிக ஈடுபாட்டுடன் நடந்து கொண்டனர். இது சம்பந்தமாக மக்களுடன் ரெலோவினர் முரண்பட்டுக்கொண்டனர். மக்களின் புலிகளின் மீதான பற்றுக்கு பிரதேசப் பொறுப்பாளரான முரளியே காரணம் என்ற கடுப்பில் இருந்தனர். அரியாலைச் சம்பவம் அவர்களுக்கு ஒரு வாய்ப்பாகப் போய்விட்டது.

பதுங்கிப் பதுங்கி ஒரு வீட்டுக்குள் சென்றனர் இருவரும். முற்றத்தில் மின் வெளிச்சத்தில் ஓர் அண்ணனும் தங்கையும் நின்றனர். அவர்களை நோக்கிச் சென்ற இவர்கள் “வெளியில ஆர் நிக்கிறது?” என்று கேட்டார். “நீங்கள் ஆர்?” எனக் கேட்டார் அந்தத் தங்கை. 'ரைகேர்ஸ்' எனப் பதிலளித்தார் முரளி. “ரைகேர்ஸ் எண்டால் ஏன் பயப்பிடுறீங்கள்?” என்று கேட்டனர் அவர்கள். தொடர்ந்து “ரைகேர்ஸ் தான் வெளியில நிக்கினம்” என்றனர். “வெளியில நிக்கிறது அவைதானென்டா அவையிட்ட இண்டைக்குப் பிடி பட்டவை தப்பி வந்திட்டினம் எண்டு சொல்லி ஓர் இயக்க ஐசி (அடையாள அட்டை) வாங்கிக்கொண்டு வாங்கோ” என்று இருவரும் சொல்லி அனுப்பினர்.

அனுப்பிய பின்னர்தான் இத்தகவலை சில வேளை ரெலோவினரிடம் சொல்லிவிட்டால் என்ன செய்வதென்று எண்ணினர். அந்த வீட்டின் பிளாற்றின் மீது ஏறிப்படுத்து அவதானித்துக்கொண்டிருந்தனர். வெளியே சென்ற இருவரும் முற்றுகையில் ஈடுபட்டோரிடம் விடயத்தைச் சொன்னார்கள். அடையாள அட்டை ஒன்றைக் கொண்டுவந்தார்கள். அவர்களின் கையில் மஞ்சள் நிற அடையாள அட்டையைக் கண்டதும் வெளியே நிற்பது புலிகள்தான் என உறுதியாயிற்று. கிளிநொச்சியைச் சேர்ந்த கமல் என்ற போராளி உறுப்பினரின் அடையாள அட்டை அது.

மேலே இருந்து கீழே குதித்து அதனைப் பெற்றுக்கொண்டனர் இருவரும். சற்றுத் தள்ளி போராளிகள் நிற்பதைக் கண்டதும் அவர்களுடன் இணைந்துகொண்டனர். அப்போதுதான் சரா மாட்டியதும் பின்னர் தப்பிய விடயமும் தெரியவந்தது. எல்லாம் முடிந்த பின்னர்தான் உடல் வலி தெரிந்தது. உடனடியாக அச்செழுவிலுள்ள முகாமுக்கு பசீர் கொண்டு செல்லப்பட்டார்.



அங்கு ஓர் அறையில் சரணடைந்த ரெலோ உறுப்பினர்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர். வலியால் முனங்கிய பசீருக்கு சுடுநீர் ஒத்தடம் கொடுத்தனர் அவர்கள். பரிவோடு கவனித்தனர். அடுத்த நாள் காலை அவர்களுக்கு நன்றி சொல்லி விட்டுப் புறப்பட்டார் பசீர் .

முற்றுகை தொடர்ந்து கொண்டிருந்தது. சிறி சபாரத்தினம் எங்கே எனத் தெரியவில்லை. ஏப்ரல் முதலாம் திகதி இருபாலை மற்றும் இராச வீதிகள் சந்திக்கும் இடத்தில் நின்ற போராளிகளோடு பசீர் உரையாடிக்கொண்டிருந்தார். அவ்வேளை ஒரு அரைச் சைக்கிளில் ரெலோவினருக்கு உளவு பார்த்துச் சொன்ன பையன் வந்துகொண்டிருந்தார். சைக்கிளை மறித்த பசீர் “என்ன தம்பி ரைகேர்ஸ் எங்க இருக்கின எண்டு பார்த்துச் சொல்லவா வந்தனீர்” என்று கேட்டார். அவ்வளவுதான் “சிர்க்” என்று ஒரு சத்தம் கேட்டது. காற் சட்டையுடன் வெளியேற வேண்டியது வெளியேறிவிட்டது. முழி பிதுங்கி நின்ற பையனை அழைத்துக்கொண்டு போய் சந்தியின் மூலையில் இருந்த வீட்டுக்கு வெளியே வைத்து தண்ணீர் ஊற்றிச் சுத்தப்படுத்திக்கொண்டு வந்தார் ஒருவர். அவர் பசிருக்கு ஏற்கனவே அறிமுகமானவர். அவரிடம் பையனின் வீட்டுக்குறிப்பைச் சொல்லிச் சம்பவத்தினத்தன்று என்ன நடந்தது என்பதையும் விளக்கி தகப்பனிடம் இனி இந்த வேலைகளைச் செய்ய சிறுவனை அனுமதிக்க வேண்டாமெனத் தான் கேட்டுக்கொண்டதாக தெரிவிக்குமாறு கூறினார்.

மேலும் தனக்கும் முரளிக்கும் கண்ணையும் கைகளையும் கட்டி வாயில் துணியை அடைக்கும் வரை பார்த்துக்கொண்டு நின்றவர் இவரது தந்தை என்றும் இப்படிச் செய்யவேண்டாம் என ரெலோவினரை அவர் கேட்கவில்லை எனவும் சொன்னார்.

06 .05 .1986 அன்று காலை ஜமுனா வீதிப் பக்கமாக சிறி சபாரத்தினம் மறைந்திருப்பதாகத் தகவல் கிடைத்தது. இதனை உறுதிப்படுத்த முத்திரைச் சந்தைப் பகுதிக்குப் புலிகளின் அப்போதைய புலனாய்வு - விசாரணை நடவடிக்கைகளுக்கு பொறுப்பான ஐடியா வாசு போனார். அங்கே மேலும் இரு தகவல்கள் கிடைத்தன. ஒன்று காரைநகர் பகுதி - மற்றது கோண்டாவிலில் உள்ள புகையிலைத் தோட்டம்.

கோண்டாவில் பற்றிய தகவல்களை வழங்கியவர். ஏற்கெனவே பல நம்பகரமான விடயங்களைத் தெரியப்படுத்தியவர். எனவே இடத்தைச் சரியாக உறுதிப்படுத்திய பின் கோண்டாவிலை நோக்கி நகருமாறு வாசு கூறினார். சரியான இடத்தை முற்றுகையிட்டனர் புலிகள்.

**சிறியை விட்டு தப்பிய பொபி**

வாகனச்சத்தத்தையும், ஆட்கள் இறங்குவதையும் அவதானித்த ரெலோவினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். சண்டை தொடங்கும் போது சிறி சபாரத்தினத்தின் வசமிருந்த பிஸ்டலைப் பறித்துக்கொண்டு பொபி எப்படியோ தப்பி ஓடிவிட்டார். நித்தி, சின்ன வறுவா, திருமலையைச் சேர்ந்த இன்னொருவர் என மூவர் கைதாகினர்.

புகையிலைக் கன்றுகளுக்குகிடையே சிறி சபாரத்தினம் இருந்தார். அப்போது அவர் பலியாக நேர்ந்தது. சம்பவ இடத்துக்கு கிட்டுவும் வந்திருந்தார்.

உரும்பிராய் கோவிலடிக்கு சிறி சபாரத்தினத்தின் சடலம் கொண்டுவரப்பட்டது. காயமடைந்த சின்னவறுவா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். நித்தியும் , திருமலையைச் சேர்ந்தவரும் தொடர்ந்து அங்கே தடுத்து வைக்கப்பட்டு இருந்தனர். திருமலை உறுப்பினர் தொடர்ந்து அழுது கொண்டிருந்தார். பிரேதப் பெட்டி எடுக்க வாகனம் சென்றிருந்தது. அப்போது சாப்பாட்டுப் பார்சல்கள் வந்தன. எவ்வளவோ வலியுறுத்தியும் திருமலை உறுப்பினர் சாப்பிட மறுத்து விட்டார்.

ஆனால் நித்தி எவ்வித பாதிப்பு மில்லாமல் சாப்பிட்டார். கடைசியாக பார்சல் பேப்பரை எறிந்து விட்டு கைகழுவும் போது பசீரைப் பார்த்து நித்தி கேட்டார். “நான் உங்கட இயக்கத்தில சேரட்டோ?” பதில் கிடைத்தது பசீரிடமிருந்து.

“உங்களைக் கடைசிவரை எங்கட இயக்கத்தில சேர்க்கமாட்டம். எத்தனை ஆயிரம் பேர் கொண்ட இயக்கத்தில தனக்கு நம்பிக்கையான ஆள் எண்டு நினைச்சுத்தானே சிறீயண்ணை கடைசி வரை தன்னோட வைச்சிருந்தவர். அவற்ற பொடி (body) கிடக்கேக்கை [illegible] சாப்பிட்டியே? நீயெல்லாம் என்ன மனுஷன்? என்னுடைய விடயத்தில அவர் பிழை விட்டிருக்கலாம். ஆனா நாங்கள் ஒண்டா இருந்து சாப்பிட்டு பழகின நாள்களை நான் மறப்பதற்கு இல்ல. இண்டைக்கு முழுக்க என்னால சாப்பிட ஏலாது. என்னைப் பிடிக்கேக்கை உன்னை எனக்குத் தெரியாது. பிறகுதான் மற்றவை சொன்னவை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குப் பேசுறத்துக்காக கூப்பிட்டு தாஸை சுட்ட ஆக்களில நீ தான் முக்கியமானவன் எண்டு. இண்டைக்குத் தாஸ் இருந்திருந்தால் அவருடைய உயிர் போன பிறகுதான் சிறீயண்ணாவின் உயிர் போயிருக்கும். ஆருக்காக சிறீயண்ணை தாஸைக் கொல்ல முடிவெடுத்தாரோ அந்தப் பொபி கடைசியில சிறீயண்ணையை விட்டு ஓடிட்டான். அவனும், நீயும் ஒண்டுதான்” என்று கூறிவிட்டு நகர்ந்தார். முழித்து நின்றார் நித்தி. எது எப்படி இருந்தாலும் அந்தத் திருமலைப் பையன் பசீரின் மனதில் உயர்ந்து நின்றார்.

**விடுதலைக்கு வேண்டுகோள்**

சில நாள்களின் பின் இந்த நித்தியின் தாயாரை மட்டக்களப்பு தபால் நிலையத்தில் பணியாற்றுபவர் என்று சொல்லி ஒருவர் பசீருக்கு அறிமுகப்படுத்தினார். தனது மகனின் விடுதலைக்காக அவர் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவரைப் பார்த்து நம்பிக்கைத் துரோகமான முறையில் தாசை ஆஸ்பத்திரிக்குள் சுட்டவர் உங்களது மகன் என்று சொல்ல பசீருக்கு மனம் வரவில்லை. தனது மனதில் மகனைப் பற்றிய என்ன பிம்பம் உள்ளதோ அப்படியே அந்தத் தாயிடம் இருந்துவிட்டுப் போகட்டும் என முடிவெடுத்தார். தனக்கு உணவளித்த, பாதுகாத்த மட்டக்களப்பு மக்களை நன்றியுடன் நினைவு கூர்ந்தார். நித்தியைச் சாத்தியமான விரைவில் விடுவிக்குமாறு ஐடியா வாசுவை கேட்டுக்கொண்டார்.

• • •

**கடவுளின் விலகல்**

வேறொரு இயக்கம் மீதான தாக்குதலில் தனக்கு உடன்பாடில்லை எனத் தெரிவித்து இந்தக் காரணம் ஒன்றுக்காகவே தான் இயக்கத்தை விட்டு விலகுவதாக வெளிப்படையாக தெரிவித்தார் ஒரு போராளி. அவரது பெயர் கடவுள் (அமிர்தராஜ் , கல்லாறு) கிழக்குப் பல்கலைக்கழக மாணவனாக இருந்த இவர் இந்தியாவில் முதலாவது பயிற்சி முகாமுக்கு அனுப்பப்பட்டவர் விடுதலைப் புலிகள் பத்திரிகையின் உருவாக்கத்தில் நித்தியானந்தனுக்கு உதவியாக இருந்தவர். சண்டைக் களங்களில் தனது துணிச்சலை நிரூபித்தவர். அரசியல் பணிகளில் மிகவும் ஈடுபாட்டுடன் செயற்பட்டவர். மக்கள் மனதில் மிக ஆழமாகப் பதிந்தவர். நேர்மையாகத் தனது கருத்தைப் பதிவு செய்தமைக்காக அவரது விலகலுக்கு மதிப்பளிக்கப்பட்டது.

மண்முனைத் துறையில் வைத்து ஒரு நாள் இவர் விசேட அதிரடிப் படையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். சரத்துடன் பெரிய குடையும் கொண்டுபோன இவர் பதற்றப்படாமல் சைனைட்டை மறைத்து விட்டார். தான் ஒரு முஸ்லிம் என நம்பவைத்து மாடு வாங்கவே இவ்விடத்துக்கு வந்ததாகப் பொலிஸ் நிலையத்தில் தெரிவித்து விடுதலையாகி வந்தார். இவர் கைதானதும் ஆரையம்பதி ஆலையடி வைரவர் முன்னிலையில் நீதான் அந்தப் புள்ளையை கொண்டுவரவேண்டும் என உரிமையுடன் சில தாய்மார் வைரவரிடம் உரத்துச் சத்தமிட்டனர். (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலை மறைவில் கொலைக்களம்




கொலைகார மனிதர்களை அறிந்திருப்பீர்கள் . கொலைகார மரம் பற்றி அறிந்திருக்கிறீர்களா ? நியூசிலாந்து, ஹவாய் தீவுகள் என்று ஆரம்பித்து இன்று இந்தியா வரை பரந்துள்ள இந்த வகை மரங்களை பட்சிகளைப் பிடிக்கும் மரங்கள் என்று அழைக்கிறார்கள். இவை பசைத்தன்மையுடைய விதைகளைக் கொண்டிருப்பதால் பல பூச்சிகள் இவற்றில் ஒட்டிக்கொள்கின்றன. இந்தப் பூச்சிகளை உண்ண இதன் கிளைகளில் வந்து அமரும் பட்சிகளின் கால்கள் கொடுக்கும் அழுத்தம் இவற்றை பசைத்தன்மை கொண்ட கிளைகளில் ஒட்டிக்கொள்ள வைத்து விடுகின்றன. சாப்பாட்டுக்கு என்று வந்த பறவைகள் இப்படி மாட்டிக்கொள்ள ,மாமிசம் உண்ணும் பறவைகள் இவற்றைப் பிடித்து உண்டு விடுகின்றன . இப்படி உண்ணப்படாத பறவைகள் இறந்து காய்ந்து பின்பு மரத்தடியில் விழுந்து சிறு சிறு எலும்புத் துண்டுகளாகக் கிடப்பதுண்டு.

இந்த ஒட்டும் தன்மை கொண்ட விதைகள் மூலம் பட்சிகளைக் கொல்வதால் மரங்களுக்கு என்ன இலாபம் என்று ஆய்வு செய்தார்கள். தன் இனத்தைப் பெருக்க பறவைகள் இன்னொரு இடத்துக்கு போகமுடியாதபடி மரத்திலேயே கொல்லப்பட்டு விடுகின்றனவே என்று ஆராய்ந்ததில் இறந்து மரத்தடியில் விழும் பறவைகள் மரத்தின் வளர்ச்சிக்கு நல்ல உரமாக அமையலாம் என்று ஒரு காரணத்தைச் சொன்னார்கள். வேறு சில காரணங்களைக் கூறினார்கள். ஆனால் எதுவுமே ஏற்புடையதாக இல்லை .

கடல் பறவைகள் இந்த மரத்தால் பெரிதும் ஈர்க்கப்படுகின்றன என்கிறார்கள். வருடாவருடம் ஆயிரக் கணக்கான கடல் பறவைகள் இந்த ஒட்டும் விதைகளில் சிக்கி உயிரிழந்து வருகின்றன என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

கடந்த காலங்களில் இந்த மரத்தை வளர்ப்பதை அடியோடு தடை செய்து ஒழிக்க வேண்டுமென பறவைகளை நேசிப்போர் குழுமம் கோரியுள்ளது. விதைகள் உள்ள பகுதியைக் கத்தரித்து விட்டால் இந்த அநியாயச் சாவுகள் தவிர்க்கப்படலாமே என்கிறார்கள் இவர்கள்!

# கொல்வதற்கு ஒரு கோலம்



ஓர் உயிரை மாய்ப்பதும் பின்பு அதன் ஞாபகார்த்தமாக பச்சை குத்திக் கொள்வது பற்றியும் அறிந்துள்ளீர்களா? இது திரைப்படக் கதை அல்ல. இந்தியாவின் மூர்க்கத்தனமான நாகர் என்ற இனத்தவர்கள் இன்று மெல்ல மெல்ல அழிந்து வரும் இனத்தவர்களாகி இருக்கின்றார்கள் . வெற்றிக் கேடயங்களை நாம் வீட்டில் காட்சிப் பொருளாக வரிசைப்படுத்தி வைப்பதுபோல தாம் கொன்ற ஒவ்வொரு எதிரியின் மண்டையோட்டையும் அடுக்கிவைத்து அழகு பார்ப்பது இவர்கள் வழக்கத்தில் இருந்துள்ளது.

போர்க்களத்தில் எதிரியைக் கொன்றதும் அவன் தலையைக் கொய்து கூடைகளில் இவர்கள் தம் வீட்டுக்கு எடுத்துச் செல்வார்கள். பின்பு இது காட்சிப் பொருளாகி விடும் .

ஒருவரைக் கொன்றதும் உடலில் பச்சை குத்திக் கொள்வார்கள். நீக்கமற பச்சை குத்திய உடலுடன் வலம்வரும்போது தங்கள் வீரத்தை நினைத்து இவர்கள் எப்பொழுதுமே பெருமைப்பட்டுக் கொள்வதுண்டு.

இன்று இந்த இனத்தவர்கள் அருகி வந்தாலும் இவர்கள் உச்சத்தில் இருந்த காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மண்டையோட்டு வீடு இருந்தது. இந்த வீட்டுக்குள் வைக்க, ஒவ்வொரு கிராமத்தவர்களும் தம் எதிரியைக் கொன்று அவன் தலையை இந்த வீட்டு கொடுத்தாக வேண்டும்.

இன்றும் இவர்களில் சிலர் காணப்படுகிறார்கள். ஆனால் இவர்கள் நம் தலையை அறுக்குமளவுக்கு இன்றில்லை என்கிறார் இவர்களை நேரில் படம்பிடித்த ஒரு பிரித்தானிய படப்பிடிப்பாளர் .

சரித்திரத் தகவல்களின்படி இறுதியாக 1970இல் பலர் கொல்லப்பட்டு தலைகள் கொயயப்பட்டுள்ளன. இந்த இனத்தவர்களிடையே ஏனைய சில இனத்தவர்களைப் போல நர மாமிசம் உண்ணும் வழக்கம் இருந்ததில்லை என்று சொல்லப்படுகின்றது.

உடல் நிறையப் பச்சை குத்திக்கொண்டு மிடுக்கோடு, பல பதக்கங்களோடு நிற்கும் இராணுவ உயர் அதிகாரிகள் போல நின்ற இவர்களைப் பேட்டி கண்டதில் நமக்குக் கிடைத்த தகவல்கள்தான் இவை! கொல்லுவதற்கு(உடம்பில்)கோலமிடும் இவர்கள் வித்தியாசமானவர்கள்தான் !

புதினப்பூங்கா
ராஜேஷ்மணாளன்

# ஆள் பாதி அணிகலன் மீதி

ஆடை பாதி ஆள் பாதி என்பது போல, பெண்கள் அழகுக்கு ஆள் பாதி அணிகலன் மீதி என்று சொல்லி விடலாம். அந்த அளவுக்கு மங்கையர் மோகம் நகைகளில் இருக்கின்றது.

அதிலும் வைரம் பதித்த நகைகள் என்றால் அழகிகள் அடையும் ஆனந்தத்துக்கு அளவே இல்லை.

அப்படியொரு பெரிய ரோஜா வர்ண வைரம் 71.2 மில்லியன் டொலருக்கு ஏலத்தில் விற்பனையாகி சாதனை படைத்துள்ளது . 59.6 கரட் எடை கொண்ட இந்த வைரம்தான் ஓர் ஏல விற்பனையில் இந்த அளவு அதிக விலைக்கு விற்பனையாகி சாதனை படைத்துள்ளது .


உலகப் பிரசித்தமான 'சொதெபி' நிறுவனம் ஹாங்காங்கில் நடத்திய ஏல விற்பனையில்தான் இச்சாதனை படைக்கப்பட்டுள்ளது.

2013இல் இதே வைரம் இதே ஏல விற்பனை நிறுவனத்தால் ஏலத்தில் ஒருவரால் 83மில்லியன் டொலருக்கு வாங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்தக் குறித்த நபர் இதை வாங்கவில்லை.

மிக முக்கியமான வைரங்களின் ஏல விற்பனை ஜெனிவா நகரிலேயே இடம்பெற்று வருகின்றன . Oppenheimer Blue என்று அழைக்கப்பட்ட பட்டை தீட்டப்பட்ட வைரம்தான் இதுவரையில் அதிக விலைக்கு விற்கப்பட்ட வைரமாக ஜொலித்து வந்தது. கிறிஸ்டீ ஏல விற்பனை நிலையம் (இது இன்னொரு உலகப் புகழ்பெற்ற ஏல விற்பனை நிறுவனம் ) 57.5மில்லியன் டொலருக்கு இதை விற்பனை செய்திருந்தது.

இந்த விற்பனையை அடுத்து 'சொதெபி' நிறுவனம் உலகின் இரண்டாவது மிகப் பெரிய வைரமான Lesedi La Rona என்ற வைரத்தை குறைந்த பட்சம் 70மில்லியன் டொலருக்காவது விற்கவேண்டும் என்று முயற்சித்தது. ஆனால், வாங்க ஒருவர் கிடைக்கவில்லை.

தற்பொழுது விற்கப்பட்ட ரோஜா வர்ண வைரம் பட்டை தீட்டுப்பட ஏறத்தாழ இரண்டு வருடங்கள் எடுத்துள்ளது. 2003 இல் இது முதல் தடவையாக மக்கள் பார்வைக்கு விடப்பட்டது. லண்டனின் பிரபல்யமான சரித்திர கண்காட்சியகத்திலும் இது பார்வைக்கு விடப்பட்டது .




27.78 கரட் ரோஜா வர்ண வைரமொன்றை 2010இல் இந்த ஏல நிறுவனம் ஜெனிவா நகரில் 46.16மில்லியன் டொலருக்கு விற்பனையானதே இதுவரையில் இந்த நிறுவனத்தின் சாதனையாக இருந்துள்ளது.

அலங்காரம் என்று ஒன்று இருக்கும்வரை அணிகலன்களின் விலைமதிப்பு என்றுமே குறையப்போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த தலைமுறைக்கான இணைய முதுசொம் விக்கிபீடியா



## தமிழ் விக்கிபீடியா மயூரநாதன்



நேர்காணல் : கணபதி சர்வானந்தா

இணையத்தில் தமிழுக்கு ஒரு சாம்ராஜ்ஜியத்தையே உருவாக்கியிருக்கிறார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மயூரநாதன். அதற்காக அவருக்கு தென்னிந்தியாவிலிருந்து வெளிவரும் பிரபல வார இதழான 'ஆனந்த விகடன்' பத்திரிகை 2016ஆம் ஆண்டின் உலகின் முதல் தர பத்து தமிழர்களில் ஆறாமவராக தரவரிசைப்படுத்தியது. அதற்கான விருதை 30.03.2017 அன்று சென்னையில் பெற்றுக்கொண்டார். எமது மண்ணின் மைந்தரான இவர் பற்றியே இன்று தமிழ் உலகம் பேசிக்கொண்டிருக்கிறது. கனேடியத் தமிழ் இலக்கியத் தோட்டமும், ரொறன்ரோ பல்கலைக்கழகத் தென்னாசியக் கழகமும் இணைந்து 2015 ஆம் ஆண்டுக்குரிய வாழ்நாள் சாதனையாளர் விருது (இயல் விருது) வழங்கியிருந்தன.

2001 இல் ஆங்கில மொழியிலான விக்கிபீடியா ஆரம்பிக்கப்பட்டபோது, அதன் தொழில் நுட்பத்தின் ஊடாக உலகம் எட்டப்போகின்ற அறிவு வளர்ச்சி பற்றி அறிந்து கொண்டவர் மயூரநாதன். அந்த இணையத்தின் மீதான கவனிப்பும், அவதானமும் அவரைப் பலவாறு சிந்திக்க வைத்தது. அதே போன்று தமிழுக்கு ஒரு விக்கிபீடியா இருக்குமானால் தமிழ் ஆர்வமுள்ள பலருக்கும், தமிழை அறிய ஆர்வம் கொண்ட பலருக்கும் அது எவ்வளவுக்கு உறு துணையாக இருக்கும் என்று சிந்தித்ததன் விளைவு, 2003 இல் தமிழ் விக்கிபீடியா உதயமாயிற்று. பொது வெளிக்கு அதனை கொண்டு செல்லமுன் ஏறத்தாழ ஒரு வருட காலமாகத் தனித்து நின்று அதற்காக உழைத்தவர் அவர். அந்த இணையப்பணிக்கான ஒரு வலுவான தளத்தை அமைக்கும்வரை அவரது தனித்த செயற்பாடுகள் தொடர்ந்தன.

பின்னர் படிப்படியாகத் திறமையாளர்களை அதனுள் ஒருங்கிணைப்பதன் மூலம் தமிழ் விக்கிபீடியா என்ற அந்த முயற்சி விரிவாக்கப்பட்டது. அதை ஒரு குழு நிலைக்கு உயர்த்துவதில் வெற்றியும் கண்டார்.

இலங்கையில் வண்ணார்பண்ணை என்னுமிடத்தில் பிறந்தவர் மயூரநாதன் . கட்டடக்கலையில் முதுநிலை பட்டம் பெற்ற பின்னர் கொழும்பில் 17 ஆண்டுகள் பணியாற்றினார். 1993 இல் டுபாய்க்குப் புலம்பெயர்ந்தவர் தமிழ் அறிவியல் துறையில் கட்டுரைகள் எழுத ஆரம்பித்தார். தற்பொழுது ஆவணப்படுத்துகின்ற முயற்சியினூடாகத் தமிழுக்கு தனது தொண்டுகளைச் செய்துகொண்டிருக்கிறார்.

முகநூலில் முகம் புதைத்து காலத்தையும், நேரத்தையும் வீணாக்கிக் கொண்டிருக்கின்ற இளைஞர்களே! இனி உங்கள் கைவிரல்கள் தமிழ் விக்கிப்பீடியாவைத் தோண்டட்டும். அதனால் தமிழ் மொழிக்கும் அது சார்ந்த துறைக்கும் ஏதாவது விதத்தில் பங்காற்றியவர்கள் என்ற பெருமையாவது மிஞ்சும்.

மயூரநாதனுடனான நேர்காணல் தொடர்கிறது

**கேள்வி :** தமிழ் விக்கி பீடியாவை உருவாக்க வேண்டும் என்று ஏன் நினைத்தீர்கள்?

**பதில் :** ஒரு மொழிக்குக் கலைக் களஞ்சியம் என்பது காலத்தின் தேவை. அறிவை ஓரிடத்தில் திரட்டி வைப்பது முக்கியமானதென்பது நீண்ட காலமாக உணரப்பட்டதொன்று. ஆனால் அதற்கான வளங்களற்றதனாலும் வாய்ப்புகளற்றதனாலும் முயற்சிக்காமல் இருந்துவிட்டோம். வணிக ரீதியில் இதைச் செய்ய முடியாதென்பதனால் யாரும் முயற்சிக்க வில்லை. என்னைப் பொறுத்தவரை இதை ஒரு சமூகக்கடமையாகத்தான் பார்க்க வேண்டும். தற்போதுள்ள காலகட்டத்தில் சமூகத்தின் தேவைகளில் இதுவும் ஒன்று என்பது எனது கருத்து. அதிலே நம்பகத்தன்மை கூடக் குறைய என்ற கருத்தைவிட, இந்த முயற்சியின்போது நாங்கள் விதைக்கின்ற விதைகளிலிருந்து தொடர்ந்து சிந்திப்பதற்கு ஒருவனுக்கு ஒரு தளம் அமைத்துக் கொடுத்திருக்கிறோம். பலருக்கு கால்களை ஊன்றி எழுந்து நிற்பதற்குரிய வாய்ப் பாகவும் இது பயன்பட்டுக் கொண் டிருக்கிறது. அண்மையில் கிடைக்கப்பெற்ற தரவின்படி 3.9 மில்லியன் ஆர்வலர்கள் இந்தத் தளத்தைப் பார்த்திருக்கிறார்கள். இதில், இன்றைய இற்றைப் படுத்தலின்படி மொத்தம் 93,229 கட்டுரைகள் உண்டு. அதில் 4631 கட்டுரைகள் என்னால் தொடங்கப்பட்டவை. அதுவும் பதிவு செய்யப்பட்ட பாவனையாளர்கள் 1,11,101 பேர் இருக்கின்றனர். நிரந்தர பங்களிப்பை 292 பேர் இதுவரை வழங்கியிருக்கின்றனர். உலகப் பன்மொழித்திட்டத்தில் இன்றைய நாளில் 291 மொழிகளில் விக்கிப் பீடியாக்கள் இயங்குகின்றன. அதில் தமிழ் விக்கிப்பீடியா 59 ஆவது இடத்திலிருப்பது பெருமைக்குரிய விடயம். மொத்தம் 7,651 கோவைகள் இருக்கின்றன. விக்கிப்பீடியாவின் எதிர்பார்ப்பு என்னவென்றால் Get Involved அதாவது உங்களை இணைத்துக் கொள்வது என்பதுதான்.

**கேள்வி :** விக்கிபீடியாவை எப்படிச் செயற்படுத்துவது அல்லது அதில் எப்படி செயலாற்றுவது அல்லது எத்தகைய விதத்தில் அதில் பங்களிப்புச் செய்வது என்று சொல்லுவீர்களா?

**பதில் :** இதை ஒரு கூட்டு முயற்சி என்று தான் சொல்ல வேண்டும். மற்ற விடயங்களைப்போல வல்லுநர்கள் மாத்திரம் கூடிச் செய்கின்ற ஒரு விடயம் அல்ல. யார் வேண்டுமென்றாலும் பங்குபற்றலாம். ஒரு ஐந்தாம் ஆண்டு மாணவர் தொடக்கம் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பேராசிரியர் வரை தமது பங்களிப்பைச் செய்யலாம். அதுவும் இதிலுள்ள ஒரு விசேடம் என்ன வென்றால், ஒரு கட்டுரையை அல்லது உங்கள் கருத்தை ஒரு பத்திரிகைக்கு எழுதும்போது முழுவதுமாக எழுதி முடித்துவிட்ட பின்னரே கட்டுரையைப் பிரசுரிக்கலாம். இது அப்படியல்ல. நீங்கள் உங்கள் கருத்தை அல்லது நீங்கள் விரும்பும் விடயத்தை ஒரு வசனத்தில் கூட எழுதிவிட்டும் விடலாம். உங்களுக்கு உவந்த ஒரு விடயத்தை அல்லது அறிந்த விடயத்தை தொடங்கி விட்டும் விடலாம். ஓர் அறிவுப்பொறியை உண்டாக்கலாம். உதாரணத்துக்கு நல்லூர் கந்த சுவாமி கோவில் நல்லூரிலுள்ளது என்று தொடங்கி விட்டுவிடலாம். பின்னர் வேறோருவர் அந்தப் பகுதிக்கு வந்து நல்லூர் உற்சவம் ஓகஸ்ட் மாதத்தில் வரும் என்றொரு பதிவைத் தொடர்ந்து விட்டு விடுவார். இப்படியே நல்லூர் பற்றித் தனக்கு தனக்குத் தெரிந்த விடயத்தைச் சேர்த்தும் அதில் பிழைகள் இருப்பின் திருத்தியும் அல்லது தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தும் அந்தக் கட்டுரையை மெருகூட்டி மக்களுக்கு வழங்க முடியும். முற்று முழுதான நம்பகத்தன்மையுள்ள ஒரு கூட்டுத் தகவல்களை அமைத்து, தமிழ் உலகுக்கு வழங்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு. அத்துடன் புகைப்படக் கலைஞர் ஒருவர் அது பற்றிய படங்கள் கிடைக்கும் பட்சத்தில் அந்த பக்கத்தில் கொண்டுவந்து இட்டு உதவலாம். எனவே அந்தமாதிரித்தான் விக்கிபீடியா வளர்ந்து கொண்டு வருகிறது.

**கேள்வி:** விக்கிபீடியாவுக்கும் என்சைக்கிளோபீடியாவுக்கும் (கலைக்களஞ்சியத்துக்கும்) ஏதாவது ஒற்றமை உண்டா? இதிலே எது அதிகம் நன்மை பயக்கும் ?


**பதில் :** உதாரணத்துக்குச் சொல்லப் போனால், கலைக் களஞ்சியத்தில் அச்சிலே வரும் விடயங்களைப் பொறுத்தவரை, அதிலே தவறுகள் அல்லது விடுபடல் ஏற்பட்டால், அடுத்து வரும் பதிப்பிலே தான் திருத்த முடியும். விக்கிபீடியாவில் தவறு அல்லது பொருள் விடுபட்டதெனக் கண்டால், உடனடியாக அந்த நிமிடமே திருத்த முடியும். விக்கிபீடியாவில் இருக்கும் ஒவ்வொரு கட்டுரைக்கும் ஒவ்வொரு பக்கம் இருக்கும். அதை உரையாடலுக்குரிய பக்கமாக உரு வாக்கியிருக்கிறோம். இன்னொருவர் எழுதிய கட்டுரையைத் திருத்த விருப்ப மில்லாதவர் அல்லது அது பற்றிய கருத் தைத் தெரிவிக்க விரும்புகிறவர் அந்தப் பக்கத்தில் தனது விருப்பத்தை எழுதலாம். பார்த்தீர்களானால், கட்டுரையைவிட உரையாடலுக்குரிய பக்கத்தில் நிறைய விடயங்களைக் காணலாம். அத்தனை விடயங்கள் பதிவாகியிருக்கும், மிகவும் பயனுள்ளதாகவும் இருக்கும்.

**கேள்வி:** ஆங்கிலத்தில்தானே விக்கிபீடியாவின் ஆரம்பம் இருந்தது. ஏன் அதைத் தமிழ் மொழியில் கொண்டு வரவேண்டும் என்று விரும்பினீர்கள்?

**பதில் :** நான் அடிக்கடி சொல்லவிரும்பும் விடயம் இதுதான். மேற்கத்தைய மொழிகளிலும் பார்க்க தமிழ் மொழிபோன்ற மொழிகளுக்கத்தான் விக்கிபீடியா முக்கியம். தமிழுக்கு கலைக்களஞ்சியம் ஒன்றைச் செய்வதற்கு நாற்பது ஆண்டுகள் சென்றிருக்கிறது. அதை வெளியிட்டால் பின்பு தொடர்ந்து அதற்கு அடுத்தடுத்த வருடங்களில் அதன் மறு பதிப்பை வெளியிட்டால்தானே

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆழிப்பாவை

—————— பானுமதி

வெளிர் நீலத்தில் அந்தத் திரை மிளிர்ந்தது. அவ்வளவு பெரிய திரையே அவனை வியக்க வைத்தது. அவனருகில் யாரும் இல்லையென்றாலும், அதைத் தொட மனம் விரும்பினாலும் ஏதோ ஒன்று தடுத்தது. எங்கிருந்து கேட்கிறது என்றே தெரியாமல் ஒரு குரல் அந்தத் திரையை நோக்கி கைகளை நீட்டச் சொல்லியது. மனிதப் பெண் குரலைப் போல் ஒலித்த அது இனிமையின் சாற்றை ஏந்தி மெதுவாக நீட்டச் சொல்லி வலியுறுத்தியது.

கைகளை அவன் நீட்டியவுடன் அந்தத் திரை மறைந்துபோனது. பெண் சிரிக்கும் ஒலி கேட்டது. "அவனின் மூளைக்குள்ளாக அசைவுகளை நிகழ்த்துங்கள்" என ஆணை கேட்டது. பாபுவிலிருந்து என்னை யாராக மாறச் சொல்கிறார்கள்? ஆறு மாதங்களாக அவன் நினைவு போல் கனவும், கனவு போல் நினைவுமாக இருக்கிறான். அவனுள் படிந்துள்ள அவனது செயலற்ற உடல் மங்கிக் கொண்டே வருகிறது. அவனால் கைகளை, கால்களை, முதுகை, இடுப்பை ஏன் முழு உடலையுமே இயக்க முடியும் என்று திரும்பத் திரும்ப டாக்டர் சொல்கிறார். ஆனால், அது அவன் உடலல்ல. அவன் தலையுடன் இணையப் போகும் வேறொரு உடல். அவன் நினைவடுக்குகளில் செயல் கொண்ட ஒரு உடலாகத்தான் சேமிக்கப்படுகிறான். இருந்தும் தன்னிச்சை செயல்கள் எப்படித்தான் நடக்கும்?

'மீண்டும் முயலுங்கள், நீங்கள் ஒரு பெரிய முயற்சியின் முன்னோடி என்பதை மறவாதீர்கள்' என்று ஒரு ஆணை பிறந்தது. அவன் சமீபத்திய நினைவுகளில் தேடி கை அசைவுகளைத் துல்லியமாகக் கொண்டு வந்தான். அது ஒரு நம்பிக்கை முன்னகர்வு என அவன் அறிவான். இயங்காத இயக்கம் என உள்ளே தோன்றியது. தோற்ற மயக்கத்தின் ஊடாக திரை அவனை நோக்கி வந்தது. அவன் பயந்து பின்னகர்ந்ததுபோல் உணர வைக்கப்பட்டான். உடனே பாராட்டும் விதமாக திரையில் ஒரு மலர்க்கொத்து தோன்றி மறைந்தது. 'இங்கே மின்னல் வேகத்தில் வரும் கேள்விகளுக்கு நீங்கள் உங்கள் வலது கை சுட்டும் விரலை சரி என்பதற்கும் இடது கை சுட்டு விரலை இல்லை என்பதற்கும் ஒரு முறை மேல் நோக்கிக் காட்டி, உடனே தழைத்துவிட வேண்டும். கவனத்தில் வையுங்கள் நீங்கள் வேறு உடலைப் பெறப் போகிறீர்கள் என்பதை. கழுத்துக்குக் கீழ் இயங்காத அவன் தான் எந்தச் செயலையும் செய்யவில்லை என்றும், திரும்பத் திரும்ப அதை பயிற்றுவிப்பதே நோக்கம் என்றும்,(வேர்ச்சுவல் ரியாலிடி)மறைமுக உண்மை போலும் தோற்றத்தின் மூலம் நிலை நிறுத்துகிறார்கள் என்றும் புரிந்து கொண்டான்.

அவன் நினைவிலிருந்து அவன் உடல் வெளியேற பார்த்தறியாத மற்றொன்று குடிபுக முயன்றது.

விரிந்து பரந்த வெளி. அதன் மேல் கவியும் வானம். மழை பெய்து கலந்த செம்மண் என நிலம். கரும் கண்ணீர்க் கோடென கரடு தட்டிய பொறுக்குகள். அதன் இடைவெளியில் முள்மரங்கள், செவ்வரக்கு நிறத்தில் பூத்த மலர்கள். அச்சுறுத்தும் தனிமை. பசிய நிலம் பசித்த நிலமெனத் தோன்றியது.

திடீரெனக் காட்சி மாறியது. பெரும் பாறைகளும், மலைகளுமான இடம். தொடக்கம் தெரியாமல் பேரிரைச்சலுடன் இறங்கும் அருவி. மலை இடுக்குகளில் தலை நீட்டும் நீலக் கொத்துப் பூக்கள். உன்னிடம் வரட்டுமா எனக் கேட்பதைப் போல் அவசரமாக விரைந்திறங்கும் மேகக் கூட்டம். பெயர் தெரியாத பேருருவ மரங்கள். உவகையுடன் பேரச்சம் ததும்பும் காற்றின் ஓசை எங்கேயும்.

பழங்களும், பல வண்ண மலர்களும், தேன் சிட்டும், நெல் வயல்களுமான குளிரோடை. மணமே வயிற்றையும், மனத்தையும் நிரப்பியது. அவன் சிறு பை தோள்களில் தொங்க டயரை உருட்டிக் கொண்டு பள்ளி சென்றான். சிலேட்டுப் பலகைக்காக சண்டைபோட்டான். பகலுணவு கொண்டு வராதவனுடன் தன் உணவைப் பகிர்ந்து கொண்டான். ரெட்டை ஜடை கனகாவை எப்படியாவது சினேகிக்க முயன்றான். பார்த்துக் கொண்டேயிருக்கையில் அவன் நட்பை, துரோகத்தை, செல்வத்தை, சொந்தங்களைப் பெற்றான், இழந்தான்.

கடக்க முடியாத பெரும் பாலை இது. திசைகள் புரியவில்லை. நீர் என ஏமாற்றும் கானல். அவன் இளமையின் செருக்குக்கு வந்த சவால். தன் மூளைத்திறனை எத்தனையோ முறை பிறர் பாராட்ட அவன் கேட்டிருக்கிறான் அவனுக்கே அதில் பெருமிதமும் உண்டு. மூளை நன்றாகத்தான் செயற்படுகிறது. ஆனால் உடல் தசைகள்சிறிது சிறிதாக செயலிழந்து விட்டன. அவன் மூளை வேண்டும், அவன் உடல் வேண்டாம்.

அவன் அறியப் போகும் யாரோ ஒருவரின் உடல் அவனுடையது என ஆகும். தன் முழங்காலில் உள்ள தழும்பும், முதுகில் இருக்கும் மச்சமும் இனி இருக்கப் போவதில்லை. அவன் கொடையாளியின் உடலைப் புதிதாக அறிய வேண்டும். அப்பொழுது தன் மூளை திணறாதா? அது அவ்வளவு விரைவாகப் புது உடலை ஏற்றுக் கொள்ளுமா? இதில் இருவரில் யார் இல்லாமல் போகப் போகிறார்கள்? தலையால் வாழும் ஒருவன், உடலால் இறக்கப் போகிறான். தலையால் சாகப் போகும் ஒருவன் உடலால் வாழப் போகிறான். இவன் தன் மூளையுடன் அவ்வுடலில் இணையும்போது இறந்தவன் உடலாகத் தொடருவான் தானே? புறத் தோற்றம் மாறுகையில் அகம் அதை ஒட்டி வடிவமைக்கப்படுமா? அகம் அதை மறுதளித்தால் வாழ்வு வீணாகிவிடாதா? மனம் என்பதில் எண்ணங்கள் ஒழியாது வந்து கொண்டேயிருக்கின்றனவே.? அது உடலில் எந்தப் பகுதியில் இருக்கிறது? தலை மாற்று அறுவை சிகிச்சையில் மூளையுடன் மனமும் என்ன ஆகும்? அறிவு, சிந்தனை, எண்ணங்கள் எல்லாம் ஒரே இடத்தில் தான் எழுகின்றனவா? அனைத்துமே இரண்டாக எழுந்தால் அதற்கு மாற்று உண்டா?

டாக்டர். செர்ஜோ கானவேரோ (Dr. Sergio Canavero) சிரித்துக் கொண்டே வந்து எதிர் இருக்கையில் அமர்ந்ததும் திரை, தோற்ற மயக்கங்கள் எல்லாம் மறைந்தன. அவனது காதுகளுக்கான முகத் தசை அசைவை செய்யச் சொல்லி அவர் பேசத் தொடங்கினார்.

'மிஸ்டர் பாபு! உங்கள் தசைகளின் இழப்பீடு அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்த இருபத்தெட்டு வயதில் நீங்கள் இந்த அழகிய உலகில் பார்க்க, ரசிக்க, நுகர, ஏன் உங்கள் விருப்பப்படி இயங்க எத்தனை இருக்கிறது? ஏன் விலக்க வேண்டும்? பெண் ரோபோ ஒன்றின் குரலே உங்களை எப்படிமயக்கியது என்பதைத்தான் நான் பார்த்தேனே! இன்னும் ஒரு வருடம்தான் - உலகம் பிறந்தது உங்களுக்காக. ரைன் நதியில் வண்ணப் பெண்களுடன் ஆடலாம், பாடலாம். மிகப் பழைமையான பிரெஞ் மதுவுடன் நீங்கள் வாழ்வைக் கொண்டாடலாம். என்ன வேண்டும் உங்களுக்கு - எதுவும் கிடைக்கும். மூளைத் திறனுடன் இணைந்த செயற்படும் உடல். ஏழு வருடங்களாக எது உங்களுக்குக் கிடைக்கவில்லையோ அது என் மூலம் தங்கத் தட்டில் வருகிறது.'

அவன் பதில் சொல்லவில்லை. களைப்பு அதிகமாக இருந்தது. உடனடியாக சக்தி திரவம் அவனுள் செலுத்தப்பட்டபோது, அறிவியலின் முன்னேற்றம் அவனுக்கு மிகவும் பிடித்தது.

'என் நண்பர் ஒரு இனிய செய்தி சொன்னார். மூளைச்சாவு அடைந்த ஒரு இளைஞனின் உடல் நாளை இங்கு வருகிறது. என்னுடன் நூறு மருத்துவப் பணியாளர்கள் இருப்பார்கள். முப்பத்து ஆறு மணி நேர அறுவை சிகிச்சை. மிக மிகத் துல்லியமான, கூரான வைரக் கத்தி உங்களுக்கெனவே'.

அவன் வலக் கன்னத்தைக் கோணி தான் கணினி மூலம் பேச விரும்புவதைத் தெரிவித்தான். கிட்டத்தட்ட ஆறு மாதப் பயிற்சிகளுக்குப் பின்னரும் தன் சுயம் பீறிட்டு எழுவதை வியந்தான். சம்பாஷணை தொடர்ந்தது.

"மூளை வெறும் உயிர்க் கருவி மட்டும் தானா?"

'வேறு என்னவாக இருக்க முடியும்?' "மனம், விழிப்புணர்வு, ஆழ்நிலை, ஆத்மா இவையெல்லாமே மூளையில் தான் இருக்கிறதா?'

'புல் ஷிட். ஆத்மா என்றெல்லாம் கிடையாது. மனம் என்பது மூளை கொள்ளும் எண்ணங்கள். விழித்திருக்கையில் நீர் உணர்வுடன் இருக்கிறீர். உறங்குகையில் உமது மூளை [illegible]களுக்கு ஒய்வு கொடுத்துவிட்டு [illegible]க்கையுடன் உம்மைக் காக்கிறது. அதை நீர் ஆழ்நிலை என்று சொல்கிறீர்.'

"இல்லை என் சந்தேகமே உயிர்க்கருவியும், உளத் தொடர்பும் ஒரே இடத்தில் இருக்க முடியுமா?'

'ஒரே இதயத்தின் அறைகளில் நல்ல இரத்தமும், கெட்ட இரத்தமும் செல்லவில்லையா?'

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால் உணர்வுகள் எழும்பி உறவுகளாகப் பரிணமிக்கும் விந்தை ஒரு மூளையின் வேலை."

' உணர்வுகளை ஒழுங்கு செய்ய உறவுகள்.'

அவன் புரியாமல் அவரைப் பார்த்தான்.

'தனி மனித ஒழுக்கம், சமுதாய நியதிகள், அழகுணர்ச்சி, கலைகள், ஆன்மிகம், உல்லாசக் கொண்டாட்டங்கள், வருத்தங்கள், பிரிவுகள், மறதிகள் அனைத்துமே உணர்வாக ஒரு காலத்தில் அமைந்து, சமூகக் கட்டமைப்பில் உறவுகளாக வந்துள்ளன. இதற்குள் குருதி உறவு முதல் அனைத்தும் வரும்-சிலை-பார்வையாளன் என்பதைப் போல்.'

அவனுக்கு பதில் சொல்லவரவில்லை.

'பாபு, துணிவுதான் வாழ்க்கை. இந்த ஆறு மாதங்களில் நீங்கள் எவ்வளவு ஒத்துழைத்தீர்கள்-எத்தனை பயிற்சி செய்தீர்கள். இந்தக் கடைசி அடியை வைத்துவிட்டால், உலகின் முதல் தலை மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்ட மாமனிதன் என்று சரித்திரத்தில் இடம் பெறுவீர்கள். ஏழு வருட முடங்கிய வாழ்க்கையை நினைத்துப் பாருங்கள். சிறு அசைவுக்குக் கூட கணினியும் பிற மனிதர்களும் தேவைப்பட்டார்கள் அல்லவா?'

" இதில் நான் இறந்து விட்டால்?"

'பாபு, நான் சொல்வதைக் கேட்டு வருத்தப்படாதீர்கள். எல்லாவற்றுக்கும் பிறரை எதிர் பார்த்து வாழ்வதை விட இந்த சிகிச்சை எவ்வளவோ மேல். நான் சொல்கிறேன்-நீங்கள் நூறாண்டு வாழ்வீர்கள். வேறு கேள்விகள்?'

"நான் சம்மதிக்கிறேன், டாக்டர். சொல்லலாம் என்றால் வழி முறைகளைச் சொல்லுங்கள்"

'நிச்சயமாக. உங்கள் தலையும், உடலும் மிகக் குளிரூட்டப்பட்ட நிலையில் உறைய வைக்கப்படும். முக்கியமான இரத்த நாளங்கள் கழுத்தை அறுத்த பிறகு மூடப்படும். நான் முன்னரே சொன்ன வைரக் கத்தி தண்டு வடத்தை கிட்டத்தட்ட பத்து மணி நேரத்தில் அநாயாசமாக எடுக்க உதவும். ஒரு சிறப்புப் பசை தலை மற்றும் தண்டுவடத்தை கொடையாளியின் உடலோடு இணைக்கும். உறுப்புக்கள், தசைகள், இரத்த நாளங்கள் மீள் இணைப்பு செய்யப்பட்டு தோல் தைக்கப்படும். மின் கடத்தும் உணர்வு சோதிக்கப்படும்,' டாக்டர் மூச்சுவிட்டார்.

"பிறகு?"

'மருத்துவ தன்வயமற்ற நிலையில் நீங்கள் நான்கு வாரங்கள் இருப்பீர்கள்- அந்த சமயத்தில் உங்கள் தண்டுவடம் தூண்டப்பட்டு நரம்புகளின் இணைப்பை செயற்படுத்தத் தொடங்கும்.'

"நானாகச் செயற்பட எத்தனை மாதங்களாகும்?"

'மூன்று மாதங்கள் உடலியக்கப் பயிற்சி, பின்னர் சிறு நடை, பின்னர் நீங்களாக எடுத்து உட்கொள்ளும் சிறு உணவு. அதிலிருந்து ஒன்பது மாதங்கள் முடிய நீங்கள் மரதன் கூட ஓடலாம்"

பாபு டிசெம்பர் மாதத்துக்கு காத்திருக்கத் தொடங்கினான் - அறுவை சிகிச்சை முடிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமயந்தி ரீச்சரின் கண்ணீர்



(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்ற எறிகணையோ, துப்பாக்கிக் குண்டோ எந்தக் கால அவகாசத்தையும் கோருவதில்லை. அவற்றிடம் யாரும் கால அவகாசத்தைக் கோர முடியாது.

ஆகவே, பக்கத்திலிருந்தவர்களிடம் இரவல் கேட்டு மண்வெட்டியை வாங்கி வந்து பங்கர் வெட்டினார். பசியும் களைப்பும் வேறு சோர்வாயிருந்தது. இந்த நிலையில், இருட்டில் எப்படி ஒரு பங்கரைத் தனியே வெட்டிவிட முடியும்? அதுவும் கோடைவெயிலில் காய்ந்து பாறாங்கல்லைப்போல இறுகியிருக்கும் களிநிலத்தில்.

அவர்களுடைய நிலைமையைப் பார்த்தவர்கள் தங்கள் பங்கரில் வந்து அன்றிரவு தங்கச் சொன்னார்கள். சாப்பாட்டையும் பிள்ளைகளுக்குத் தேநீரையும் தந்தார்கள். சுடுதண்ணீர் வைத்துக் கொடுத்தார்கள். தமயந்தி ரீச்சரிடமிருந்து பிள்ளையை வாங்கிக் கொண்டு அவவைக் குளிக்க விட்டாள் ஒரு பெண்...

இந்த உலகந்தான் எவ்வளவு விசித்திரமானது? ஒரு பக்கம் கொலை அபாயக்கத்தி. இன்னொரு பக்கம் எங்கே போவது, எப்படி வாழ்வது என்று தெரியாத கேள்விச் சுவர். இன்னொரு பக்கம் அதே அபாயங்கள் சூழ்ந்திருக்கும்போதும் அன்பும் கருணையும் நிறைந்த மனிதர்களின் உதவியும் அரவணைப்பும்...

இது என்ன சமன்பாடு? கடவுளும் சாத்தானும் நண்பனும் பகைவனும் இருளும் ஒளியும் தேவனும் பிசாசுமான உலகம் என்பது உண்மைதானா?

அப்படியென்றால் இதில் யார் வெல்வது? யார் தோற்பது? இந்த வெற்றி தோல்வி எல்லாம் நிரந்தரமானவையா? தற்காலிகமானவையா? இதெல்லாம் ஏன் இப்படியாக இருக்கின்றன?

அன்றிரவு போர் உக்கிரமாக நடந்தது. எறிகணைகள் எங்கும் வந்து வீழ்ந்து வெடித்தன. எத்தனை பேர் அன்று செத்தார்கள் என்று யாருக்கும் சரியான கணக்குத் தெரியாது. ஆனால், மறுநாள் காலையில் அங்கே இருந்த 'புலிகளின் குரல்' வானொலியில் 'எண்பத்தியேழு பொது மக்கள் பலியாகினர்' என்று அறிவிக்கப்பட்டது. 'காயப்பட்டவர்களின் தொகை 300க்கு மேல்' என்று சொல்லப்பட்டது.

'இலங்கை வானொலி'யில் அன்று வேறு ஏதோ செய்தியை வாசித்தனர். அதையெல்லாம் யார் கேட்டார்கள்?

இதற்கிடையில் மறுபடியும் காலையிலேயே எறிகணைகள் விழத் தொடங்கிவிட்டன. துப்பாக்கி ரவைகள் பனைகளில் உரசின. தறப்பாள் கூடாரங்களைத் துளைத்தன. எதுவும் சிக்காதபோது காற்றைக் கிழித்தன. காற்றைக் கிழிக்கும் ஒலி, உயிரைக் கிழிப்பது போல இருந்தது.

சனங்கள் பங்கர்களுக்குள் ஓடிப்பதுங்கினர். அந்தக் கோலத்தில் மனிதர்கள் என்ற அடையாளமே அழுகிக் கரைந்தது. முழுநாளும் சனங்கள் பங்கர் இருளுக்குள் ஜந்துகளாக முடங்கினர். பங்கர் இல்லாதவர்கள் வேறு பங்கர்களைத் தேடி ஓடினர். பங்கர் கிடைக்காதவர்கள் சிதறியோடினார்கள். பங்கர் இருந்தும் அதற்குள் பாதுகாப்பில்லை என்று கருதியவர்கள் வேறு எங்கோ மனம் போன போக்கில் ஓடினார்கள்... மனம்தான் எத்தனை விசித்திரமானது. இந்த உயிர்ச்சொட்டைக் காப்பாற்றிக் கொள்வதற்காக என்ன பாடெல்லாம் படுகிறது!

சாவு துரத்தும்போது ஒவ்வொருவரும் ஓடும் ஓட்டத்தைப் பார்க்க வேணும். எறிகணைகள் சிதறி அங்கும் இங்குமாக வீழ்ந்தன. ஆனால், தமயந்தி ரீச்சர் குடும்பம் இருந்த இடத்தில் எந்தப் பாதிப்பும் இல்லை. சற்று நேர அமைதி. அந்த அமைதியில் ஒரு வேகம் வரும் எல்லோருக்கும். அதற்குள் தண்ணீர் எடுப்பார்கள். சமையல் செய்வார்கள். மலங்கழிக்கப் போவார்கள். குழந்தைகளுக்குச் சாப்பாடு தீத்துவார்கள். குளிப்பார்கள். பக்கத்திலே ஏதாவது அவசர அலுவலாகப் போய் வந்து விடுவார்கள். சிலர் தெருவோரத்தில் புனர்வாழ்வுக்கழகத்தால் வார்க்கப்படும் கஞ்சிக்குப் போவார்கள் அல்லது கஞ்சியை வாங்கிக் கொண்டு வந்து விடுவார்கள், சிலர் பங்கரை அமைத்துக் கொள்வார்கள். சிலர் தாங்கள் இருக்கும் இடம் பாதுகாப்பில்லை, வசதியில்லை என்ற காரணங்களால் வேறு இடங்களைத் தேடிக் கொள்வார்கள்.

இந்த பாதுகாப்பு, வசதிப் பிரச்சினைகள் இருக்கல்லவா, அதெல்லாம் ஒரு கற்பனையான தேடல்தான். உண்மையில் இந்த இரண்டும் அப்போது எங்குமே இருக்கவில்லை. அவரவர், தன்தன் மனதுக்குத் தோன்றியபடி அங்கே கொஞ்சம் பாதுகாப்பு, இங்கே கொஞ்சம் வசதி என்று தடுமாறிக்கொண்டும் அலைந்து கொண்டும் இருந்தார்களே தவிர, உண்மையில் எங்கும் வசதியுமில்லை. எங்கும் பாதுகாப்பும் இருந்ததில்லை.

தமயந்தி ரீச்சர் குடும்பத்துக்கு அந்தக் காலைப் பொழுதில் மாத்தளன் வெளி பாதுகாப்பே இல்லாத ஒரு உணர்வைக் கொடுத்தது. வருகின்ற துப்பாக்கி ரவைகளைத் தடுப்பதற்கு அங்கே எதுவுமேயில்லை. எறிகணை வந்தால் அப்படியே அதை வரவேற்று வாங்கிக் கொள்வதைப்போல வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தது அந்த வெளி.

அவர்களால் அங்கே தொடர்ந்தும் இருக்க முடியவில்லை. இவ்வளவு தூரம் பாதுகாப்பாக இருந்து விட்டு இங்கே வந்து ஏதாவது நடந்தால்...

இந்தக் கேள்விக்கு அவர்களிடம் பதிலில்லை. நம்மிடமும் பதிலில்லை. யாரிடந்தான் அப்போது இந்த மாதிரிக் கேள்விகளுக்குப் பதில் இருக்கும்? அதைவிட, இந்த மாதிரி நிலைமைகளில் யாரும் எதுவும் சொல்லவும் முடியாது.

அவர்கள் தடுமாறிக் கொண்டிருந்தார்கள். அடுத்ததாக எங்கோ போவது? அப்படி வேறிடத்துக்குப் போனாலும் அங்கும் நிலைமைகள் எப்படியிருக்கும் என்று எதுவும் தெரியாது. முன்பின் அறிமுகமில்லாத இடங்கள். ஆனால், எங்கும் சன மயம். எங்கும் பிண நாத்தமும் மலநாத்தமும். இந்த மணமே ஒரு வித வெறுப்பை, அச்சத்தை, கலக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. தலைநிறையப் பாரமாக உணர்ந்தா. அதையும் விட இதயத்திலும் பெரும் பாரம்.

இப்படியே இவர்கள் ஒரு முடிவும் எடுக்க முடியாமல் குழம்பிக் கொண்டிருக்கும்போது திடீரென்று அந்தப் பகுதியில் வந்து விழத் தொடங்கின எறிகணைகள். ஒன்றல்ல, இரண்டல்ல. இரண்டு பக்கமும் துப்பாக்கிச் சண்டை. வெடி அதிர்வுகள். ஒரே புகை மண்டலம். ஓலக்குரல்.

பங்கருக்குள் பாய்ந்தோடிப் புகுந்து கொண்டனர் எல்லோரும். நெஞ்சு பதறியது, கைகால்கள் பதறின, உடல் பதறியது, கடவுளே.. கடவுளே... என்று பலரும் கதறினார்கள்...

அந்தக் கணத்தில்தான் மிக அருகில் - தமயந்தி ரீச்சரின் குடும்பம் இருந்த பங்கருக்கருகில் - ஒரு பத்து மீற்றர் தொலைவில் ஒரு எறிகணை வீழந்து வெடித்தது.

புழுதி, புகை, எரிமணம், குருதி மணம், சாவோலம்...

பங்கருக்குள் இருந்தபடியால் அவர்களுக்கு எதுவும் நடக்கவில்லை. ஒரு இரண்டு நிமிடம் கழிந்திருக்காது, அமிழ்தனின் குரல் கேட்டது. அது குரலல்ல, முனகல். எறிகணை வீச்சினால் உண்டான திகிலிலிருந்து மெல்லச் சனங்கள் விடுபட்டுக் கொண்டிருக்கையில் இந்தக் குரல் இந்த முனகல். அப்போதுதான் தமயந்தி ரீச்சருக்கு அமிழ்தன் தன்னுடைய கையில் இல்லை என்பது புரிந்தது. "ஐயோ என்ரை பிள்ளைய்"..... என்று கதறிக்கொண்டு பதுங்குகுழிக்கு வெளியே பாய்ந்தா.

அந்தச் சூழ்நிலையில் பங்கருக்குள்ளிருந்து வெளியே வரமுடியாது. அப்படி வருவது பாதுகாப்பானதே அல்ல. ஆனால் குழந்தையின் குரலை விட்டு விடமுடியுமா?

எதையும் அனுமானிக்க முடியவில்லை. அச்சத்தோடு மெல்ல வெளியே வந்து பார்த்தபோது....

☹ ☹ ☹

நான் அவர்களை மாத்தளன் பாடசாலையில் இயங்கிய ஆஸ்பத்திரியில் கண்டபோது அவர்கள் கதறிக் கத்தினார்கள். நிரந்தரத் துக்கத்துக்குள் சிக்கித் தவிக்கும் அந்த மனிதர்களுக்கு என்னால் ஆறுதல் சொல்ல முடியவில்லை. மேலதிக சிகிச்சைக்காகக் குழந்தையைக் கொண்டு போவதற்கென்று கப்பலில் காத்துக் கொண்டிருந்தார்கள். செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பலில் கடுமையான காயக்காரர்களை மாத்தளனிலிருந்து திருகோணமலைக்கு ஏற்றிச் செல்வார்கள். ஒரு நாளைக்கு ஒரு கப்பல்மட்டும்தான். சிலவேளை அதுவும் வராது. எவ்வளவு காயக்காரர்கள் என்றாலும் அந்த ஒரு கப்பலில் ஏற்றக்குடியவர்களுக்கே இடமுண்டு. அதற்கான நாட்கணக்கில் காயக்காரர்களும் நோயாளிகளும் காத்துக் கிடப்பார்கள். ஈக்கள் மொய்த்திருக்கும் நோயாளிகளுக்கும் பிணத்துக்கும் வேறுபாடு தெரியாமல். நான் அவர்களை அங்கே எதிர்பாராதவிதமாகச் சந்தித்தேன்.

அமிழ்தனின் வலது கையைச் ஷெல் அப்படியே அறுத்துக் கொண்டு போய்விட்டது. அந்தப் பிஞ்சுக் கையிலிருந்து இரத்தம் ஊத்துப்பட ஊத்துப்பட அவர்கள் குழந்தையையும் தூக்கிக்கொண்டு, அறுபட்ட கையையும் தூக்கிக் கொண்டு முன்னே இருந்த பாடசாலை ஆஸ்பத்திரிக்கு வந்திருக்கிறார்கள்.

பிள்ளைக்குக் கொஞ்சம் காற்றுப் பிடிக்கட்டும் என்று பங்கர் வாசலோடு, கட்டியிருந்த ஏணையில் கிடத்தியிருந்த் வேளை, அருகில் வீழ்ந்து வெடித்த எறிகணையின் சிதறல் ஒன்று எப்படியோ சாய்முகமாக வந்து அந்தப் பிஞ்சுக் கையை அறுத்திருக்கிறது. மூன்று மாதத்தில் ஒரு கையை இழந்து விட்டான் அமிழ்தான். இனி அவனுடைய வாழ்க்கை ஒற்றைக் கையோடுதான்.

அறுபட்ட கையை என்னதான் செய்ய முடியும்? அதுவும் அப்போது மாத்தளனில்? ஆனாலும் அதைத் தூக்கி வைத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தார்கள்.

'இனி எங்களுக்கு நிரந்தரத் துக்கந்தான்' என்று அப்போது சொன்னதை வார்த்தைகள் மனதில் ஆழ இறங்கின.

☹ ☹ ☹

அவர்களையே பார்த்துக் கொண்டு நின்றேன். மழை பெய்து கொண்டேயிருந்தது. இப்போதும் என்னைக் கண்டவுடன் அதே அழுகை. அந்த நிரந்தரத் துக்கம் ஒரு பிசாசைப்போல அவர்களைப் பின் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

'அண்ணை, எங்களுக்கு இப்ப இவன்ரை கை இல்லாமற் போட்டுதெண்ட கவலையில்லை. இவன்ரை துடிப்பை இப்ப பாக்கேக்கை... மற்றப்பிள்ளைகளை விடக் கெட்டிக்காரனா விளையாடிக் கொண்டிருக்கிறான். எல்லாரும் அமிழ்தனைத் தூக்கிக் கொஞ்சுகினம். அவனில ஆசைப்படாத ஆள்களில்லை.... இப்பிடியிருக்கிற இவனைப் பத்தி அப்ப நாங்கள் நினைச்சதை நினைக்கத்தானண்ணை துக்கமா... இருக்...கு...'

தமயந்தி ரீச்சர் விம்மி விம்மி அழுதா. எனக்கு என்னசெய்வதென்றே புரியவில்லை. அந்தச் சூழ்நிலையில் நான் எதைத்தான் கேட்கமுடியும்? ஒன்றும் பேசாமல், அமைதியடையட்டும் என்று காத்திருந்தேன்.

'அண்ணை, இவன்ரை...கை போனவுடன.....ம்.. ம்... இவன் இனி என்ன செய்யப் போறான்...?... கையைக் கொண்டு போனமாதிரியே.... அந்த ஷெல் என்ரை பிள்ளையையும் கொண்டு போயிருக்கக் கூடாதா எண்டு நினைச்சன்.. ஐயோ... என்ரை பிள்ளையைப் பற்றி அப்ப அப்பிடியெல்லாம் நினைச்சிருக்கிறேனே...'

'......................'

'ஒரு தாயாக இருந்து கொண்டு இந்தப் பிள்ளையைப் பற்றி இப்பிடியெல்லாம் சிந்தித்திருக்கிறேனே.. அதைத்தான் என்னால... தாங்கிக் கொள்ள... முடியாமல்....'

அவர் முடிக்கவில்லை. விம்மிக் கொண்டேயிருந்தார்.

நான் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். என்னிடம் பதில் வார்த்தைகளில்லை.

'பள்ளிக்கூடத்தில அவன்ரை கையைத் தொட்டுப்பார்த்து, எங்கயடா உன்ரை கால் எண்டு மற்றப்பிள்ளைகள் கேட்கினம். எங்கயம்மா என்ரை கை...? எண்டு ஒரு நாள் அவன் கேட்டான்... நான் என்ன பதிலைச் சொல்வேன்....?'

யுத்தப் பிரபுக்கள் நினைவில் வந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார்வைநயம்-18

■ கணபதி சர்வானந்தா

# ஆதாரம்



அவன் பெயர் வேறு. ஆனால் 'நூனாஸ்' என்றால் எல்லோருக்கும் தெரியும். அவன் ஒரு வியாபாரி. பெரும்பாலும் கலர் கலரான சைனா சீத்தைத் துணிகளே அவனது வியாபாரப் பொருள். யாழ்ப்பாணத்துக் கிராமத்து வீதிகளில் அவனை அடிக்கடி காணலாம். சிறிய சைக்கிள் ஒன்றின் முன்பக்கத்தில் கம்பிக் கூடையில் ஒரு துணிக்கட்டும், பின் கரியரில் ஒரு கட்டுமாக "பீப்" என்று குரலெழுப்பியபடி அவன் வலம் வருவதை நான் பார்த்திருக்கிறேன். இன்றுவரை அவன் உபயோகிக்கும் "பீப்" என்ற வார்த்தைக்குரிய அர்த்தம் எனக்குத் தெரியாது.

நூனாஸுக்கு 'வாப்பா' மட்டும் இருப்பதாகச் சொல்லி இருக்கிறான். 'உம்மா' கிடையாது. 'வாப்பா'வும் மறுமணம் செய்து போன பிறகு உம்மாவின் தூரத்து உறவினனான ஹசனலி நானா குடும்பத்தோடு தங்கிவிட்டான் நூனாஸ். ஹசனலி குடும்பமும் செழிப்பாக இல்லை. எனவே அவ்வப்போது உணவுக்குக் கஷ்டப்பட்டான் நூனாஸ். அவன் நிலையை ரீக் கடை மொகிதீன் நானா கண்டபோது அவனுக்கு அவர் உதவினார். பகுதி நேரம் அவர் கடையில் வேலை கொடுத்தார். காலையில் பாடசாலைக்கு அவன் போக முன்னர் சமையலுக்கான பாத்திரங்களை சுத்தம் செய்வது தொடக்கம் சமையலுக்கான ஆரம்பப் பணிகள் நூனாஸினுடையது. பின்னர் பாடசாலையால் வந்ததும் மாலை உணவுக்கான ஆரம்பப் பணிகளை செய்வான் நூனாஸ். எப்படியாயினும் மொகிதீன் நானா கடையில் ஒரு

பல குடும்பங்களுக்கு அவன் துணி கொடுத்து உதவியிருக்கிறான். தவணை அடிப்படையில் அவனிடம் துணி வாங்குபவர்கள் அதிகம் இருந்தனர். கால போகம் முடிந்த பின்பு தாங்கள் வாங்கிய பொருள்களுக்குரிய பணத்தைப் பலர் அவனுக்குக் கொடுப்பதைப் பார்த்திருக்கிறேன். நூனாஸ் ஒரு குட்டிப் பணக்காரனாக யாழ்ப்பாணத்துக் கிராமத்தை வலம் வந்து கொண்டிருந்தான்.

தொட்டாட்டு வேலைக்காரனாகத்தான் இருந்தான் அவன். சம்பளம் என்று பெரிதாக ஒன்றும் இல்லை. நல்ல சாப்பாடு கிடைக்கும். மாத முடிவில் கிடைக்கும் அந்தச் சிறிய தொகையையும் ஹசனலியின் சம்சாரம் வாங்கிக் கொள்வாள். மேலதிக தேவை என்று வரும்போது நூனாஸ் நொந்து போவான்.

ரீக்கடைக்கு வரும் லொத்தர் ஏஜென்ட்டான சோமபால முதலாளிக்கு நன்கு பழக்கமானவன் நூனாஸ். பாடசாலைக்குப் போவதைக் கைவிட்டுவிட்டு வேறு தொழிலொன்றைத் தேடிக்கொண்டிருந்த நூனாஸின் கதையைக் கேட்டபோது, கொஞ்சம் லொத்தர் சீட்டைக் கொடுத்து விற்று வரும்படி சொன்னார் அவர். ரீக்கடை வேலையிலும்விட கொஞ்சம் உயர்வாக இருந்தது லொத்தர் வியாபாரம். நூனாஸின் கைகளில் கொஞ்சம் அதிகமாகப் பணத்தைக் கண்டபோது ஹசன் அலிக்குக் கை துருதுருத்தது. அவனுக்குத் தேவையான சாராயக் காசை நூனாஸிடமிருந்து பிடுங்கத்தொடங்கினான் ஹசன் அலி. காலை தொட்டு மாலை வரை நாயாய் அலைந்து வீடுதிரும்பும் நூனாஸுக்கு ஹசன் அலி தொல்லை கொடுக்கத் தொடங்கினான். ஒரு நாள் நூனாஸ் வீடு திரும்பும்போது ஹசனலி போதையில் இருந்தான். வழமைபோல் நூனாஸிடமிருந்து ஹசன் அலி பணத்தைப் பிடுங்க, வாய்த்தர்க்கம் கைகலப்பாய் மாறியது. அடிவலி தாங்காமல் நூனாஸின் கையும் ஓங்கியது. ஹசன் அலி நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டான். இரவென்றும் பாராமல் தனது உடுப்புக்கள் நிறைந்த பிளாஸ்ரிக் பையை எடுத்துக் கொண்டு வெளியேறினான் நூனாஸ். ஹசனலியின் மூத்தமகள் றிபைதாவுக்கு நூனாஸ் பற்றித் தெரியும். அவனிடம் தனக்கென எதுவுமில்லையென்றும் அவளுக்குத் தெரியும். தடுத்தும் பயனில்லை என்ற நிலை வந்தபோது தனது கையிலுள்ள மோதிரத்தை கழட்டிக் கொடுத்து வழியனுப்பியதோடு சரி. நூனாஸுக்கு ஹசனலி குடும்பத்துடனான உறவு அற்றுப் போனது.

அந்த நடு இரவில் சாலையில் நின்ற பஸ் ஒன்றில் ஏறிகொண்டான் நூனாஸ். உறக்கத்தில் இருந்து விழித்தபோது 'யாழ்ப்பாணம்' என்ற விளம்பரப் பலகையைக் கண்டான். யாழ்ப்பாணத்து வாழ்வியலை ஒரு தியேட்டர் துப்பரவுத் தொழிலாளியாக ஆரம்பித்தான் அவன். காலையும், மாலையும் அவனுக்கு வேலை. இடை நடுவே பஸ் நிலையத்தில் சிறு வியாபாரியாக இருந்தவன் மெல்ல மெல்ல கிராமத்தை நோக்கி நகரத் தொடங்கினான். நடந்து நடந்து சீத்தைத் துணிகளை விற்றவன், பின்னர் சைக்கிள் ஒன்றை வாங்கிக் கொண்டான். பல குடும்பங்களுக்கு அவன் துணி கொடுத்து உதவியிருக்கிறான். தவணை அடிப்படையில் அவனிடம் துணி வாங்குபவர்கள் அதிகம் இருந்தனர். கால போகம் முடிந்த பின்பு தாங்கள் வாங்கிய பொருள்களுக்குரிய பணத்தைப் பலர் அவனுக்குக் கொடுப்பதைப் பார்த்திருக்கிறேன். நூனாஸ் ஒரு குட்டிப் பணக்காரனாக யாழ்ப்பாணத்துக் கிராமத்தை வலம் வந்து கொண்டிருந்தான்.

ஒரு நாள் அவன் ஊருக்கு வந்தான். ரீக்கடை மொகிதீன் நானாவின் கடை அங்கு இல்லை. மூடியிருந்தது. வீட்டில் முடங்கிப்போய் கிடந்த அவரைப் பார்த்து அவர் கைகளில் ஐம்பது ரூபா நோட்டு ஒன்றைத் திணித்துக் கொண்டான். ஹசனலி நானா குடிபோதையில் இறந்து போனதையும், அவர் மனைவி பின்பு இன்னொருவருக்கு வாழ்க்கைப் பட்டதையும், மகள் றிபைதாவும் தனது திருமணத்தில் பிரச்சினை வர தனது பிள்ளையோடு ஊரில் தனியாக இருப்பதையும் மொகிதீன் நானாதான் அவனுக்குச் சொன்னார். றிபைதா வீடுகளில் வேலைசெய்யும் ஒரு வேலைக்காரியாகச் சிரமப்படுவதை கதை கதையாக மொகிதீன் நானா சொல்லிக் கொண்டிருந்தார். நூனாஸ் கேட்டுக்கொண்டே இருந்தான்.

அன்று மாலை தனது இயலாமையிலும் குடையொன்றைப் பிடித்தபடி றிபைதா வீட்டுக்குப் புறப்பட்டுப் போனார் மொகிதீன் நானா. அவர் கருணையினால் றிபைதாவும் அவளது பிள்ளையும் ஒரு சுதந்திர வாழ்வை நோக்கி யாழ்ப்பாணத்துக்குப் புறப்படப்போகிறார்கள். நூனாஸ் துணையுடன்.

**ஆசையை அடக்கி ஆதாரமாக இருப்பதிலும் ஆனந்தம் உண்டெனகிறது ஆன்மிகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த.....

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்க முடியும். அதற்கு நிதி நிலைமை இடம் தராது. அது ஒரு சாத்தியப்படக் கூடிய முயற்சியும் இல்லை. எனவே இத்தகைய செயற்பாடானது முழு உலகுக்கும் பொதுவானதொன்று. இலகுவானதும் அதிக செலவற்றதும் என்று கூடச் சொல்லலாம். இந்தியாவை எடுத்துக் கொண்டால் ஹிந்தி மொழிக்கு அடுத்தது தமிழ்தான் இருக்கிறது. உலக மொழிகளில் தமிழ் 18ஆவது இடத்தில் உள்ளது. விக்கிப்பீடியாவில் இதற்கு 59 ஆவது இடம்தான் கிடைத்துள்ளது. எனவே நாங்கள் மேன்மேலும் முன்னேறிச் செல்லவேண்டுமெனில் அதிகளவு ஆள்கள் பங்குபற்ற வேண்டும். தமிழுக்கு இதன் தேவையை உணர்ந்தேன். எனவே தான் இந்த முயற்சியை ஆரம்பித்தேன்.

**கேள்வி :** உலக அளவில் இதன் பங்களிப்புச் செய்பவர்கள் யார்? குறிப்பாக இலங்கையிலுள்ளவர்களின் பங்களிப்பு எப்படி இருக்கிறது?

**பதில் :** விசேடமாக இலங்கையில் யாழ்ப்பாணத்தை எடுத்துக் கொண்டால், தமிழ் விக்கிப்பீடியாவில் பங்களிப்புச் செய்கின்றவர்களில் பலர் மாணவர்களாகவும், இளைஞர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் மிகவும் உற்சாகமாகச் செய்கிறார்கள். அவர்கள் பணி என்னை வியக்கவைத்திருக்கிறது. ஆனாலும் அதற்கு மேலும் எமக்குப் பல அனுபவம்மிக்க விடயங்கள் தேவைப்படுகின்றன. எனவே வயது முதிர்ந்தவர்களும் பணிகளிலிருந்து ஓய்வுபெற்ற புலமையாளர்களும் இதில் அதிகம் பங்களிக்கவேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு. எங்கள் அடுத்த தலைமுறைக்காகப் பலவற்றை இதில் விட்டுச் செல்லக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உண்டு. இதில் எழுதுவது மாத்திரம் உங்கள் பணி என்று எண்ணிவிட வேண்டாம். இதில் திட்டமிடல், தயாரிப்புக்கள் எனப் பல பணிகள் உண்டு. உலகத் தமிழர்கள் என்று எடுத்துக்கொண்டால் இதில் பல புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பு மிகவும் பாராட்டுவதாகவும் உண்டு. தமிழ் மொழி தெரியாதவர்கள் கூட தங்கள் பங்களிப்பைப் பல வழிகளில் செய்திருக்கின்றனர்.

**கேள்வி :** விக்கிப்பீடியா என்று ஏன் இதை அழைக்கிறீர்கள்? அதற்கு அர்த்தம் என்ன?

**பதில் :** விக்கி என்பது ஹவாய் தீவுகளிலுள்ள மக்களின் மொழியிலுள்ள ஒரு சொல். விரைவாக என்று அர்த் தப்படும். கலைக்களஞ்சியம் என்ற ஆங்கி லச்சொல்லான என்சைக் கிளோபீடியா என்றதிலுள்ள பீடியா என்றதைச் சேர்த்து விக்கிப்பீடியா என்று ஆக்கம்பெற்றது. இதில் வரும் படைப்புகளுக்கு காப்புரிமை இல்லை. எவரும் எதை வேண்டும் என்றாலும் எடுத்து உபயோகிக்கலாம். ●

## அன்னை இட்ட....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

மதித்து நாட்டுப்பற்றாளர் விருது வழங்கிக் கௌரவித்தார். அதுமட்டுமல்ல செய்தற்கரிய சாதனையை செய்த அந்தத் தாயின் நினைவு நாளையே நாட்டுப் பற்றாளர் தினமாகவும் அறிவித்தார்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் தமிழர் தாயகம் எங்கும் அன்னை பூபதியின் நினைவுநாள் பேரெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டது. தெருக்கள் தோறும் பந்தல்கள் அமைத்து அன்னை பூபதியின் உருவப்படம் வைத்து, எழுச்சிப் பாடல்களை ஒலிபரப்பு செய்வது தமிழரின் வழமையாகிப் போனது. அன்னையின் நினைவாக விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகம் "தாயகத் தாய்" என்ற ஒலிப் பேழையையும் வெளியிட்டிருந்தனர். ●

# நோபல் தாரகையின் கறுப்பு முகம்



■ ஸபர் அஹமட்

**சில** வருடங்களுக்கு முன்பு தமிழ் சினிமாவில் உள்ள சிலருக்கு ஒரு பல்கலைக்கழகம் டாக்டர் பட்டங்களைப் பார்சல் செய்து அனுப்பிக் கொண்டிருந்த போது இலங்கையில் இருந்த பலரால் முழுமையாக ரசிக்க முடியவில்லை. வேடிக்கை மட்டுமே பார்க்க முடிந்தது. காரணம் அமைச்சர் மேர்வின் சில்வா என்ற பூதத்திற்கும் எவனோ ஒரு புளிய மரத்தடி சாமியால் ஏற்கனவே டாக்டர் பட்டம் வழங்கப்பட்டு இங்கே ஏக பிரபலமாக இருந்தது. ஒரு சாதாரண பட்டப்படிப்பை முடிக்கவே எத்தனையோ அவலங்களையும் போராட்டங்களையும் சந்திக்கும் இது போன்ற தேசங்களில் கூத்தாடிகளும் கோமாளிகளும் மட்டுமே ஆசிர்வாதிக்கப்பட்டவர்கள் என்று கடந்து போக முடியவில்லை. ஆனானப்பட்ட நோபல் பரிசின் நிலமையும், அதைப் பெற்றுக் கொண்ட ஒரு சிலரின் செயற்பாடுகளும் கூட படு மட்டகரமாகவே இருப்பதாகப் பெரும் சலசலப்பு ஏற்பட்டு இருக்கிறது.

மியன்மாரில் பிறந்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று ஐ.நா சபையில் வேலை செய்து வந்த ஆங் சான் சூகி, தனது நாட்டு மக்கள் அடக்குமுறை ராணுவ ஆட்சியாளர்களின் பூட்ஸ் கால்களுக்கு கீழே நசுங்கிய கரப்பான்கள் போல வாழ்ந்து வந்த பேரவலத்தைக் கண்டு பதைபதைப்புடன் நாட்டிற்கு வருகிறார். வந்த வேகத்தில் ஜனநாயக லீக் கட்சியை ஆரம்பிக்கிறார். உலகிற்கு கண்துடைப்பாக ராணுவ ஆட்சியாளர்கள் 1990 இல் நடத்திய ஜனாதிபதித் தேர்தலில் யாருமே எதிர்பாராத சரித்திர சாதனை வெற்றியைப் பதிவு செய்து கொண்ட போது" போடி உள்ளே " என்று ராணுவ ஆட்சியாளர்களால் அலாக்காகத் தூக்கி வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டார் சூகி. 1990 முதல் 2010 வரை இடைப்பட்ட 20 வருடங்களில் தொடர்ச்சியாக 15 ஆண்டுகள் மின்சாரம் இல்லாத கொசுக்கடி மிகுந்த வீட்டில் அடைக்கப்பட்டு இருந்தார். சிறையில் இருக்கும் போது 1991இல் சமாதானத்திற்கான நோபல் பரிசு சூகிக்கு அறிவிக்கப்பட்டது. அவரது கணவர் 1995 இல் பிரித்தானியாவில் மரணித்த போதும் கூட போய்ப் பார்த்துவர அனுமதிக்கப்படவில்லை.

இப்பேர்ப்பட்ட ஆங் சான் சூகி, படாத பாடு பட்ட ஆங் சான் சூகி, தனது இளமையை சிறையிலேயே கழித்த ஆங் சான் சூகி, கடந்த ஒன்றரை ஆண்டுகாலமாக ஆட்சியில் இருக்கிறார். ஆரம்பக் காட்சி முதல் க்ளைமாக்ஸ் வரை துன்பமும் சோகமுமே எல்லாமாக இருந்த இப்படியான ஒருவர் ஆட்சிக்கு வந்தால் என்ன நடக்கும் ? மக்களின் வாழ்க்கையில் பாலாறும் தேனாறும் பாய்ந்தோடும் என்று கற்பனை செய்தவர்களுக்கு நெற்றிப் பொட்டில் சாணியை வீசி அடித்து இருக்கின்றன ஆங் சான் சூகி இன் செயற்பாடுகள். மியன்மாரின் 'ரக்கைன்' மாகாணத்தில் கொத்துக் கொத்தாக முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள், எரிக்கப்பட்ட உடமைகள், அகதிகளாகத் தப்பி ஓடிய போது வங்கக் கடலில் மூழ்கி இறந்து போன முஸ்லிம் அகதிகளின் சம்பவங்கள் எல்லாம் "இட்டுக்கட்டப்பட்ட கற்பனைகள்" என்றும் "முஸ்லிம்களே முஸ்லிம்களைக் கொலை செய்தனர்" என்றும் கடந்த பி.பி.சிக்கு பேட்டி அளித்து இருக்கிறார் இந்த நோபல் தாரகை. அது மட்டுமன்றி கிறிஸ்தவர்களுக்கு எதிராகவும் தொடரும் வன்முறைகளை எல்லாம் அப்படியே புறங்கையால் ஊதித் தள்ளுகிறார்.

அதிகாரமும் மமதையும் ஆட்சியைத் தக்கவைக்கப் பெரும்பான்மையைத் திருப்தி செய்ய மேற்கொள்ள வேண்டிய பிரயத்தனங்களும் எல்லா நாட்டு ஆட்சியாளருக்குமே பொதுவானவை. அது நோபல் பரிசு பெற்ற சூகியாய் இருந்தால் மட்டும் விதிவிலக்காகிடுமா?

நோபல் பரிசு பற்றி எழுத்தாளர் சுஜாதா எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி-

"நோபல் பரிசு எதற்காகக் கொடுத்து இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளவே இப்போதெல்லாம் பீ.எச்.டி. தேவை. ஒரு சிறிய குழுவுக்குத்தான் புரியும் என்ற நிலை வந்துவிட்டது. இலக்கியத்திற்கான நோபல் பரிசுக்கான கதையே வேறு. அந்த நாட்டவருக்கே 'அட இந்தாளுக்கா? தெருக்கோடில பார்ல தண்ணி அடிச்சிட்டு இருந்தானே, இவனுக்கா?க்வனிக்காம இருந்திட்டோமே,' என்று வியக்கும் அளவுக்குப் பேர் தெரியாத மொத்தமே பத்துப் பேர் படித்து இருக்கும் நாவலை எழுதியவரைத் தூக்கத் தில் எழுப்பி, 'இந்தா தொலை! உனக்கு நோபல்' என்று அறிவிப்பார்கள். அவரோ கூரியக்காரரிடம் 'பாருப்பா ! அட்ரஸ் சரிதானா? அப்புறம் பிடுங்க மாட்டீர்களே! என்று சந்தேகம் கேட்பார்."

இலக்கியமாக இருந்தால் என்ன சமாதானமாக இருந்தால் என்ன ஆங் சான் சூகியின் கூத்துக்களைப் பார்க்கும் போது சுஜாதா சொன்னது ஆயிரம் வீதம் நிஜம். ●

## குட்டீஸ் பரிசுப் பொதி 39 - முடிவுகள்

விடை : அலெக்ஸாண்டர் கிரகம்பெல்

சரியான பதில் அனுப்பியவர்கள்

**யோ.ஆர்த்திகை** மேலைப்புலோலி [illegible] வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொட்டுக் கடப்பு

படமும் தகவலும் : வே.தபேந்திரன்

கிராமியப் பண்பாட்டின் இழந்துபோன - இழந்து வரும் அடையாளங்களில் பொட்டு, கடப்பு என்பவை குறிப்பிடத்தக்கவை.

வேலி ஒன்றின் கீழ் அரைவாசி பகுதியை வெட்டி விட்டு பாதை வைத்தால் அதாவது புகுந்து போக வழி விட்டால் அது பொட்டு.

அது போல வேலி ஒன்றின் அரைவாசி பகுதியின் மேலே கடந்து போக வழி விட்டு வெட்டினால் அது கடப்பு.

இப்படத்தில் உள்ளது பொட்டு. வட பிரதேச கிராமங்களில் இந்த அமைப்புசாதாரண விடயமாக முன்னர், இருந்தது. கால கதியில் மதில்கள் வளவை பிரிக்க பொட்டு, கடப்பு என்பவை வழக்கொழிந்து வருகின்றன.

உறவு இனிக்கும் போது பொட்டு,கடப்பு தொடர்ந்தது. உறவு கசந்தால் பொட்டு, கடப்பு அடைபட்டது.

போர்க் காலத்தில் ஊரடங்கு நேரத்தில் பிரதான பாதைக்கு போகாமல் பயணிக்க பொட்டு,கடப்பு என்பவை உதவின. உறவை, காதலை வளர்க்கவும் இவை உதவின.

இவற்றுக்கென்ற் பெரும் கதையான வரலாறு உள்ளது.



# யாழ். மணிக்கூட்டு கோபுரம்

யாழ்பாணத்தின் மரபுரிமை மற்றும் அடையாள பண்டமாகவுள்ள முக்கிய கட்டடமாக மணிக்கூட்டு கோபுரம் காணப்படுகின்றது.

இந்த மணிக்கூட்டுக் கோபுரமானது 1877 தொடக்கம் 1884 காலப் பகுதியில் "சேர் ஜேம்ஸ் லோங்டன்" என்பவர் நிர்வகித்துக் கொண்டிருந்தபோது, இங்கு விஜயம் செய்த "றோயல்" குடும்ப அரசரால் இதற்குரிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தக் கோபுரத்தின் வடிவமைப்பு அரசாங்க கட்டட கலைஞர் "சிமித்தர்" என்பவரால் மேற்கொள்ளப்பட்டது.

கட்டடக்கலை மற்றும் யாழ்ப்பாணத்தின் அடையாள உருவாக்கம் சார்ந்து ஒரு முக்கிய கட்டட உருவமாக இதனை கலை வரலாற்றாய்வாளர்கள் கருதுகின்றனர். தொடர்ச்சியாக பேணப்பட வேண்டிய ஒரு கட்டடமாகவும் இது காணப்படுகின்றது.

# புகையிலை

யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தில் நீண்ட காலமாகவே புகையிலைப் பயிர்ச்செய்கை சிறப்பான இடத்தை வகித்து வருகின்றது. பேச்சுத் தமிழில் போயிலை என்று அழைப்பர் இது எப்பொழுது யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதுபற்றிய சரியான தகவல்கள் இல்லை.

எனினும் சுதந்திர யாழ்ப்பாண அரசுக் காலத்தின் இறுதிக் கட்டத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. எனினும் 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், போத்துக்கீசர் காலத்திலேயே உறுதியாக வேரூன்றியிருக்கக் கூடும். எப்படியாயினும், இது யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்துடன் சுமார் 400 ஆண்டுகாலம் இணைந்துள்ளது எனலாம்.

பிற்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட, உருளைக்கிழங்கு உற்பத்தி, திராட்சை உற்பத்தி போன்ற பெருமளவு வருமானம் அளித்த, விவசாயம் சார்ந்த நடவடிக்கைகள் குறுகிய காலத்துக்கு உள்ளாகவே கைவிடப்படவேண்டி ஏற்பட்ட போதிலும், புகையிலைச் செய்கை இன்றுவரை நிலைத்திருப்பது குறிப்பிடத்தக்க ஒரு அம்சம் ஆகும்.

புகையிலைப் பயிர்ச் செய்கையின் அறிமுகம், யாழ்ப்பாணப் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை ஒரு விரும்பத்தக்க அம்சமாக விளங்கியது எனலாம். யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசுகளுக்குக் குறிப்பிடத்தக்க வருவாயை அளித்து வந்த நடவடிக்கைகளான, முத்துக்குளிப்பு, யானை ஏற்றுமதி, சாயவேர் ஏற்றுமதி போலன்றி புகையிலைச் செய்கையானது, மக்கள் மட்டத்தில் பரவலான பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. புகையிலை ஒரு விவசாய உற்பத்திப் பொருளாக மட்டுமன்றி, உள்ளூரிலேயே உருவாக்கப் படக்கூடியதாக இருந்த சுருட்டுக் கைத்தொழில்களுக்கு மூலப்பொருளாகவும் அமைந்தது. இது தொடர்பான வணிக முயற்சிகளிலும் மக்களில் ஒரு பகுதியினர் வருமானம் பெறக்கூடியதாக இருந்தது.

யாழ்ப்பாணத்துக்கு வெளியே இலங்கையின் தென் பகுதிகளுக்கு மட்டுமன்றி, இந்தியாவின் கேரளப் பகுதிகளுக்கும், இந்தோனேசியாவில் இன்று ஜகார்த்தா என்று அழைக்கப்படும் பத்தேவியாவுக்கும், புகையிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. மக்களின் பொருளாதார நிலையைப் பரவலாக உயர்த்தியது மட்டுமன்றி, அரசாங்கமும் வரிகள் மூலம் குறிப்பிடத்தக்க வருமானம் பெற்றது.

இன்று அருகி வரும் தொழிலாக மாறி வரும் பாரம்பரிய புகையிலை பயிரிடுகையும் வாணிபமும் ஆபத்தை எதிர்நோக்குகின்ற அதேவேளை சுதேச கைதொழில்களான பீடி, சுருட்டு முதலானாவையின் கேள்வி குறைந்து போனதால் ஆபத்துக்கு உள்ளாகி உள்ளது.






# நாக விளக்கு

தூண்டாமணி விளக்குகளில் இது ஒரு வகை. மூன்று திரி வைத்து எரிக்கக் கூடியதாக உள்ளது.

நாகபாம்பின் படம் போன்று இதன் பாதப்பகுதி இருப்பதால் இப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. தமிழர் பயன்படுத்திய தொன்மையான விளக்குகளில் இதுவும் ஒன்று.

பொதுவாக தூண்டாமணி விளக்குகள் கொழுக்கிகளில் தொங்கிக் கொண்டிருக்கக்கூடிய வகையிலேயே உருவாக்கப்படுவதாக இருக்க, ஒடுங்கிய பாதத்தில் விழுந்துவிடாது இருக்கக்கூடிய வகையில் அறிவியல் முறையில் இந்த விளக்கு உருவாக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

# கால்தட்டங்கள்



தமிழர் உலோக கைவினைகள் முக்கிய கலை அம்சங்களைக்கொண்ட பாரம்பரியப் பொருள்களாக இருக்கின்றன. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பாவனையில் இருந்த பல்வேறு தேவைகளுக்காக பயன் படும் கால்தட்டங்கள் முக்கியமானவை. இவை அனைத்தும் பித்தளையிலானவை. அழகிய வேலைப்பாடுகள் கொண்டவை.

வட்டவடிவிலான சற்று உயரமான ஆசனத்தில் பொருத்தப்பட்டுள்ள தட்டங்களே கால்தட்டங்கள் என்று அழைக்கப்பட்டன. திருமணம், பூப்புனித நீராட்டுவிழா போன்ற வைபவங்களில் இந்த கால்தட்டங்களின் தேவைகள் பெரிதும் உணரப்படுபவை.

மணமகனுக்கோ, மணமகளுக்கோ, வளர்ந்து விட்ட மங்கை ஒருத்திக்கோ பால் அறுகு வைத்து நீராட்டும் வைபவங்களின்போது பாலையும் அறுகையும் வைப்பதற்குக் கால் தட்டங்களே வீடுகள் தோறும் பாவனையில் இருந்து வந்துள்ளன. புளிக்காப்புச் சார்த்திய பின் இவற்றின் அழகே தனியானது.

இவ்வாறான அழகுமிகு கால்தட்டங்களின் பாவனை இந்நாள்களில் மிக அரிதாகி விட்டது. அரும் பொருள்காட்சியகங்களில் பார்க்க வேண்டிய நிலையில் இன்று கால் தட்டங்கள் இருக்கின்றன.

தென்னிலங்கையில் இருந்து போர் முடிந்த சூழலில் உலோக பொருள்களை சூறையாட வந்தவர்களிடம் இவ்வாறான கலைப் பொருள்களை நம்முடைய மக்கள் விழிப்புணர்வின்றி ஏராளமாக இழந்துவிட்டமை வருத்தம் தரும் ஒன்றாகும். இத்தகைய கலை வேலைப்பாடுகளை, தொன்மையான பொருள்களை பேணுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கட்டுநாயக்காவில் கைகோர்த்த ஜோடிகள்

யாழ்ப்பாணத்தில் இருந்து கச்சேரி வழியாகப் பயணித்தபொழுது எதேச்சையாக நரிக்குண்டுக் குளத்தடியில் ஜேர்மனியப் பிரசைகளைச் சந்திக்க நேர்ந்தது. எந்தவித சத்தமுமின்றி அமைதியாகக் குளத்தடியில் இருந்து சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுடன் புதுவிதி சார்பாக சும்மா பேசலாம் என்று சென்றோம். சிறிது நேரம் அவர்களுடன் சாதாரணமாக பேசினோம். அப்பொழுது அவர்கள் இங்கு வந்ததன் பின்னணி பற்றியும் பேசினார்கள். ஜேர்மனிய நாட்டைச் சேர்ந்த அவர்கள் இங்கு விடுமுறைக்கு வருகைதந்தனர் எனவும் திருமணம் செய்யாத தாங்கள் இருவரும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சந்தித்துக் கொண்டனர் எனவும், பின்னர் விடுமுறையைக் கழிக்க இங்கு வந்ததாகவும் குறிப்பிட்டனர். மதிய உணவு உண்டு விட்டு காலாற அவ்வழி வந்த வேளையில் இயற்கைக் குளக்காட்சி தங்கள் மனதை வருடியதாகவும் அதனால் அவ்விடத்தில் இருந்து சீட்டு விளையாடுவதாகவும் குறிப்பிட்டனர்.

# சூடான வெயிலில் சூடு பறக்கும் விற்பனை



உடலின் வெப்பத்தை தணித்து குளிர்ச்சியாக வைத்துக் கொள்ளாவிடில் பலவித ரோகத்தால் அவதிப்படுவதற்கான சாத்தியம் அதிகம் உண்டு. இதைவிட பல ரோகங்களுக்கு நிவாரணியாகவும் வெள்ளரிக்காய் பயன்படுகிறது.

இயற்கை மிகவும் விசித்திரமானது. ஒரு குழந்தையைப் பெற்ற தாயைப்போல, எம்மைப் பாதுகாப்பாக அரவணைத்து வளர்க்கக் கூடியது. ஒரு தாய் தனது குழந்தைக்கு எந்த நேரத்தில் என்ன தேவை என்பதை கவனித்து நிறைவேற்றுவாளோ, அதே போல இந்த பூமித்தாயும் மனிதனுக்கு தேவையானவற்றை உரிய நேரத்தில் கொடுத்து உதவுகின்ற கருணைமிக்கவள். ஈழத்தை வறட்சி வாட்டும் இந்த வேளையில் வறியவர் கூட உண்டு சூட்டைத் தணிக்கக் கூடியவாறு வெள்ளரிப்பழத்தைப் இயற்கை படைத்திருக்கிறது. வயிறாற உண்டு வெப்பத்தைத் தணித்து உடலையும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

கோடைகாலத்தில் பயன்தரக் கூடியவாறு வெள்ளரி பயிரிடப்படுகிறது.

'ரிக்' வேதத்தில் வெள்ளரியின் சிறப்புக்கள் பேசப்பட்டிருக்கின்றன. மனித குலத்துக்கு அது எவ்வாறு பயன் மிக்கது என்ற குறிப்பும் உண்டு. இது கர்ப்பப்பை பிரச்சினையைத் தீர்க்கும். அடி வயிற்றில் ஏற்படும் சூட்டைத் தணிக்கும். சீரற்ற மாதவிடாயை சீர்செய்யும். தொப்பையைக் குறைக்கும், மலச்சிக்கலைப் போக்கும். பிறப்புறப்பில் ஏற்படும் எரிச்சலைக் குறைக்கும். இவ்வாறான மகத்துவங்களைக் கொண்ட வெள்ளரிப்பழம் தற்போது யாழ்ப்பாணத்தில் வீதியோரங்களையும் சந்தைகளையும் மற்றும் சிறப்பங்காடிகளையும் ஆக்கிரமித்துள்ளது. இதனை மக்கள் முண்டியடித்துக் கொண்டு கொள்வனவு செய்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

# யாழ்ப்பாணம் அறியாத ஐஸ் இளநீர்



வடக்கிலும் கிழக்கிலும் பட்டதாரிகள் வேலை கேட்டு போராடுகின்றனர். போராட்டத்தில் கலந்துகொள்ளாத ஏராளமானோர் வேலையில்லை என்று சொல்லி வீட்டிலேயே இருக்கின்றனர். இப்படி வேலை இல்லை என்று சொல்லி கஷ்டப்படுபவர்களுக்கு சுடச்சுட இலாபத்தை தரும் தொழில் வாய்ப்பு ஒன்றுள்ளது. அது தான் ஐஸ் இளநீர் வியாபாரம். திருகோணமலையின் பல பிரதேசங்களில் இந்த ஐஸ் இளநீர் பிரபலம். இது இன்று வரை யாழ்ப்பாணத்தில் அறிமுகமாகவில்லை. இங்கு இந்த வியாபாரம் ஆரம்பிக்கப்படுமானால் அது பெரும் செல்வாக்கைப் பெறும் என்பதில் சந்தேகமேயில்லை.

வெயில் காலத்தில் அதிகளவில் செயற்கைப் பானங்களைப் பருகிப் பல நோய்களை விலைக்கு வாங்கிக் கொள்கிறார்கள் மக்கள். உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய அத்தகைய செயற்கைப் பானங்களை விட ஐஸ் இளநீர் மிகவும் பயனுள்ளது. இளநீர் தேசிக்காய், சீனி, ஐஸ்கட்டி என்பன சேர்த்து இந்த 'ஐஸ் இளநீர்' தயாரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ரவுண்ட் அப்

# தமிழர்களும் உணவுப் பழக்கமும்

திருச்செந்தூரன்

எம்மவர்களின் தரப்பில் தற்போது மேலைத்தேய மோகம் கணிசமான அளவில் ஊடுருவிக் கிடக்கிறது. எங்கள் கிராமத்துத் தோட்டங்களில் நல்ல இயற்கையான மரக்கறிகள் விளைகின்றன. எங்கள் சந்தைகளிலும் நல்ல உள்ளூர் மரக்கறிகள் கிடைக்கின்றன. ஆனால் சந்தைக்குச் செல்வது கௌரவக் குறைவான ஒன்றாகக் கருத ஆரம்பித்திருக்கின்றோம். பல்தேசியக் கொம்பனிகளினால் இறக்குமதி செய்யப்படும் உணவுகளை நாடியும், தேடியும் ஓடுவதை உயர்வாக எண்ணத்தொடங்கியிருக்கிறோம். நவீன முறையில் பிணத்தைக் கெடாமல் வைத்திருப்பதற்காக மருந்தடித்து பதனிடப்பட்ட உணவுப் பொருள்களை இன்று கொண்டாட ஆரம்பித்திருக்கின்றோம்.

எல்லாவற்றிலும் நாங்கள் இன்று பெருமை பேசுவதை மேன்மையானது என்று கொண்டாட ஆரம்பித்திருக்கின்றோம். இது எம்மவர்கள் அறிவை அடமானம் வைத்தவர்களாக மாறியிருப்பதைக் காட்டுகிறது. அமெரிக்காவில் ஒரு வருடத்துக்கு முன்பு விளைந்த அப்பிளும், தோடம்பழங்களும் பதனிடப்பட்டு குளிரூட்டப்பட்டு ஒன்றரை வருடத்துக்குப் பின்னரே எங்களை வந்து சேர்கின்றன. யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற மக்களுக்கு உணவுப் பொருளும் வெளிநாடுகளிலிருந்து வருகிறது. அவைகளை உண்ணுவதால் வரும் நோய்களுக்கான மருந்தும் வெளிநாடுகளிலிருந்தே வருகிறது. எமது பாரம்பரிய உணவுமுறைகளையும், வாழ்க்கை முறைகளையும் தொலைத்து விட்டு மேலைத்தேய மோகத்தால் உடலுக்கும், உள்ளத்துக்கு ஒவ்வாதவற்றை வேண்டி நிற்பதால் பரிதாபமாக நலம்மிக்க [illegible] விரைவில் [illegible] போகக் கூடும்.



# நல்லூரில் செருப்பு

நல்லூர் கோயில் சுற்றுவட்டாரத்தில் போராட்டக்காரர்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. ஆசாரமற்ற ஆடைகள் அணிந்து கோயிலுக்குள் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தடைகள் யாவுமே தமிழர்களுக்கு மட்டுமே. பெரும்பான்மை இன மக்கள் சுற்றுலாவுக்காக நல்லூருக்கு வருகிறார்கள். இவர்கள் மாலை வேளைகளில் ஆலயத்துக்கு வரும்போது ஆலய முகப்பு மண்டபம் வரை செருப்புக்களுடனேயே வருகிறார்கள். ஆலய முன்றிலிலுள்ள கம்பித் தடையருகே காலணிகளை கழட்டிவிட்டு வரவேண்டும் என்பது விதி. சில தினங்களுக்கு முன்னர் ஒரு மாலை வேளையொன்றில் தென்னிலங்கைவாசிகள் சிலர் செருப்புக்களுடன் உள்நுழைந்தார்கள். கோவில் தேரடி வரை செருப்புடன் வந்தவர்கள் உள் வீதியெல்லாம் செருப்புக்களுடன் உலா வந்தார்கள். அவர்களை எவருமே தட்டிக் கேட்கவில்லை. இந்த வழமை தொடர்வது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னை நீயே அறிவாய் 9




### யாருக்கு எவ்வகை சந்தைப்படுத்தல்

இந்த எல்லா உத்திகளும் எல்லோருக்கும் ஒரே மாதிரியான பலன்களை அளித்துவிடாது. பொருள், தொழிலின் வ்கை மற்றும் முதலீடு ஆகியவற்றுக்கேற்ப சந்தைப்படுத்தல் உத்திகளும் மாறும். புதிதாகத் தொழில் தொடங்குபவர்கள் முதலில் தங்களுடைய வருமானத்தை நிலைப்படுத்திக்கொள்ளும் வகையில் சந்தைப்படுத்த வேண்டும். குறைவான வாடிக்கையாளர்களாக இருந்தாலும் அவர்களைத் தக்கவைத்துக் கொள்ளும் வகையில் நேரடி சந்தைப்படுத்தல் உத்திகளைக் கையாள வேண்டும். நண்பர்கள், அருகாமையில் இருப்பவர்களை தங்களின் வாடிக்கையாளர்களாக முதலில் தக்க வைக்க வேண்டும். அதன் பிறகு அடுத்தடுத்த சந்தைப்படுத்தல் உத்திகளைப் பயன்படுத்தலாம்.

தொழில் தொடங்கி சில வருடங்கள் ஆகியிருந்தால், தங்களின் விற்பனையை அதிகரிக்க நேரடி சந்தைப்படுத்தலுடன் சேர்த்து, மறைமுக மற்றும் 'ஒன்லைன்' சந்தைப்படுத்தல் உத்திகளைப் பயன்படுத்தலாம். பொருட்களை ஒன்லைனில் விற்றல், பிற உற்பத்திகளுடன் சேர்த்து பொருட்களை விற்றல் என்பவற்றைச் செய்யலாம்.

வெற்றிகரமான தொழில் முனைவோராக ஒருவர் திகழ வேண்டுமென்றால் அவர் முதலில் தன்னை ஒரு முழுமையான, அசல் தொழில் அதிபராக நினைத்துக்கொள்ள வேண்டும். அந்த நினைப்பில் சிறு தயக்கமோ, பயமோ இருந்தால்கூட வெற்றிகரமான தொழில் அதிபராக நம்மால் இருக்க முடியாது. உறுதியான எண்ணமும் நம்பிக்கையுமே நமக்கு நமக்கு சிறந்த மேலாண்மை அறிவைத் தரும்.

இது போட்டி நிறைந்த உலகம். இன்றைய சூழ்நிலையில் யார் வேண்டுமானாலும் எந்தத் தொழிலையும் தொடங்கி செய்ய முடியும். எனவே, போட்டிகளைச் சமாளித்து ஒரு தொழிலை சாம்ராஜ்யமாக உருவாக்குவதற்கு மேலாண்மை செய்யும் திறமை மிகவும் அவசியம்.

தொழிலை நடத்துபவருக்கு எவ்வளவு திறமை இருந்தாலும் மேலாண்மை செய்யும் திறமை இல்லாவிட்டால், அனைத்தும் வீண்தான். பல தொழில்கள் வேகவேகமாகத் துவங்கப்பட்டு, வெகு சீக்கிரமே முடங்கிப் போவதற்கு முக்கிய காரணம் மேலாண்மை செய்யும் திறமை இல்லாததுதான். தொழிலில் வெற்றி அடைய வேண்டுமென்றால், ஒருவர் மேலாண்மை செய்ய வேண்டிய ஏழு முக்கியமான விடயங்கள் உள்ளன. அவற்றை '7M மனேஜ்மெண்ட்' என்று சொல்வார்கள். அவை,

1. Man Power - ஊழியர்கள்
2. Material - மூலப்பொருட்கள்
3. Machine - இயந்திரங்கள்
4. Method - தொழில் செயல்முறை
5. Measurement - அளவுகோல்கள், இலக்குகள்
6. Marketing - சந்தைப்படுத்துதல்
7. Money - பணம்

இந்த ஏழு விடயங்களைப் பற்றியும் இப்போது சுருக்கமாகச் சொல்கிறேன்

### ஊழியர்கள்

ஒரு தொழிலின் ஆணிவேர் அதை உருவாக்கிச் செயற்படுத்தும் தொழில்முனைவோர் என்றால், அந்த ஆணிவேரைத் தாங்கிப்பிடிக்கும் கிளை வேர்கள் ஊழியர்கள்தான். ஊழியர்களை மனித வளம் என்றும் தொழிலில் குறிப்பிடுவார்கள்.

ஊழியர்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கான தேர்வை நடத்துவது, தேர்ந்தெடுப்பது, பயிற்சி கொடுப்பது, அவர்களின் திறமையை ஊக்குவித்து, அதற்கேற்ப பதவி உயர்வு அல்லது சம்பள உயர்வு வழங்குவது மற்றும் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது எனப் பலவற்றைக் கவனத்தில்கொள்ள வேண்டும். திறமையான ஊழியர் ஒருவரைத் தக்க வைத்துக் கொள்வதும், திறமையற்ற ஊழியரை வளர்க்க முயற்சிப்பதும், அப்படி முடியாதபட்சத்தில் அவரைப் பாரபட்சமின்றி வெளியேற்றுவதும்தான் சிறந்த ஊழியர் மேலாண்மை ஆகும்.

### மூலப்பொருட்கள்

நம்முடைய தொழிலுக்குத் தேவையான பொருட்களை மேலாண்மை செய்யத் தெரியா விட்டால், மிகப் பெரிய நஷ்டத்தைச் சந்திக்க வேண்டிவரும். தொழில் செய்பவர்கள் பெரும்பாலும் நஷ்டமடைவது பொருட்களை மேலாண்மை செய்யத் தெரியாததனால்தான். நம்முடைய தொழில் அளவு என்ன, இலக்கு என்ன, செயல்முறை என்ன என்பதைத் திட்டமிட்டு அதற்கேற்ப பொருட்களை கொள்முதல் செய்து, உற்பத்தியைத் திட்டமிட வேண்டும்.

பொருளை எங்கு வாங்குவது, எப்படி வாங்குவது, எவ்வளவுக்கு வாங்குவது, எவ்வளவு உற்பத்தி செய்வது, விற்காமல் திரும்ப வந்ததை என்ன செய்வது ஆகிய அனைத்துக் கேள்விகளுக்கும் தெளிவான பதில்களைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். டிமாண்ட் மற்றும் சப்ளை இரண்டையும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். அதற்கேற்ப கொள்முதல் மற்றும் உற்பத்தியைத் திட்டமிட்டு, பொருட்கள் வீணாகாமல் பார்த்துக்கொண்டாலே பிசினஸில் ஜெயித்த மாதிரிதான். முடிந்தவரை மூலப் பொருட்கள் கிடைக்கும் இடத்துக்கு அருகிலேயே தொழில் செய்ய வேண்டும்.

### இயந்திரங்கள்

நம்முடைய உற்பத்தி முறைக்கேற்ற இயந்திரங்களை வாங்க வேண்டும். அந்த இயந்திரங்கள் நீண்டகாலத்துக்கு நீடித்து உழைக்கும் வகையில் தரமானவையாக இருக்க வேண்டும். நவீன தொழில்நுட்பம் உள்ளவையாக இருக்க வேண்டும். நம்முடைய உற்பத்தி அளவுக்கேற்பவே இயந்திரங்களை வாங்க வேண்டும்.

ஆரம்பத்திலேயே இயந்திரத்துக்காக அதிகம் செலவு செய்து, முதலீட்டை வீணாக்கக்கூடாது. இயந்திரங்களைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும். தேய்மானம் ஆகாமல், விபத்து நடக்காமல் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை களையும் செய்ய வேண்டும். இயந்திரங்களைக் கையாள்வதற்கு நல்ல அனுபவம் பெற்றவர்களை மட்டுமே நியமிக்க வேண்டும். அவ்வப்போது இயந்திரங்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்கவும், சோதனை செய்யவும் வேண்டும்.

### தொழில் செயல்முறை

நம்முடைய தொழிலை எப்படிச் செய்ய வேண்டும் என்பதில்தான் அதிக நேரத்தை நாம் செலவிட வேண்டும். ஏனெனில் 'Doing Business is an Art' என்பார்கள். திட்டங்கள், கொள்கைகள், செயல்முறைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதே தொழில் செயல்முறை. நம்முடைய தொழில் உற்பத்தியா, சேவையா, உள்நாட்டில் தொழில் செய்யப் போகிறோமா அல்லது ஏற்றுமதி செய்யப் போகிறோமா, யார் யாருக்கு என்ன வேலை, யார் யாரிடம் அறிக்கையிட வேண்டும் என நம்முடைய தொழில் செயல்முறையைச் சரியாகத் திட்டமிட்டுக் கட்டமைத்துவிட்டால் போதும், நல்ல முடிவுகளை நம்மால் பெற முடியும்.

### அளவுகோல்கள், இலக்குகள்

முதலீடு எவ்வளவு, எவ்வளவு பணியாளர்கள் தேவை, கொள்முதல் எவ்வளவு, உற்பத்தி எவ்வளவு, விற்பனை எவ்வளவு, எந்த இடத்தில் எவ்வளவு விற்பனை, விளம்பரத்துக்கு எவ்வளவு செலவு, இலக்கு என்ன என தொழிலின் ஒவ்வொரு விடயங்களையும் தரவுகளாக, அளவுகோல்களாகத் தயார் செய்தால்தான் நம்முடைய தொழிலை நம்மால் புரிந்துகொள்ள முடியும். பின்னர் அவற்றிலிருந்து கிடைக்கும் முடிவுகளை வைத்து தொழில் செயற்பாடுகளைத் திட்டமிட வேண்டும். தவறுகளைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

### சந்தைப்படுத்துதல்

ஒரு தொழிலில் இருக்கும் ஆதாரங்களை வைத்து, அதை மேலும் வளர்க்கும் கலைதான் சந்தைப்படுத்தல். விளம்பரம், விற்பனை, வாடிக்கையாளர் சேவை ஆகிய பல விடயங்களை உள்ளடக்கியது சந்தைப்படுத்தல். தொழிலின் நிதி நிலைக்கு ஏற்ப சந்தைப்படுத்தல் செயல்பாடுகள் இருக்க வேண்டும். அவசியமான, சரியான சந்தைப்படுத்தல் உத்திகளை மட்டுமே திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டும். சந்தைப்படுத்தல் செயற்பாடுகளைக் கண்காணித்து அவற்றின் முடிவுகளை ஆராய்ந்து, அதற்கேற்ப மாற்றங்களையும் செய்ய வேண்டும். அப்போதுதான் செலவுகள் தொழில் செய்பவரின் கையைக் கடிக்காமல் இருக்கும்.

### பணம்

பணம்தான் தொழிலுக்கு மிக முக்கியமான விற்றமின். தொழிலை நடத்த தினம் தினம் பணம் தேவை. மேலே உள்ள ஆறு விடயங்களுக்கும் பணம் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. இயங்கு மூலதனம் (Working capital) இல்லாமல் தொழிலை நடத்த முடியாது. செலவுகளைக் குறைத்து, வருமானத்தை அதிகரிக்கும் வகையில் பணத்தை மேலாண்மை செய்யத் தெரிந்திருக்க வேண்டும். அதற்காகத் தேவையானவற்றுக்கு பணம் செலவு செய்யாமலும் இருக்கக்கூடாது. அவசியமான செலவுகளைச் செய்ய வேண்டும், ஆனால், செலவு செய்த பணத்துக்கு மேல் நமக்கு வருமானம் கிடைக்க வேண்டும். தொழிலில் ஒவ்வொரு ரூபாவும் முக்கியம் என்பதை மறந்துவிடக்கூடாது.

இந்த ஏழு விடயங்களிலும் திட்டமிடல், செயல்படுத்துதல், வழிநடத்துதல், இலக்கை அடைதல், இறுதியில் முடிவுகளை ஆராய்தல், அடுத்து மீண்டும் திட்டமிடல் என்ற சுழற்சி நடவடிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். அப்படிக் கடைப்பிடித்தால் தொழிலில் வெற்றி நிச்சயம். (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிமாற்றங்கள் சாத்தியமா?





இங்கிலாந்தில் நடைபெற்று வரும் பிறீமியர் லீக் உதைபந்தாட்டப் போட்டிகள் இறுதிக்கட்டத்தை நெருங்கி உள்ள நிலையில், அடுத்த பருவகாலத்துக்கான போட்டிகளைக் கருத்திற்கொண்டு வீரர்களைத் தெரிவு செய்வதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. அதிலும் செல்சி அணியின் முகாமையாளரான அன்ரனியோ கொன்ரே எவற்றன் கழக வீரரான றோமலு லுகாகு, ஆர்சனல் கழக வீரரான அலெக்சிஸ் சாங்செஸ், றியல் மட்றிட் கழக வீரரான அல்வாரோ மொறாட்டா, சவுத்தாம்ரன் கழக வீரரான வேர்ஜில் வன் டிக், மொனாகோ வீரரான ரிமௌ பகயோகோ போன்ற வீரர்களை எப்படியாவது அணியில் உள்வாங்க வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தார்.

ஆனாலும் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கிறிஸ்ரல் பலஸ் அணியுடனான போட்டியில் 2 : 1 என்ற கோல் கணக்கில் செல்சி தோல்வி அடைந்ததனால் வீரர்களின் ஒப்பந்தம் குறித்து தற்போதைக்கு எதுவும் முடிவு செய்ய வேண்டாம் என்று அணி நிர்வாகத்திடம் அவர் தெரிவித்துள்ளார். தற்போது 30 போட்டிகளின் முடிவில் 72 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கும் செல்சி அணி இன்னும் 18 புள்ளிகளைப் பெற்றால் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே தற்போதைக்கு அதில் மட்டும் கவனம் செலுத்துவதற்காக இத்தகைய முடிவை அவர் எடுத்துள்ளார்.

அதேசமயம் றியல் மட்றிட் அணி வீரர்களில் ஒருவரான கொலம்பியாவின் ஜேம்ஸ் றொட்றிக்ஸ் நடப்புப் பருவ காலத்தில் சொல்லிக்கொள்ளும் படியான ஆட்டத்தை வெளிப்படுத்தாததால் அவருடனான ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அணியின் முகாமையாளரான சினெடின் சிடேன் எண்ணியுள்ளார். 2014ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பாகச் செயற்பட்டதால் அன்றைய காலப்பகுதியில் 68 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்டுகளுக்கு அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார்.

இன்று அதே தொகைக்கு அவரை விடுவித்து செல்சியின் 26 வயது மத்திய களவீரரான ஈடன் ஹசாட்டை பெற்றுக்கொள்ள றியல் மட்றிட் நிர்வாகம் தயாராகி வருவதாகத் தெரிகிறது. ஈடன் ஹசாரே செல்சி அணி முகாமையாளரான அன்ரனியோ கொன்ரேயின் நம்பிக்கைக்குரிய வீரர்களில் ஒருவராக விளங்குவதனாலும் றொட்றிக்ஸின் ஆட்டத்திறன் குறித்து தற்போது விமர்சனம் எழுந்துள்ள நிலையிலும் மேற்படி வீரர்கள் பரிமாற்ற ஒப்பந்தத்துக்கு செல்சி அணி சம்மதிக்குமா என்பது சந்தேகமே.

# விளையாட்டு வினையாகியது

கடந்த வாரம் காஷ்மீர் மாநிலத்தில் இரு உள்ளூர் கழகங்களுக்கிடையில், நடைபெற்ற கிரிக்கெட் போட்டி ஒன்று மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. மத்திய காஷ்மீரில் அமைந்துள்ள கண்டேர்பால் மாவட்டத்தில் கடந்த ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெற்ற இந்தப் போட்டியில் பாபா தர்யா உத்தின் கழக வீரர்கள் பாகிஸ்தான் சீருடை அணிந்தும் மற்றைய கழகத்தினர் (பெயர் தெரியவரவில்லை.) அவர்கள் வெள்ளைச் சீருடை அணிந்து இந்திய அணி என்ற பேரிலும் விளையாடி உள்ளனர். இதில் பாகிஸ்தான் சீருடை அணிந்த வீரர்கள் போட்டி தொடங்கும் போது பாகிஸ்தான் தேசிய கீதத்தைப் பாடியுள்ளனர். இது வீடியோவாகப் பதிவு செய்யப்பட்டு தற்போது சமூகவலைத்தளமான யூரியுப்பில் பதிவேற்றப்பட்டுள்ளது.

இந்த வீடியோ வைரலானதைத் தொடர்ந்து உள்ளூர் பொலிஸாரினால் பாகிஸ்தான் சீருடை அணிந்து விளையாடிய வீரர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுகுறித்து பொலிஸார் 'இருநாடுகள் போட்டியில் கலந்து கொள்ளும்பொழுது தேசிய கீதம் பாடுவதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் உள்ளூர் கழகங்கள் விளையாடும் பொழுது பிறிதொரு நாட்டின் தேசிய கீதத்தை பாடுவது ஏற்புடையதாகத் தோன்றவில்லை' எனத் தெரிவித்துள்ளனர். வீரர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, குறித்த குடியிருப்பைச் சேர்ந்தவர்களால் அவர்களை விடுதலை செய்யுமாறு பேராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போட்டி நடைபெற்ற தினம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சுரங்கப்பாதை ஒன்றை அதிகாரபூர்வமாகத் திறந்து வைப்பதற்காக காஷ்மீருக்கு வருகை தந்துள்ளார். எனவே அவரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே பாபா தர்யா உத்தின் கழக வீரர்கள் இவ்வாறு நடந்து கொண்டார்களா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. ஆனால் பாபா தர்யா உத்தின் கழக வீரர்கள் 'நாங்கள் எங்கள் அணியை வித்தியாசமாகக் காட்ட எண்ணினோம். அத்தோடு காஷ்மீர் பிரச்சினையையும் நாம் மறக்கவில்லை என்பதைக் காட்டுவதற்காகவே இந்த விடயத்தை தெரிவு செய்ததாக தெரிவித்துள்ளனர்.

இந்தப்பிரச்சினை தற்போது பூதாகரமாக்கப்பட்டுள்ளதனால் இது குறித்து விசாரிப்பதற்காக தீவிரவாதத்துக்கெதிரான தேசிய புலனாய்வு ஏஜென்ஸி (NIA) குழுவினர் டெல்லியில் இருந்து காஷ்மீருக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.






தொகுப்பு: சி.விமலன்



இந்தியா விளையாடும்போது இந்திய ரசிகர்கள்



ஐ.பி.எல்.போட்டிகளின்போது இந்திய ரசிகர்கள்

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 15.04.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org